விலை
ரூபா 20

பக்கங்கள்
28

# உதயன்

சுடர் 31 | கதிர் 155 | வள்ளுவர் ஆண்டு 2047 | சித்திரை 16, வெள்ளிக்கிழமை 29.04.2016

கொவிசெத
அதிக கோடீஸ்வரர்களை
உருவாக்கும் கொவிசெத
நம்பிக்கையுடன் வாங்குங்கள்

# வடக்கு அரசின் தீர்வுத் திட்டம் நேற்று அரசமைப்புச் சபைக்கு

## முதல் முன்மொழிவை அதன் தலைவரிடம் கையளித்தார் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன்

"புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக, முழு நாடாளுமன்றமும் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்ட பின்னர், சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது தீர்வுத் திட்ட முன்மொழிவு இதுவாகும்."

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29
வடக்கு அரசின் தீர்வுத் திட்டம், அரசமைப்பு நிர்ணய சபையின் தலைவரும் சபாநாயகருமான கரு ஜெயசூரியவிடம் நேற்று மதியம் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் திடீரெனக் கையளிக்கப்பட்டுள்ளது. நாட்டைப் பிரிப்பதற்காக அல்ல, நாட்டை ஒன்றுபடுத்துவதற்காகவே இதனைக் கையளிக்கின்றோம் எனத் தெரிவித்து, சபாநாயகரிடம் முதலமைச்சர் கையளித்தார்.
வடக்கு அரசின் தீர்வுத் திட்ட வரைவை நாளை சனிக்கிழமை, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் கையளித்து, அதனை வெளியிடுவதாகத் திட்டமிட்டிருந்த நிலையிலேயே, சபாநாயகரிடம் நேற்று பக். 24

## சுன்னாகம் நீரில் எண்ணெய்க் கசிவு; ஆய்வறிக்கைகளில் முரண்பாடுகள்

### மீண்டும் ஆய்வை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் ஹக்கீம் பணிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29
சுன்னாகம் நிலத்தடி நீர் எண்ணெய்க் கசிவு தொடர்பில் வடக்கு மாகாண சபை மேற்கொண்ட ஆய்வு முடிவுகளுக்கும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நடத்திய ஆய்வு முடிவுகளுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.
இது தொடர்பில் மேலும் ஆய்வுகளை மேற்கொண்டு சரியான தரவுகளையும், முடிவுகளையும் உள்ளடக்கிய அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு அமைச்சர் ஹக்கீம் பக். 24

## முல்லையில் நேற்றும் காணி பறிப்பு முயற்சி

### கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டது



முல்லைத்தீவு. ஏப். 29
முல்லைத்தீவில் மூன்றாவது நாளாக நேற்றும் இராணுவத் தேவைக்காகப் பொதுமக்களின் காணிகளை அபகரிக்கும் முயற்சி முறியடிக்கப்பட்டது.
நேற்றையதினம் சுதந்திரபுரம் மற்றும் நாயாறுப் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் காணிகளை இராணுவத்தினருக்காக அபகரிக்க எடுக்கப்பட்ட முயற்சி பொதுமக்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் தலையீட்டினால் பக். 06

## திடீர்க் கைதுகள் தொடர்பில் அறிக்கை வரவில்லையாம்

### கூறுகின்றார் பாதுகாப்புச் செயலர்



கொழும்பு, ஏப். 29
பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் திடீர்க் கைதுகள் தொடர்பில் தமக்கு இன்னமும் அறிக்கை கிடைக்கப்பெறவில்லை என்று, பக். 23

## விக்கி–மைத்திரி சந்திப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29
வடக்கு மாகாணக் காணி விவகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கும், வடக்கு மாகாண பக். 23

## மோடி அழைப்பை ஏற்றார் மைத்திரி

கொழும்பு, ஏப்.29
இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் உஜைனில் எதிர்வரும் மே 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பக். 25

## நீதிமன்று முன் வாளால் வெட்டிய ஐவருக்கு 4 வருடக் கடூழியச் சிறை

### இரண்டரை லட்சம் இழப்பீடும் செலுத்துமாறு மேலதிக நீதிவான் சதீஸ்தரன் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29
நீதிமன்றுக்குச் சென்று திரும்பியவர்களை வாளால் வெட்டிக் காயப்படுத்தியதுடன், அவர்களது மோட்டார் சைக்கிள்களைக் கொள்ளையடித்த 5 பேருக்குத் தலா 4 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார் மல்லாகம் மேலதிக பக். 24

## சிவகரன் பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், ஏப். 29
பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட தமிழரசுக் கட்சியைச் பக். 24

## முல்லைத்தீவுக் கடலில் 2 மீனவரைக் காணோம்

### அவர்களின் படகு பருத்தித்துறைக் கடற்பரப்பில் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 29
முல்லைத்தீவுக் கடலில் நேற்று முன்தினம் புதன்கிழமை மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்கள் நேற்று மாலை வரை கரை திரும்பவில்லை.
எனினும் அவர்கள் மீன்பிடிக்கச் சென்ற படகு, கடலில் மூழ்கும் நிலையிலிருந்து மீட்கப்பட்டு கரைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் முல்லைத்தீவு கள்ளப்பாடு கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளது. திருகோணமலையைச் சேர்ந்த உ.குமரேஸ் (வயது -22), ஜெ. சயந்தன் (வயது -23) ஆகிய இளைஞர்களே இவ்வாறு பக். 25

## தமிழீழ வைப்பக தங்கப் புதையல் தோண்டும் பணிகள் ஒத்திவைப்பு

### பெரிய பைக்கோ இயந்திரம் இல்லாமையால்



முல்லைத்தீவு, ஏப். 29
பெரிய அளவிலான பைக்கோ இயந்திரம் கிடைக்காமையினால் புதுக்குடியிருப்பில் மேற்கொள்ளப்பட்ட தமிழீழ வைப்பகத்தின் தங்கப் புதையல் மீட்கும் நடவடிக்கை இடைநிறுத்தப் பக். 23

## மகிந்தவுக்கு மீள உயிர் கொடுக்கிறாராம் விக்கி

### வடக்குத் தீர்மானத்தை நிராகரிக்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஏப்.29
இணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்தில் சமஷ்டி கோரி, வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தைத் தமது கட்சி பக். 24

NLB
சம்பத் ரேகா
அதிர்ஷ்டத்தின் ஸ்வர்ண ரேகை
இன்றைய சுப்பர் பரிசு
ரூ. 11,258,164.00
சம்பத் ரேகா
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களின் மனம் புண்படுமாறு நடக்கேன்

## அகில இலங்கை இந்து மாமன்றத்திடம் வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரே உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.29
வடக்கு மாகாண மக்களின் மனதைப் புண்படுத்தும் வகையில் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளமாட்டேன் - இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே உறுதியளித்துள்ளார் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தினருக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன்கிழமை, ஆளுநரின் கொழும்பு அலுவலகத்தில் நடைபெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு உறுதிமொழி வழங்கினார் என்று இந்து மாமன்றம் குறிப்பிட்டுள்ளது.

நயினாதீவுக் கடலில் நிர்மாணிக்கப்படவுள்ள புத்தர் சிலை இந்து மக்களை மதரீதியாகப் பாதிக்கும். இதனால் இனநல்லுறவுகேள் விக்குரியதாக இருக்கும் என்று இந்து மாமன்றத்தினர் ஆளு நருக்குச் சுட்டிக்காட்டினர்.

ஆளுநர் என்ற வகையில் வடமாகாண மக்களின் சமய விழுமியங்கள், கலாசாரங்கள் என்பவற்றை மேம்படச் செய்ய உறுதுணையாக இருக்கவேண்டுமென்பதுடன் பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாக்கும் அதேநேரம் ஏனைய மதங்களையும் பாதுகாப்பது கடமையாகுமெனவும் ஆளுநருக்கு எடுத்துரைக்கப்பட்டது.

அவற்றைச் செவிமடுத்த ஆளுநர் ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் வடமாகாண மக்களின் மனதைப் புண்படுத்தும் எவ்வகையான நடவடிக்கையையும் மேற்கொள்ள மாட்டேன் - என்றும் கூறினார்.

பிறமதத்தினரின் மத வழிபாட்டையும் அவர்களது கலாசாரத்தையும் பேணும் வகையிலுமே தனது நடவடிக்கைகள் அமையும் என்றும் நயினாதீவுக் கடலில் பெரும் புத்தர் சிலையை நிறுவுவது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

தனது நடவடிக்கைகள் எவ்விதத்திலும் பக்கச்சார்பானதாகவோ அன்றி வடமாகாண மக்களின் அபிலாசைகளை புறக்கணிப்பதாகவோ இருக்கமாட்டாதெனவும் உறுதியளித்தார் - என்று இந்து மாமன்றம் தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

(ற-ஜ-5)

## வீட்டுத் திட்டப் பயனாளிகளின் விவரம் மாவட்ட செயலகத்துக்கு

சாவகச்சேரி,ஏப்.29
தென்மராட்சிப் பிரதேசத்தில் மீள் குடியேற்ற அமைச்சால் சுமார் 8 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ள வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் இறுதிப் பட்டியல் மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அமைச்சால் தென்மராட்சி பிரதேசத்தில் 300 வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு அறிவிக்கப்பட்டபோதிலும், தகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 289 பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் பிரதேச செயலகம், கிராம அலுவலர் அலுவலகங்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர் அலுவலகங்கள் போன்றவற்றில் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்தத் தெரிவு தொடர்பான முறைப்பாடுகளுக்கு ஆட்சேபனைகள் இருப்பின் 14 தினங்களுக்குள் எழுத்து மூலம் அறிவிக்குமாறும் பிரதேச செயலரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

தெரிவில் காணப்பட்ட சில குறைபாடுகள் ஆட்சேபனைகள் எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து பிரதேச செயலர் மற்றும் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் அந் தந்தப் பிரிவுகளில் மக்கள் குறைகேள் சேவைகளை நடத்தி அவற்றின் மூலம் தீர்வு காணப்பட்டு இறுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் மேலதிக நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போரால் பாதிக்கப்பட்டு இதுவரை வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் காணப்படும் வீடுகளைப் புனரமைக்க தலா இரண்டு லட்சம் ரூபா வீதம் வழங்குவதற்கென 180 பயனாளிகளின் பெயர்ப்பட்டியலும் இறுதித் தெரிவுக்காக மாவட்டச்செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-9)

## பாலஸ்தாபனம்

வட்டுக்கோட்டை, ஏப்.29
சங்கரத்தை கரந்தை குளவத்தை சாத்திரியார்மடம் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயத்தின் பாலஸ்தாபனம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் 10.50 மணிவரை இடம்பெறவுள்ளது.

(ற-ஜ)

## உரையாடல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.29
சிந்தனைக்கூடம் யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் உரையாடல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இல. 121, 2 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சிந்தனைக்கூட கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என்று சிந்தனைக்கூடப் பணிப்பாளர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர் அன்றும், இன்றும் (வேர்களும் கிளைகளும்) எனும் தலைப்பிலான இந்த உரையாடலை கனடா ரொறன்டோ பல்கலைக்கழகத்தில் இறையியல் பேராசிரியராகவும் இறையியல் துறைத் தலைவராகவும் பணியாற்றும் வண.பிதா பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன் நிகழ்த்தவுள்ளார். (ற-ஜ-ரி)

## சந்தேகத்தின் பேரில் 27 இளைஞர்கள் கைது

### குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணம், ஏப். 29
யாழ்ப்பாணத்தில் 27 இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

பல்வேறு இடங்களிலும் இடம்பெற்ற குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

குருநகரில் சில நாள்களுக்கு முன்னர் நிகழ்வு ஒன்றில் இரு தரப்பினருக்கிடையே ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறியதால், அதில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மட்டும் 11 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர். அவர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு குற்றச்சாட்டுகளில் சந்தேகத்தின் பேரில் சுமார் 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்த காரணத்தினால், வீதிகளில் அநாவசியமாக நிற்பவர்கள், திருட்டு மற்றும் பெண்களுடனான சேட்டைகளில் ஈடுபடுபவர்கள் எனப் பலர் தொடர்ந்தும் கைதுசெய்யப்பட்டு வருகின்றார்கள்.

யாழ். பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதிகளில் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான விசேட பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டு, அந்தக் குழுவினர் பல பகுதிகளிலும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், சோதனைகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இவ்வாறு சோதனை மேற்கொள்ளும்போது, சந்தேகத்துக்கிடமாக காணப்பட்டால், கைது செய்யப்படுவதுடன் நீதிமன்றில் முற்படுத்தப்படுகின்றனர்.

இவ்வாறு கடந்த ஒரு வாரத்தில் சுமார் 50 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், நீதிமன்றினால் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். (த-வ-4-103-106)

## ஒன்றிணைந்த பொருளாதார வலயத்தை பிரகடனப்படுத்துவதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு, ஏப்.29
ஐரோப்பா, சீனா, இந்தியா மற்றும் சிங்கப்பூரை ஒருங்கிணைத்து ஒன்றிணைந்த பொருளாதார வலயமொன்றைப் பிரகடனப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்தப் பொருளாதார வலயம் சம்பந்தமான அரசின் தீர்மானம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் எதிர்வரும் ஜூன் மாதத்தில் நாடாளுமன்றத்தில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

ஐரோப்பாவின் மின் உற்பத்தி ஏற்றுமதித் தடை நீக்கப்பட்டுள்ளதையடுத்து, மேற்குறிப்பிட்ட பொருளாதார வலயத்துக்கு, ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 28 நாடுகளையும் இணைத்துக் கொள்வதற்கு இருந்துள்ள தடை நீங்கியுள்ளது என்று அபிவிருத்தி உபாய மார்க்கங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இந்தியாவுடன் கைச்சாத்திடப்படவுள்ள எட்கா ஒப்பந்தத்தின் மூலம் நிச்சயமாக இந்தியாவும் புதிய பொருளாதார வலயத்துக்குள் வந்து விடும்.

இதற்கு மேலதிகமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடுகளும், சீனா மற்றும் சிங்கப்பூரும் பொருளாதார வலயத்துக்குள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

இந்தப் புதிய பொருளாதார வலயம் பிரகடனப்படுத்தப்படுவதுடன், இலங்கை உலகின் இரண்டாவது மிகப்பெரிய வர்த்தக சந்தைக்குள் பிரவேசிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்றும் அமைச்சர் மலிக்சமர விக்கிரம தெரிவித்துள்ளார்.

இலங்கை இணைத்துக் கொள்ளும் புதிய பொருளாதார வலயத்துள் இந்த நாட்டின் மக்களுக்கு அமெரிக்க டொலர்கள், யூரோக்கள், சிங்கப்பூர் டொலர்கள், இந்திய ரூபாக்கள், சீனாவின் யுவான்கள் போன்ற சர்வதேச பணத்தைப் பயன்படுத்தி நாட்டின் உள்ளேயே கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளத்தக்க வாய்ப்பும் கிட்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-22)

## கல்வித் தகைமைகள் இல்லாமல் கல்விப் பிரிவில் நியமனங்கள்

### கல்வி அமைச்சிடம் விசாரணைக்கு கோரிக்கை

கொழும்பு, ஏப்.29
கல்வி சார்ந்த தகைமைகள் எதுவும் இல்லாது, அரசியல் செல்வாக்கில் மட்டும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கல்விப் பிரிவின், அனைத்து நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பாக உடனடியாக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை கல்வியமைச்சிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளாக அனைத்து நியதிகள், விதிமுறைகளும் மீறப்பட்டு அரசியல் செல்வாக்கில் மட்டும் கணிசமான தரப்பினருக்கு கல்வித்துறையில் பதவி உயர்வுகளும், நியமனங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கமைய சிறப்புக் குழுவை நியமித்து இது சம்பந்தமாக ஆராய்ந்து கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

எதிர்வரும் சில தினங்களுள் இது தொடர்பாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தைச் சந்தித்து, இந்த விடயங்கள் தொடர்பாக தெரியப்படுத்தவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-22)

# After O\L or A\L

## COMPUTER COURSES

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpack, M.Y.O.B

Diploma in **Video Editing** — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio.

Diploma in **Web Designing & Development**

Advanced Diploma in **Hardware & Networking**

**Java** (for Developers) | C, C++, V.B.NET, PHP

தகவல் தொழில்நுட்ப கல்விக்கு முழு மையான கற்கை நெறி

DiTEC

DIPLOMA IN INFORMATION TECHNOLOGY

10/05/2016 க்கு முதல் பதிவு செய்வோருக்கு 20%

DMI COMPUTER EDUCATION

Diploma in **Auto CAD** 2D & 3DModeling

புதிய பிரிவுகள் ஆரம்பம்- சனி, ஞாயிறு 9.30

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

# DMI COMPUTER EDUCATION

| No.113, கஸ்தூரியார் வீதி, (சமலஸ் தோஸ் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19, A9 வீதி, குறுந்துபுரம் கிளிநொச்சி Tel.: 021-228 5655 |
|---|---|---|---|---|


# தேர்தல் ஆணைக்குழு

## 2016ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்வதற்கான தேருநர் கணக்கெடுப்பு

* வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற தேருநர் இடாப்புக்களின் மீளாய்வு, 2016 ஆம் ஆண்டுக்கான 2016.05.16 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

*தேருநர்கள் கணக்கெடுப்பின்போது தகைமையுள்ள பிரசைகள் விடுபடாதவாறு செயலாற்றுவதன் தேவைப்பாட்டை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பிரசைகள் அமைப்புக்களின் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுவதோடு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கையில் மகளிர் பிரதிநிதித்துவத்தை வலுவூட்டுவது தொடர்பான முன் மொழிவு சார்பான கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக பிரசைகள் அமைப் புக்களின் விசேடமாக மகளிர் அமைப்புக்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

*தேருநர் இடாப்புக்களின் மீளாய்வின்போது தகைமை பெறும் அனைத்துப் பிர சைகளும் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படுகின்றார்களென்பதனை உறுதிப் படுத்திக் கொள்வதற்காக ஒத்துழைப்பு வழங்கக்கூடிய சிவில் அமைப்புக்கள் / மகளிர் அமைப்புக்கள் இருக்குமாயின் அவை தொடர்பான தகவல்களை, குறிப் பிட்ட அமைப்பின் கடிதத் தலைப்புடன் கூடிய கடிதமொன்றின் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (பாராளுமன்றத் தேர்தல்கள்)**
**தேர்தல் செயலகம், சரண மாவத்தை, இராஜகிரிய.**

**எச்.எம்.டி.ரீ.ஹேரத்,**
**செயலாளர், தேர்தல்கள் ஆணைக்குழு.**

Tel :- **011 2868 441, 42,43**
Fax :- **011 286 8426**
Email:- info@slelections.gov.lk
Website :- www.slelections.gov.lk

(4/20668)
(12,18)

## மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்

### தேசிய தொழிற் தகைமை கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்(NVQ)

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திலும் வலயக் கல்வி அலுவலகங்களிலும் இயங்கிக் கொண்டிருக்கும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப கற்கை நிலையங்களில் நடத்தப்படவுள்ள **NVQ Level-3(Computer Application Assistant)** கற்கை நெறியில் இணைந்து கற்க விரும்புவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிப்போர் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் :

- ✡ 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ✡ க.பொ.த (சா/த) இல் ஆங்கில பாடம் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- ✡ க.பொ.த (உ/த) கற்றவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கற்கைநெறி நடைபெறவுள்ள கற்கை நிலையங்கள் :

| நிலையங்கள் | முகவரி |
|---|---|
| மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பக் கல்வி மத்திய நிலையம்(PICTEC) | மருக்காரம்பளை , வவுனியா |
| வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் | வலய கணினி வள நிலையம், புலோலி |
| தீவக வலயக் கல்வி அலுவலகம் | வலய கணினி வள நிலையம், வேலணை |
| வலய கணினி வள நிலையம், வவுனியா தெற்கு | A9 வீதி, வவுனியா |
| வலய கணினி வள நிலையம், வவுனியா வடக்கு | வ/புதுக்குளம் ம.வி. சாஸ்திரிகூழாங்குளம், வவுனியா |

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தங்களுக்கு அருகிலுள்ள கணினி வள நிலையங்களுக்கு 06.05.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக் குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்.**

திருதிகருணதாசன் ஆசிரியர் அவர்களின் நினைவாக முயோகபுரம் மகாவித்தியாலய பழைய மாணவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட கிறிகெற் மென்பந்து சுற்றுப்போட்டி புளியங்குளம் புரட்சி விளையாட்டு மைதானத்தில் 23.04.2016 அன்று நடைபெற்றது

இதில் 13அணிகள் கலந்துகொண்டதுடன் இறுதிப்போட்டிக்கு வவுனியா கிறீன்ரெல் அணியும், கனகராயன்குளம் அணியும் தெரிவாகின.



24.04.2016 அன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் வவுனியா கிறீன்ரெல் அணிவெற்றியை தனதாக்கி கொண்டது.



வெற்றிக் கிண்ணத்துடன் அணிவீரர்கள்.

# மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல்

மேற்படி விடயம் தொடர்பாக 26.04.2016ஆம் திகதிய பத்திரிகை கேள்வி அறிவித்தல் தொடர்பானது.

தவிசாளர், பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபரால் / மாவட்டச் செயலரால் பருத்தித்துறை கலாசார மத்திய நிலையம் கட்டம் - V, கரவெட்டி கலாசார மத்திய நிலையம் கட்டம் - IV, சாவகச்சேரி கலாசார மத்திய நிலையம் கட்டம் - IV, மாவட்டச் செயலக ஆண்கள் மலசலகூட புனரமைப்பு ஆகிய கட்டட வேலைகளுக்கான கேள்வி கோரல் பிராந்திய ஒப்பந்தகாரரிடமிருந்து (வட மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்) கோரப்படுவதுடன் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு மாற்றங்கள் செய்யப்படுகின்றன என்பதை அறியத்தருகின்றேன். மீதி நிபந்தனைகள் எதுவித மாற்றங்களுமின்றி வலுவில் இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாற்றங்கள் பின்வருமாறு:**

| கேள்வி இல. | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்வி பிணைத் தொகை | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| JF/CDA/ E.C.C-P/01/17/ 2016 | பருத்தித்துறை கலாசார மத்திய நிலையம். கட்டம் - IV | 9.17 | 05 | C7 | 91700.00 | 2000/= |
| JF/CDA/ E.C.C-K /01/17/ 2016 | கரவெட்டி கலாசார மத்திய நிலையம். கட்டம் - IV | 6.32 | 05 | C7 | 63200.00 | 2000/= |
| JF/CDA/ E.C.C- CH 01/17/ 2016 | சாவகச்சேரி கலாசார மத்திய நிலையம். கட்டம் - IV | 8.46 | 05 | C7 | 84600.00 | 2000/= |
| JK/SW/ MRW/ 2016/16 | மாவட்டச் செயலக ஆண்கள் மேல்தள மலசல கூட புனரமைப்பு வேலை | 2.77 | 04 | C8 | 27700.00 | 2000/= |

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(C/20925)(10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியில் பட்டினி கிடந்து மீனவர்கள் சாகும் நிலைக்குத் தள்ளுகிறது அரசு

## முல்லைத்தீவு மாவட்ட மீனவ சங்கங்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு,ஏப்.29
தொழில் இன்றி வீட்டுக்குள் படுத்திருந்து இறப்பதை விட மத்திய, மாகாண அரசுகள் மட்டுமன்றி, இந்த சர்வதேசமே அறியும் வகையில் மீனவர்களை வீதியில் பட்டினி கிடந்து சாவடையும் முடிவுக்குத் தள்ளுகின்றது இந்த அரசு - இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட மீனவ சங்கங்கள் தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு அளித்த வாக்குறுதியைக் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் நிறைவேற்றாது போனமையாலேயே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது என்று அந்தச் சங்கங்கள் தெரிவித்தன.

இதுகுறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இந்த மாதம் வருகை தந்த அமைச்சரிடம் எமது மாவட்ட மீனவர்களின் அவலங்களை எடுத்தியம்பினோம். இதற்குப் பதிலளித்த அமைச்சர் இது தொடர்பில் ஆராய்ந்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்க என தனது மேலதிக செயலாளர் தலைமையில் ஒரு குழுவை அப்போது எம்மைத்திருப்திப்படுத்தும் நோக்கில் அமைத்தார்.

அக்குழுவானது ஒரு வாரத்தில் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் எனவும், அதன் பின்னர் குழுவால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன் எனவும் அப்போது அமைச்சர் வாக்குறுதியளித்தார்.

அமைச்சர் வாக்குறுதி அளித்தும் ஒரு மாதம் எட்டிவிட்ட நிலையில், அமைச்சரின் மேலதிக செயலாளர் எமது மாவட்டத்தைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அதனால் எமது மாவட்ட மக்களின் வாழ்வியலில் அமைச்சரும் அரசியல் நடத்துகின்றாரா என்ற ஐயம் எழுகின்றது.

இதன் காரணமாக இனிவரும் காலங்களில் எந்த அரசியல்வாதிகளையும் நம்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தொழில் இன்றி வீட்டுக்குள் படுத்திருந்து இறப்பதை விட, எமது விடயத்தை மத்திய, மாகாண அரசுகள் மட்டுமன்றி இந்த சர்வதேசமே அறியும் வகையில் வீதியில் பட்டினி கிடந்து இறக்கும் முடிவுக்குத் தள்ளுகின்றது இந்த அரசு. அந்த முடிவை விரைவில் எடுப் போம்- என்று தெரிவித்தன. (ற-ஜ-101)


### வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை
### மானிப்பாய்கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
### ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் :- 11**
**ஆதன இலக்கம் :- 21/50A (புதிய இலக்கம்)**
**கொத்துக்கட்டி வீதி,**
**கிராமசேவையாளர் பிரிவு :- J/136**

வட்டாரம் 11. கொத்துக்கட்டி வீதி. ஆதனஇலக்கம் 21/50A (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை " மாரத்துப்புலம்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 04 குளி 15.78 கொண்ட) இவ்வாதனமானது யாழ்ப்பாணம் நவாலி நாகர் நல்லையா இவர்களால் அதே இடத்தைச் சேர்ந்த நல்லையா குணரத்தினத்திடமும் பெண் பேரின்பநாயகி என்பவருக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு. நா.முத்துவிநாயகம் அவர்கள் முகதாவில் 3265 ஆம் இலக்கம் 1988.12.25 ஆம் திகதிய அறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு V.T பாலசுப்பிரமணியம் அவர்களால் வரையப்பட்ட 6610/2016 இலக்க 2016.04.06 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது " மாரத்துப்புலம்" நிலப்பரப்பு 04 குளி 15.78 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும். அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நல்லையா குணரத்தினம் பெண் பேரின்பநாயகி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

### வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம், மவுண்ட் கார்மல் றோட்டு இல. 23A எனும் முகவரியிலுள்ள வீடு வாடகைக்குண்டு. படித்த உத்தியோகத்திலுள்ள குடும்பத்தவர்கள் விரும்பத்தக்கது.

076 658 7707

### உடனடி வேலைவாய்ப்பு

Type setting, Page Designing தெரிந்த பெண்கள் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
சஞ்சை பிறின்ரேர்ஸ்
பரமேஸ்வராவீதி (பல்கலைக்கழகத்துக்கு முன்பாக)
077 907 3773

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

இல.67. மத்தியூஸ் வீதியில் சகல வசதிகளையும் கொண்ட வீட்டுடன் 2 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.

076 658 7707
00479 951 5207

### தேவை Quantity Surveyor

NDT/NCT (Q.S)3வருட அனுபவம்/
NDT/NCT (Civil) 04 வருட அனுபவம்
தேவை. 02.05.2016 இற்கு முன் கீழ் காணும் மின்னஞ்சலிற்கு உங்களுடைய சுயவிவரத்தை அனுப்பி வைக்கவும்.
Email: Kathircons12@gmail.com
ragunthan85@yahoo.com
Tel: 021 561 8129

### காணி, வீடு விற்பனைக்குண்டு

45, ஈச்சமோட்டை,
கிருஸ்ணபிள்ளை வீதியில்
4 பரப்புக் காணியுடன் வீடு
விற்பனைக்குண்டு.
இ.சிறிதரன் - 077 453 1330,
லின்ரன் - 077 823 1764

### துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்பாள்



வெள்ளவத்தையில் பொன்நாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் சனிக்கிழமையில் இருந்து செவ்வாய்க்கிழமை வரை (30,1,2,3 ) ஆம் திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.
★ ஞாயிற்றுக்கிழமை அன்னதானம் வழங்கப்படும்.

பூசை நேரம்: முற்பகல் 10.30 - 12.30 மணிவரை
மாலை 5.30 - 6.30 மணிவரை

குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்.
தொடர்பு: 021 221 9127, 077 801 2226 (J.152) (12.18)

### சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு,
### வடமாகாணம் பெறுகைகளுக்கான அழைப்பு
### முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கான
### உலர் உணவு விநியோகம் - 2016 / 17

1. வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமைவாய்ந்த உலர் உணவு விநியோகஸ்தர்களிடமிருந்து பின்வரும் வைத்தியசாலைக்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | வைத்தியசாலைகள் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 1. | D/2016/DGH Mu/01 | மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு | 100,000.00 |

2. விலைக்கேள்விதாரர் உணவு விநியோகத்திற்கேற்றவகையிலான வியாபார பதிவினையுடையவராக இருத்தல் வேண்டும்
3. அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையீடின்றி உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்.
4. பொருத்தமான உத்தரவாதமுறி இணைக்கப்படல் வேண்டும். உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
5. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவில் கிடைக்கும் ' Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய பெறுகைக்கு மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் **29.04.2016** தொடக்கம் **20.05.2016** வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
5. விலைக்கேள்விகள் **23.05.2016** ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக மாவட்ட பொது வைத்தியசாலை , முல்லைத்தீவு இன் கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.
7. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்விபத்திரங்களையும் அலுவலக நேரங்களில் மாவட்டப் பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு (தொலைபேசி இல. 021-206-1423) என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி (திருமதி) S.R. யூட்,**
**தலைவர், மாகாண திணைக்களத்தின் பெறுகைக்குழு,**
**வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்.**

### தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் - 2016

காலம் - 15.05.2016
நேரம் - காலை 8.30 மணி முதல்
இடம் - கல்லூரி மண்டபம்

*காலை 8.30 மணிக்குப் பழைய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையிலான சிநேகபூர்வமான மென்பந்து துடுப்பாட்டப் போட்டி இடம்பெறும்.
*தொடர்ந்து முற்பகல் 10 மணியளவில் பொதுக்கூட்டம் ஆரம்பமாகும்.

**அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

குறிப்பு:- பொதுக்கூட்டத்துக்கான பிரேரணைகளைக் கல்லூரி நேரத்தில் இணைச் செயலாளரிடம் 06.05.2015 இற்கு முன்னதாக சமர்ப்பிக்கலாம்.

**செயலாளர், பழைய மாணவர் சங்கம்,**
**மகாஜனக் கல்லூரி – தெல்லிப்பழை.**

### வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை
### மானிப்பாய்கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
### ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் :- 07**
**ஆதன இலக்கம் :- 118 (புதிய இலக்கம்)**
**சங்கரப்பிள்ளை வீதி,**
**கிராமசேவையாளர் பிரிவு :- J/135**

வட்டாரம் 07. சங்கரப்பிள்ளை வீதி. ஆதனஇலக்கம் 118(புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டையிறை " புளியடி சீமாவும் யாமத்தாழ்வும்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 02 குளி 01.50 கொண்ட) இவ்வாதனமானது யாழ்ப்பாணம்.ஆனைக்கோட்டை வடக்கு பொன்னுத்துரை லோகநாதன் இவர்களால் கூழாவடி கிழக்கு ஒழுங்கை ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தே. தேவகுமார் பெண் மேரி யோசப் கிறிஸ்ரீனா என்பவருக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு. இ.வசந்தசேனன் அவர்கள் முகதாவில் 9031 ஆம் இலக்க 2012.09.01 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நிலஅளவையாளர் திருK.பரமேஸ்வரன் அவர்களால் வரையப்பட்ட 1065/2012 இலக்கம் 2012. 07.26 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது " புளியடி சீமாவும் யாமத்தாழ்வும்" நிலப்பரப்பு 02 குளி 01.50 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தே. தேவகுமார் பெண் மேரி யோசப் கிறிஸ்ரீனா என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் மாநாடு இன்றும் நாளையும்

கரணவாய், ஏப்.29
வடமராட்சிக் கல்வி வலயம் நடத்தும் ஆசிரியர் மாநாடு இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை நெல்லியடி மத்திய கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறும் முதல் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் பேருரைகளை யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். தொடர்ந்து ஆசிரியர்களின் ஆய்வுரைகள் இடம்பெறும்.

வலயக்கல்விப்பணிப்பாளர் தலைமையில் இடம்பெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார். இதில் பேருரைகளை தேசிய கல்வி நிறுவக பகுதி நேர விரிவுரையாளர் ப.ஆறுமுகம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக கல்வியிற்றுறை விரிவுரையாளர் ஆ.நித்திலவர்ணன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். தொடர்ந்து ஆசிரியர்களின் ஆய்வுரைகள் மற்றும் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறும். (ற-ஜ-108)


# வெளிநாட்டுக் கொக்குகளை இறைச்சியாக்கியவருக்கு ரூ.10 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,ஏப்.29
மிருசுவிலில் வெளிநாட்டுக் கொக்குகளை இறைச்சியாக்கியவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த சாவகச்சேரி நீதிமன்று, இறைச்சியை மண்ணெண்ணெய் ஊற்றி எரித்து அழிக்குமாறும் கொடிகாமம் பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

நேற்று முன்தினம் மிருசுவில் வடக்குப் பகுதியில் உள்ள களப்பில் இரை தேடிக்கொண்டிருந்த சைபீரிய நாட்டுக் கொக்குகளை வரணி குடமியன் பகுதியைச் சேர்ந்த நபர் வேட்டையாடி இறைச்சியாக்கியுள்ளார்.

அதனை விற்பனை செய்வதற்கு எடுத்துச் சென்று கொண்டிருந்த போது மிருசுவில் வடக்குப் பகுதியில் பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்ததுடன், இறைச்சியையும் கைப்பற்றியிருந்தனர். (ற-ஜ-107,9).


## விற்பனைக்கு



மொரட்டுவ.ராவகாவத்தை மணி செய்து கொடுக்கும் இடம். லண்டன் அச்சிலான சுத்தமான வெண்கல பெரியமணி 550 Kg விற்பனைக்குண்டு. மற்றும் 200Kg, 150Kg, 75Kg, 50Kg வெண்கல மணிகள் எம்மிடம் உள்ளன. மற்றும் கற்சிலைகள், பஞ்சலோக சிலைகள் கோயிலுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் எம்மிடம் உண்டு. உங்களுக்குத் தேவையான பொருள்களை எங்களிடம் தெரிவித்தால் நாங்களே உங்களிடம் கொண்டு வந்து தருவோம்.

தொடர்பு: வேலாயுதம் சுரஞ்சன்
K.V.G.Trade Centre, L.G.9.People's Park, Shopping Complex
Pettah, Colombo -11
011 233 0922, 077 152 3370, 072 324 6581



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கைதடி நுணாவில் பருத்தித்துறை வீதி. சாவகச்சேரியைச் சேர்ந்த
**மகாலிங்கம் தயாநிதி**
சுவாமி அவர்களுக்கு கடந்த
**02.04.2016**
**சனிக்கிழமை**
கொழும்பு 06. வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் அகில இன நல்லுறவு தேசிய ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் சாம ஸ்ரீ சிவநெறிச் செம்மல் என்னும் சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையையொட்டி எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமிதமடைகின்றோம்.

வாழ்த்துவோர்:-
**01.ஆலய குரு இந்திரன் ஐயா**
(சாம ஸ்ரீ சைவநெறி செம்மல் சமூகஜோதி)
நாககன்னி நாகபூசணி அம்மன் ஆலயம் சித்தன்கேணி.
**02. Dr.S. லோகர் சுவாமி (நயினாதீவு)**
(பத்ம ஸ்ரீ கலாஜோதி) நாகபூசணி இசைக்குழுவினரின் தெய்வீக கான இராகங்கள் வாசிப்பவர்,


# சட்டவிரோத சாராய விற்பனை; கடை உரிமையாளருக்கு அபராதம்

புத்தூரிலுள்ள தேநீர் கடையொன்றில் அனுமதிப் பத்திரம் இன்றி சாராயம் விற்ற கடை உரிமையாளருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் மல்லாகம் நீதிமன்றால் விதிக்கப்பட்டது.

கடந்த 21 ஆம் திகதி போயாதின இரவில் தேநீர் கடைக்குள் வைத்து மதுபானம் விற்பனை செய்த நபரைக் காங்கேசன்துறை விசேட போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கைது செய்திருந்தனர்.

அத்துடன் 180 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய நான்கு மதுபானப்போத்தல்களும், அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

குறித்த நபருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. நீதிமன்றில் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து குறித்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-107)


## பனை அபிவிருத்திச் சபை
## PALMYRAH DEVELOPMENT BOARD

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு
Ministry of Prison Reforms, Rehabilitation, Resettlement and Hindu Religious Affairs

### Invitation for Bids (IFB)

***Procurement Number - PDB/LP/EX/01/2016***

1. The Chairman Department Procurement Committee on behalf of the Palmyrah Development Board now invites sealed bids from eligible and qualified bidders for Palmyrah Handicraft Tools and equipments listed in the table below.
2. Bidding will be conducted through *National Competitive Procedures*
3. Interested eligible bidders may obtain further information from and inspect the Bidding Documents at the address given below
4. Pre bid meeting will be held at Head office, Palmyrah Development Board, Jaffna on 3rd of May 2016 at 10.00 AM.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the below mentioned address from 29th April 2016 until 20th May 2016 upon payment of a non refundable fees of Rs.1000 (one Thousand Rupees) Method of payment should be by cash.
6. Bids must be delivered or sent by registered post to the address below on or before *20th May 2016 at 2.00 PM.* late bids will be rejected. Bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend in person at the address below Soon after the closing.

| Line Item No. | Description of Goods or related services | Qty and unit | Line Item No. | Description of Goods or related services | Qty and unit |
|---|---|---|---|---|---|
| 1 | Big cutting Knife with wooden handle | 400 Nos | 9 | Arecanut cutter | 70 Nos |
| 2 | Curved Knife | 400 Nos | 10 | Nose pliers | 70 Nos |
| 3 | Boiling Vessel | 400 Nos | 11 | Nail with wooden handle | 70 Nos |
| 4 | Scissor with plastic handle | 400 Nos | 12 | Smoothing plane | 70 Nos |
| 5 | Big cutting knife without handle | 70 Nos | 13 | Leaf Slicing Tools | 400 Nos |
| 6 | Small cutting knife with wooden handle | 70 Nos | 14 | Measurement tape – 1M | 430 Nos |
| 7 | Big curved knife | 70 Nos | 15 | Sewing machine (leather ) | 15 Nos |
| 8 | Medium cutting knife with wooden handle | 70 Nos | 16 | Dye – (Blue,brown, Black ) | 258 kg |

The Chairman
Palmyrah Development Board.
Head Office, Kandy Road,
Jaffna.
TP No :- 021-2222034,
E-mail :- slpdbho@yahoo.com



## பீமரத சாந்தி அழைப்பு



வேரற்கேணி, மட்டுவில்
**பிரம்மஸ்ரீ.கு.ஜெகதீஸ்வர சர்மா**
**ஸ்ரீமதி.ஜெ.இலங்காதேவி**
**தம்பதிகள்**
காலம்:- 02-05-2016 (திங்கட்கிழமை)
இடம்:- நல்லூர் சிவன் கோவில்

**நூல்வெளியீடு**
**'விக்னேஸ்வர மஹோற்சவ பத்ததி'**
உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

தொடர்புகளுக்கு:
0773144760

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 ஆம் ஆண்டின் நிறைவு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.29

ஸ்ரீ மீனாட்சி சனசமூக நிலையத்தின் 45 ஆம் ஆண்டின் மாபெரும் நிறைவு விழா நாளைக் காலை 6.00 மணிக்கு விழாக் குழுத் தலைவர் சி. பவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் காலை 6.30 மணிக்கு 15 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான மரதன் ஓட்டம்,பெண்களுக்கான மரதன் ஓட்டம், 15 வயதுக்குக்கீழ்ப்பட்ட ஆண்களுக்கான மரதன் ஓட்டம் இடம்பெறுவதுடன், சிறப்பு நிகழ்வுகளாக முட்டிஉடைத்தல், சங்கீதக் கதிரை,கயிறு இழுத்தல், கிறிஸ்மரம் ஏறுதல் மற்றும் சிறார்களுக்கான நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

அத்துடன், மாலை 7 மணிக்கு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. தலைவர் அன்ரன் றெகநாதன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (வ)

## பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 29

2016 ஆம் ஆண்டுக்கான பனை அபிவிருத்தி சபையின் விரிவாக்கல் திட்டத்தின் கீழ், முதலாவது பயிற்சி ஆரம்ப நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு புங்குடுதீவு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் மா.கணபதிப்பிள்ளையும், கௌரவ விருந்தினராக வேலணை பிரதேச செயலர் சு.தெய்வேந்திரமும், சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் எம்.பி.லோகநாதனும், சபையின் விரிவாக்க முகாமையாளர் கா.கோபாலகிருஸ்ணனும், சபையின் சிறு சுவடுகள் தலைவி திருமதி த. பவானியும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (வ-ரீ)

## முல்லையில்

தடுத்து நிறுத்தப்பட்டது.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாயாறுப் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் காணிகளை இராணுத்தினரின் தேவைக்காக அபகரிக்கும் நோக்கோடு, நில அளவைத் திணைக்களத்தினரால் காணிகள் அளவீடு செய்யப்பட இருந்தது.

குறித்த காணிகளை அளவிடுவதற்காக நில அளவை திணைக்களத்தினரும் அங்கு வருகை தந்திருந்திருந்தனர். இதன்போது காணிகளின் உரிமையாளர்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் அரசியல் தலைவர்களின் தலையீட்டினால் காணி அளக்கும் முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பொதுமக்களின் காணிகள் இராணுவத் தேவைக்காக அபகரிக்கும் முயற்சிகள் இடம்பெற்றுவரும் நிலையில், காணி அபகரிப்பை நிறுத்துமாறு கோரி, காணி உரிமையாளர்களால் நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச செயகத்தின் முன் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இவ்வாறான நிலையில் காணி அபகரிப்புத் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமருக்குத் தெரிவிக்கப்படும் என்ற முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரின் உறுதிமொழியை அடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றும் சுதந்திரபுரம், நாயாறுப் பகுதிகளில் காணி அளக்கும் முயற்சிகள் இடம்பெற்றுள்ளமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. நேற்று நடைபெற இருந்த காணி அபகரிப்புக்கு எதிராக குறித்த காணிகளின் உரிமைளார்கள் உட்பட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா, வடக்கு மாகாணசபை உறுப்பினர் து. ரவிகரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரான கஜேந்திரன் மற்றும் நாயாறு பங்குத்தந்தை ஆகியோர் கலந்து கொண்டு காணி அளவிடும் முயற்சிகளுக்கு எதிர்ப்பை வெளியிட்டனர். (து-வ-21)

# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை – கிளிநொச்சி.

## 2016/2017 ஆம் வருடத்திற்கு தேவையான வழங்கல்கள்/ சேவைகள்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிற்குட்பட்ட வைத்தியசாலைகளிற்கு 2016 ஆம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

அ.உலர் உணவு வழங்கல்கள்.
ஆ. சமைத்த உணவு வழங்கல்கள்
இ.அழுக்குத்துணிகள் சலவை செய்தல்
ஈ. குடிநீர் விநியோகம்
உ. வாகன சுத்திகரிப்பு செய்தல்.

2016 ஆணி 01 ஆம் திகதி முதல் 2017 வைகாசி 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான இவ் வழங்கல் சேவைக்கான முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விலைக்கேள்விதாரர்கள் உணவு,சேவை விநியோகத்திற்கேற்றவகையிலான வியாபார பதிவுடையவராக இருத்தல் வேண்டும்.அத்துடன் உலர் உணவிற்கு விண்ணப்பிப்பவர்கள் சமைத்த உணவுவழங்கியதில் மூன்றுவருட அனுபவத்தையுடையவராக இருத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 02/05/2016 ஆம் தொடக்கம் 19/05/2016 திகதி முற்பகல் 10.00 மணிவரையும் கிளிநொச்சியில் இயங்கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு அல்லது தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல் சேவைக்கான ஒரு ஆவணத்தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

2. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடைசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
3. விண்ணப்பிக்கத்தகுதியானோர் கீழ்குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள்/ சேவைகள் என்பவற்றுக்கான பதிவுச்சான்றிதழின் பிரதி,கோரிக்கை கடிதம் என்பவற்றை கிளிநொச்சியில் இயங்கும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 19.05.2016 திகதி மு.ப 10.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு தலைவர் கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை – கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்விப்பெட்டியிலோ இட முடியும். கேள்விகள் யாவும்19.05.2016 மு.ப 10.30 மணிக்கு திறக்கப்படும்.
4. வைப்புத்தொகைகளும் ஆவணங்களும்

அ.உலர் உணவு

| வைத்தியசாலை | உணவுவகை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரு பா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரு பா |
|---|---|---|---|
| ஆதார வைத்தியசாலை முழங்காவில் | உலர் உணவு | 1000.00 | 60000.00 |
| பிரதேச வைத்தியசாலை அக்கராயன்குளம் | உலர் உணவு | 1000.00 | 60000.00 |

ஆ. சமைத்த உணவு

| வைத்தியசாலை | உணவுவகை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரு பா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரு பா |
|---|---|---|---|
| பிரதேச வைத்தியசாலை தர்மபுரம் | சமைத்த உணவு | 1000.00 | 50000.00 |
| பிரதேச வைத்தியசாலை பூநகரி | சமைத்த உணவு | 1000.00 | 50000.00 |
| பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம் | சமைத்த உணவு | 1000.00 | 50000.00 |
| பிரதேச வைத்தியசாலை பளை | சமைத்த உணவு | 1000.00 | 50000.00 |
| பிரதேச வைத்தியசாலை வேரவில் | சமைத்த உணவு | 1000.00 | 50000.00 |
| பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி. | சமைத்த உணவு | 1000.00 | 40000.00 |

இ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்.

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரு பா | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரு பா |
|---|---|---|
| ஆதார வைத்தியசாலை முழங்காவில் | 500.00 | 10000.00 |
| பிரதேச வைத்தியசாலை தர்மபுரம். | 500.00 | 10000.00 |
| பிரதேச வைத்தியசாலை அக்கராயன்குளம் | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை பூநகரி | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம் | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை பளை | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை வேரவில் | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி. | 500.00 | 5000.00 |

ஈ. குடிநீர் விநியோகம்.

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரு பா | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரு பா |
|---|---|---|
| பிரதேச வைத்தியசாலை வேரவில் | 500.00 | 5000.00 |

உ. வாகன சுத்திகரிப்பு

| இடம் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரு பா | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரு பா |
|---|---|---|
| பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கிளிநொச்சி | 1000.00 | 30000.00 |

**ஆவணங்கள்:**

1. ஒவ்வொரு வழங்கல்கள்/ சேவைகள் என்பவற்றுக்கான மீளளிக்கப்படும் வைப்புத்தொகைக்குரிய வங்கி உத்தரவாதப்பத்திரத்தினை (BID BOND) சமர்ப்பித்தல் வேண்டும்.
2. ஏற்கனவே சேவையினை வழங்கி வரும் ஒப்பந்தக்காரர்கள் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதி தீர்மானம் எடுக்கப்படும்.
3. கேள்விநேரம் முடிவடைந்தவுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்துமூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.
4. கேள்வி தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும்.
5. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Dr.M.ஜெயராசா
தலைவர் பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மீனவருக்கு இராணுவத்தினரால் ஏற்படும் அநீதிகளை ஆராய கலந்துரையாடல்

## எம்.பிக்கள் , மாகாண சபை உறுப்பினர்கள் கூடுகின்றனர்

முல்லைத்தீவு,ஏப்.29

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் அநீதிகள் தொடர்பிலும், மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் ஆராய்ந்து கட்சி ரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு நாளை விசேட கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. - என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இக் கலந்துரையாடலில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் கலந்து கொள்ள உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் சிங்கள மீனவர்களின் அத்துமீறிய கடற்றொழில் நடவடிக்கைகள் மற்றும் சட்டவிரோதக் கடற்றொழில் நடவடிக்கைகள் குறித்தும், நாளுக்கு நாள் அதிகரித்துவரும் தென் பகுதி மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்தும் கேட்டபோதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முல்லைத்தீவு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் எந்த அனுமதிகளும் இன்றி தென்னிலங்கை மீனவர்கள் பலர் குடியேறி, கடற்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களால் அதிகாரிகளிடம் பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

> முல்லைத்தீவு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் எந்த அனுமதிகளும் இன்றி தென்னிலங்கை மீனவர்கள் பலர் குடியேறி, கடற்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரு கின்றனர் என்று முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களால் அதிகாரிகளிடம் பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

அண்மையில் முல்லைத்தீவுக்கு வந்த மீன்பிடி அமைச்சரிடமும் குறித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதன் போது இது தொடர்பில் ஆராய்ந்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவித்திருந்தார்.

அத்துடன் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரியிடம் தெரிவித்த அமைச்சர், தனது மேலதிக செயலாளர் தலைமையில் ஒரு குழுவை அமைத்து இது தொடர்பாக ஆராய்வதாகவும், அக்குழுவானது ஒரு வாரத்தில் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் எனவும் அதன் பின்னர் குழுவினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன் எனவும் வாக்குறுதியளித்திருந்தார். அத்தோடு சட்ட விரோதமாக தொழிலில் ஈடுபடுவோரைக் கைது செய்யுமாறும் பணித்திருந்தார்.

எனினும் கடந்த ஒரு வாரங்களுக்கு முன்னர் கொக்கிளாய்ப் பகுதியில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியில், தென்னிலங்கை மீனவர்கள் சிலர் வாடி அமைப்பதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அந்தப் பகுதியைப் பார்வையிடச் சென்ற கிராம சேவகர்கள் இருவர் தென்னிலங்கை மீனவர்களால் தாக்கப்பட்டனர்.

மீனவர்களுக்கு ஆதரவாக அப்பகுதியில் உள்ள இராணுவத்தினர் கிராம சேவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தனர்.

தற்போது மீண்டும் 200 க்கும் மேற்பட்ட தென்னிலங்கை மீனவர்கள் குறித்த இடங்களில் வந்து குடியேறி உள்ளனர் என்று மீனவர்களாலும் அரச அதிகாரிகளாலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுவது தொடர்பாகவும், இராணுவத்தால் மீனவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர் பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினரரான எம்.ஏ. சுமந்திரன், சாள்ஸ் நிர்மலநாதன், சி. சிவமோகன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரும், வடக்கு மாகாணசபை பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன், மாகாண சபை உறுப்பினர்களான து. ரவிகரன், சிவனேசன் ஆகியோரும் மற்றும் சில பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதில் முழுக்க முழுக்க முல்லைத் தீவு மாவட்ட மீனவர்களுடைய பிரச்சினைகளே ஆராயப்படும்- என்றார். (ற-ஐ-21,102)

## கவிதை நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.29

முல்லைப்பார்த்தா எழுதிய மரணித்த மனிதம் எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கச்சேரிக்கு முன்பாகவுள்ள வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக சட்டத் துறை மாணவனும் அகில இலங்கை இளைஞர் இலக்கிய மன்ற அமைப்பாளருமான சிவஸ்கந்தஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஐ-ரி)



தாவடி ஸ்ரீ அம்பலவாண விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் அண்மையில் நடைபெற்றது. தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாவில் பெரும் எண்ணிக்கையான அடியார்கள் கலந்து கொண்டனர். (ற-ஐ)

## எல்லை தாண்டும் மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடுக

### கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள பணிப்பாளருக்கு முல்லை. அரச அதிபர் கடிதம்

முல்லைத்தீவு,ஏப்.29

முல்லைத்தீவு மாவட்ட சிறு கடல் பகுதிக்குள் எல்லை தாண்டும் மீனவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பணிப்புரை வழங்க வேண்டும் என்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளருக்கு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அவசர கடிதம் எழுதியுள்ளார்.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக இடம்பெற்ற மீனவர்களது ஆர்ப்பாட்டத்தை அடுத்து தீர்க்கமான முடிவை எட்டுவதற்காகவே அரச அதிபரால் குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் அரச அதிபரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது- கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் உள்ள சிறு கடல் பகுதியானது முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியுள்ள போதிலும், இரு மாவட்டங்களுக்குமான எல்லைகள் தெளிவாக குறிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலும் உண்டு.

அதன்படி தீர்மானிக்கப்பட்ட மாவட்ட எல்லையைத் தாண்டி புல்மோட்டை மீனவர்கள் முல்லைத் தீவுப் பிரதேச எல்லைக்குள் அத்துமீறி இறால் கூடுகள் அமைப்பதால் முல்லைத்தீவு மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று எமது மாவட்ட மீனவர் சங்கங்கள் சுட்டிக் காட்டியிருந்தன.

இது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் பிரதேச செயலாளர், மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைப் பிரதிப் பணிப்பாளர் ஆகியோருமாக நேரில் சென்று பார்வையிட்டோம். அங்கு பல கூடுகள் பிற மாவட்டத்தவர்களால் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான அத்துமீறல்களைக் கட்டுப்படுத்த மாவட்ட கடற்றொழில் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்வகையில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

இதனைச் சுட்டிக்காட்டி நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளருக்கு குறித்த உத்தரவை வழங்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. - என்றார். (ற-ஐ-101)

## இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட மகளின் குடும்பத்தை மீட்டுத் தாருங்கள்

### ஆணைக்குழுவிடம் தாயொருவர் மன்றாட்டம்

கிளிநொச்சி,ஏப்.29

பாதர் பிரான்சிஸ்ஸுடன் இணைத்து இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட மகள், மருமகன், இரண்டு பிள்ளைகளையும் மீட்டுத் தாருங்கள் என பரணகம ஆணைக்குழு முன் தாயொருவர் தெரிவித்தார்.

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பரணகம ஆணைக் குழுவின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான அமர்வுகள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்று வருகின்றன. அதில் சாட்சியமளிக்கும்போதே தாயொருவர் இவ்வாறு சாட்சியமளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளதாவது-

நாம் குடும்பமாக வட்டுவாகல் செல்வபுரம் என்ற இடத்தில் இராணுவத்திடம் சரணடையச் சென்ற போது விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்தவர்களை முதலில் சரணடையுமாறு இராணுவத்தினர் கூறினர்.

இராணுவத்தினர் கூறியதற்கு இணங்க எனது மகளுடைய குடும்பம் பாதர் பிரான்சிஸ் மூலமாக இராணுவத்திடம் சரணடைந்தனர். அதன் பின்னர் மருமகனை மாத்திரம் இராமநாதன் மற்றும் சோன்-4 முகாமில் கண்டதாக எனது உறவினர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு அவருடன் கதைக்க முற்பட்ட போது அவர் சைகை மூலம் கதைக்க வேண்டாம் எனத் தெரிவித்ததாகவும் உறவினர்கள் என்னிடம் கூறினர்.

எனது மகளுடைய குடும்பம் தொடர்பாக தேடிப் பார்த்த போதும் எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த வருடம் கொழும்பில் இருந்து வருதாக கூறி, பொலிஸார் எனத் தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட சிலர் உங்கள் மகளின் குடும்பம் விடுதலை செய்யப்படவுள்ளது எனவும், நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் எனவும் தெரிவித்ததுடன் 5 லட்சம் ரூபா காசு தயார் படுத்துமாறும், அத்தோடு சரீரப் பிணைகளும் தேவை எனவும் தெரிவித்து விட்டுச் சென்றனர்.

இது வரையும் எந்தப் பதிலும் இல்லை. எங்கு தேடியும் கிடைக்காத எனது மகளுடைய குடும்பத்தைக் கண்டுபிடித்துத் தாருங்கள் - என்று தெரிவித்தார். (ற-ஐ-21,ரி3)

## வெடிக்காத நிலையில் குண்டு மீட்பு

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு பகுதியில் வெடிக்காத நிலையில் குண்டொன்று மீட்கப்பட்டுள் ளது.

இந்தப் பகுதியில் காணி இல்லாத குடும்பங்களுக்கு காணி வழங்குவதற்காக அளவீடுகள் நேற்றுமேற் கொண்ட வேளையில் குழிவெட்டிய போது வெடிக்காத நிலையில் குண்டு காணப்பட்டது.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அங்குவந்த பொலிஸார் பாதுகாப்பை ஏற்படுத்திய பின்னர் அதனை விசேட அதி ரடிப் பொலிஸார் மூலம் அப்புறப்படுத்த அனுமதி கோரி சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து நீதிவானின் பணிப்பின் பேரில் குண்டு மீட்கப் பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம்,ஏப்.29
தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் தமிழ் அமுதம் - 04"வள்ளுவர் விழா" நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானை கம்பன் கல்லூரி வளாகம் தமிழ்க் கோட்டத்தில் நடைபெறவுள்ளன.
இந்த நிகழ்வில் நா. நவராஜ்யின் "உள்ளத்து அனையது உயர்வு" என்னும் எழிலுரையும், "என்றும் பொருந்தி நிற்கும் வள்ளுவ இலக்கணம்" என்னும் விவாத அரங்கும் நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-ரி5)

## விபத்துக்களில் இருவர் காயம்

சாவகச்சேரி,ஏப்.29
வீதி விபத்தில் சிக்கி கால் முறிந்த இளைஞனும், மரத்திலிருந்து வீழ்ந்து இரு கைகளும் முறிந்த 13 வயது பாடசாலை மாணவனும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
சாவகச்சேரி வடக்குப் பகுதியில் ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளோட்டியான 23 வயது இளைஞனுக்கு கால் முறிந்தது. நுணாவில் கிழக்குப் பகுதியில் ஜாம் மரத்தில் காய் பிடுங்க ஏறிய பாடசாலை மாணவனுக்கு தவறி வீழந்து இரு கைகளும் முறிந்தன.
பாதிப்புக்கு உள்ளான இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ற-ஐ-9)

# முல்லை. வீதிகள் அபிவிருத்திக்கு 72 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

## வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சால்

முல்லைத்தீவு, ஏப்.29
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 6 பிரதான வீதிகளின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சால் 72 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கான வேலைத் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. - இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.



முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தண்ணீரூற்று குமுழமுனை அலம்பில் பிரதான வீதியின் ஆரம்ப வேலைத்திட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தண்ணீரூற்று குமுழமுனை அலம்பில் பிரதான வீதியின் சுமார் 2.2 கிலோமீற்றர் வீதி மாகாண சபையின் மூன்று உறுப்பினர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கவும், மக்களது நலனைக் கருத்தில் கொண்டும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.
உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட தலா 6 மில்லியன் ரூபா வீதம், மூன்று உறுப்பினர்களின் ஒதுக்கீட்டை இணைத்து சுமார் 18 மில்லியன் ரூபா செலவிலும், அதே வீதியின் பிரதான எட்டுக் கல்வெட்டுக்கள் சுமார் 3 மில்லியன் நிதி ஒதுக்கீட்டிலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.
அதேபோன்று 14.37 கிலோ மீற்றர் தூரமுள்ள குமுழமுனை அக்கராயன் வீதி கிரவலிட்டும், 11 கிலோ மீற்றர் நீளமான பூவரசங்குளம் துணுக்காய் வீதி கிரவலிட்டும், தண்ணீரூற்று குமுழமுனை அலம்பில் வீதியில் 8 கல்வெட்டுக்களும், கனகராயன் குளம் மாவட்ட எல்லை வீதியில் உள்ள 4 கல்வெட்டுக்களும், 4 கிலோமீற்றர் நீளமான ஒட்டுசுட்டான்- புதுக்குடியிருப்பு மாத்தளன் வீதி ஆகியனவும் புனரமைப்பு செய்யப்பட்டவுள்ளன.- என்றார்.
அந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் கந்தையா சிவநேசன், அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் டி.சிவராஜலிங்கம், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் குணபாலன், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதம பொறியியலாளர் ஜெகானந்தன், முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் கௌசிகன் மற்றும் அப்பகுதிக்கான கிராம சேவகர் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ஐ-21)



வவுனியா வேப்பங்குளம் பகுதியில் வவுனியா திருச்சிலுவைக் கன்னியர் மட நிரந்தர வதிவிடக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. திருச்சிலுவைக் கன்னியர் மடம் மாகாணத் தலைவி அருட் சகோதரி கிளையா சுவானி, வேப்பங்குளம் தூய சூசையப்பர் ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி அ. லக்ஸ்ரன் டி சில்வா, திருச்சிலுவைக் கன்னியர் மட மாகாண ஆலோசகர் மற்றும் வேப்பங்குளம் திருச்சிலுவைக் கன்னியர் மடம் அருட் சகோ தரிகள் ஆகியோர் கலந்து அடிக்கல் நட்டனர். (ற-ஐ-21)

## விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சாராயம், பியர் பொலிஸாரால் மீட்பு

கிளிநொச்சி, ஏப்.29
சட்ட விரோதமாக விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த 325 கால் போத்தல் சாராயம், 24 ரின் பியர்கள் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதனுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி உதயநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
கிளிநொச்சிப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, கிளிநொச்சி- உதயநகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

> "325 கால் போத்தல் சாராயம், 24 ரின் பியர்கள் கிளிநொச்சி பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன."

கைது செய்யப்பட்ட நபர் விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்றும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-ரி3)

# புதுக்குடியிருப்பில் இராணுவத்தால் மாணவிகளுக்குக் கடும் தொல்லை

## சிவமோகன் எம்.பி. குற்றச்சாட்டு

முல்லைத்தீவு,ஏப்.29
புதுக்குடியிருப்பில் உள்ள இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தின் செயற்பாடுகளைச் சகித்து கொள்ள முடியாத பாடசாலை மாணவிகள், அவர்களுடைய செயலை வெளியில் சொல்ல முடியாமல் மூடி மறைக்கின்றனர். - இவ்வாறு சாடியுள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன்.
காலை, மாலை பயிற்சி என்று கூறி வீதியில் பயிற்சியை மேற்கொள்ளும் இராணுவத்தினர், மாணவிகளிடத்தில் முறைகேடாக நடந்து கொள்கின்றனர் என்று எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.
காணி சுவீகரிப்புக்கு எதிராக முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பில் நேற்றுமுன்தினம் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடுவில் உள்ள தொட்டியடியில் ஒரு காணியில் நேற்று முன்தினம் நில அளவை மேற்கொள்ளப்படவிருந்தது. அது மக்களால் தடுக்கப்பட்டது. இதே போன்று சிலாவத்தையில் காணி அளவிடும் முயற்சி தடுக்கப்பட்டுள்ளது.
செம்மலையில் ஒரு காணி அளக்கப்பட்டுள்ளது. சுதந்திரபுரத்தில் ஒரு காணி நில அளவை செய்யப்படவுள்ளது என்று அறிகின்றோம். அதனையும் தடுக்க வேண்டியுள்ளது.
இது எங்களது வாழ்விடம். எமது வாழ்விடத்தை நீண்ட காலம் வாழ்ந்த எமது மண்ணை விட்டுக் கொடுக்க முடியாது என்பது ஒரு விடயம். இரண்டாவது பொன்னம்பலம் வைத்தியசாலையுடன் இணைந்த இந்த புதுப்புலம் காணி. இது 40க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு உரித்தானது. அதற்கான உறுதிகள் நீண்ட காலப் போராட்டத்தின் பின்னர் வழங்கப்பட்டுள்ளன.
புதுக்குடியிருப்பு நகரத்தில் இராணுவ முகாம் இருப்பது சமுதாயச் சீர்கேடுகளுக்கும் வழிவகுக்கின்றது. எமது கலாசாரத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.
இங்குள்ள சில படையினரின் செயற்பாடுகளைப் பாடசாலை மாணவிகள் சகிக்க முடியாத நிலையில் உள்ளனர். அவற்றை வெளியில் சொல்ல முடியாது மூடி மறைக்கின்றனர்.
இராணுவத்தினருடைய செயற்பாடுகள் தொடர்பாக எனக்கு முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. காலையும், மாலையும் பயிற்சி என்ற போர்வையில் இந்த வீதியைப் பாவிக்கும் இராணுவத்தினர் தனியான ஒரு இடத்தில் - மைதானத்தில் தங்களுக்கான பயிற்சிகளைச் செய்வது தான் சிறந்ததாக இருக்கும் - என்றார். (ற-ஐ-21,ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு சுகாதார அபிவிருத்திக்கு 4 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி

## வழங்க மத்திய சுகாதார அமைச்சு இணக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.29
வடக்கு மாகாண சுகாதாரத் துறையின் அபிவிருத்திக்கு 4 ஆயிரம் மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு மத்திய சுகாதார அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கும், வடக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்துக்கும் இடையில் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின்போதே மத்திய சுகாதார அமைச்சால் குறித்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரின் ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்ற மாதாந்த மாகாண சுகாதார அமைச்சர்களுக்கான மாநாட்டில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் பல்வேறு திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

> எதிர்காலத்தில் ஒஸ்ரிய நாட்டின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தின் வைத்தியசாலைகளின் உட்கட்டுமரன வசதிகள் மேலும் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதில் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் சுகாதார சேவையை மேம்படுத்தும் முகமாக சுகாதாரத் துறை சார்ந்த உட்கட்டுமான அபிவிருத்தி வேலைகள், மருத்துவ மனைகளைத் தரமுயர்த்தல், மாகாண அமைச்சின் ஐந்தாண்டுத் திட்ட நடைமுறை, ஆளணி அதிகரிப்பு போன்ற திட்ட முன்மொழிவுகள் மாகாண சுகாதார அமைச்சால் முன்வைக்கப்பட்டன.

அவற்றில் மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கான குழந்தை மருத்துவப் பிரிவு அமைத்தல், வவுனியா பொது வைத்தியசாலையில் இருதய நோய்களுக்கான சிகிச்சைப் பிரிவை விரிவுபடுத்தல், யாழ்ப்பாணத்தில் பிராந்திய சுகாதார பயிற்சி நிலையம் நிறுவுதல், வவுனியாவில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய தாதியர் பயிற்சிக் கல்லூரி அமைத்தல், சாவகச்சேரி வைத்தியசாலையில் பாரிசவாத நோயளர்களுக்கான விசேட நரம்பியல் பிரிவை அமைத்தல், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கான மருத்துவவிடுதி அமைத்தல், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உளநலமருத்துவ பிரிவுக்கான விடுதி அமைத்தல் போன்ற திட்டங்கள் உள்ளடக்கப்பட்டன.

எதிர்காலத்தில் ஒஸ்ரிய நாட்டின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தின் வைத்தியசாலைகளின் உட்கட்டுமான வசதிகள் மேலும் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பான ஒஸ்ரிய நாட்டு அமைப்புகளுடனான உத்தியோகபூர்வ சந்திப்பு அடுத்த வாரம் நடைபெறவுள்ளது– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப–ஜ–21)

# மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் கண்காட்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.29
வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால், உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் மற்றும் அழகியல் பயிற்சி நிலையத்தில் பயிற்சியை முடித்த மாணவிகளின் தையல் மற்றும் அழகியல் பொருள்களின் கண்காட்சி கடந்த திங்கட்கிழமை உடுவில் உதவிப் பிரதேச செயலாளர் செல்வி செ.அகல்யா தலைமையில் இணுவில் சிவகாமியம்மன் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது.



நிகழ்வில் வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நாடாவை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்தார்.

உடுவில் பிரதேச செயலாலர் நந்தகோபாலன், யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.பஞ்சலிங்கம், உடுவில் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் உமாபாலன், சங்கானை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சாந்தலிங்கம் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பயிற்சியை முடித்த மாணவிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ப–ஜ–25)

# வீதி விதி மீறல்கள்; 19 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

சாவகச்சேரி,ஏப்.29
தலைக்கவசமின்றி வீதியில் சென்ற மோட்டார் சைக்கிளைப் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் நிறுத்துமாறு சமிக்ஞை செய்த போது நிறுத்தாமல் சென்றதால் துரத்திப் பிடித்தனர். இவரைச் சோதனையிட்ட போது சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம் ஆகியவை இன்மை கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த நபருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம் ஆகியவை இன்மை, தலைக்கவசம் அணியாமை பொலிஸாரின் சமிக்ஞையை மீறியமை ஆகிய ஐந்து குற்றச் சாட்டுக்களுடன் நீதிமன்றில் முற்படுத்தினர்.

குறித்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குறித்த நபர் ஐந்து குற்றங்களையும் ஒப்புக் கொண்டதையடுத்து ஐந்து குற்றங்களுக்குமாக நீதிவான் 19 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

அத்துடன் அன்றையதினம் போக்குவரத்து விதிமுறைகளை மீறிய வாகனங்களைச் செலுத்தியோருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும், 7 ஆயிரத்து 500 ரூபாவும் 4 ஆயிரத்து 500 ரூபாவும், பத்துப் பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபாவும், அரச நிதியாக நால்வருக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதமும், இருவருக்கு தலா ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (ப–ஜ–9)

# உத்தியோகத்தர்கள் உறுப்பினர்கள் ஆக முடியாது பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அறிவிப்பு

## வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கங்களில்

வலி.வடக்கு, ஏப்.29
வைத்தியசாலைகளின் நோயாளர் நலன்புரி சங்கங்களில் வைத்தியசாலைப் பணிப்பாளரோ, உத்தியோகத்தர்களோ எவரும் உறுப்பினர்கள் ஆக இருக்க முடியாது. – இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ப.நந்தகுமார்.

வைத்தியசாலைகளில் இயங்கி வந்த சிற்றுண்டிச்சாலை மற்றும் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றின் வருமாணங்களை மீண்டும் நோயாளர் நலன்புரி சங்கங்களே பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் திணைக்களத் தலைவர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்திலேயே குறித்த விடயமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

வைத்தியசாலைகளின் சிற்றுண்டிச்சாலை மற்றும் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களின் வருமானங்களை நோயாளர் நலன்புரி சங்கங்கள் பெற்றுக்கொள்ளலாம். அவற்றுக்கான கட்டணத்தை விலைமதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பீடு செய்து குறிப்பிடுகின்ற தொகையைத் திணைக்களத்துக்குச் செலுத்த வேண்டும்.

நோயாளர் நலன்புரி சங்கத்தை சமூக சேவைத் திணைக்களத்தில் வலிந்துதவும் அமைப்பின் கீழ் பதிவுசெய்யப்படவேண்டும். அத்துடன் நோயாளர் நலன்புரி சங்கத்தில் உறுப்பினர்களாக வைத்தியசாலை உத்தியோகத்தர்களோ, ஊழியர்களோ அங்கத்துவம் வகிக்க முடியாது.– என்றுள்ளது.

இது தொடர்பில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தின் செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது –

சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றின் வருமானத்தை எமது சங்கத்துக்கு வழங்கியமை மகிழ்வைத் தருகின்றது. இந்த விடயங்கள் தொடர்பாக எமது சங்கத்தின் நிர்வாக சபையைக் கூட்டி ஆராய்ந்தோம். எமது சங்கத்தை சமூகசேவைத் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யும்படி கேட்டிருக்கின்றார்கள். நாம் எமது சங்கத்தை உருவாக்கும் போதே 2012 ஆம் ஆண்டு அதனைப் பிரதேச செயலக சமூக சேவைத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்துள்ளோம்.

இதில் எமக்கு சிக்கலை ஏற்படுத்துகின்ற விடயம், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் நலன்புரி சங்கத்தில் உறுப்புரிமை பெறக் கூடாதென்பதாகும். நோயாளர்களுக்கு வேண்டிய வசதிகளை அரசால் ஆற்ற முடியாது கால நீடிப்பு ஏற்படுமிடத்து அதனை நிவர்த்தி செய்வதற்காகவே எமது சங்கம் உருவாக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு அப்போதைய பிராந்திய சகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனால் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டு மாதிரி யாப்பும் வைத்திய சாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அந்த யாப்பைத் தழுவி பொதுச்சபை அங்கீகாரத்துடன் வைத்தியசாலையின் வளர்ச்சிக்காக ஒவ்வொரு படிநிலைகளிலும் முன்னின்று உழைத்த முன்னாள் வைத்திய அத்தியட்சகர்களையும், பிரதேச சபை தவிசாளர், பிரதேச செயலர் ஆகியோரையும் கொண்ட ஓர் ஆலோசனைச் சபையையும் உருவாக்கி நாம் திறம்பட செயற்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருக்கும் பகுதித் தலைவர்களுக்குமே தெரியும் வைத்தியசாலைக்கு என்ன உதவிகள் தேவை என்பதும், நோயாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும். எம்மை விட அவர்களுக்குத்தான் அதிகம் தெரியும். ஆகவே, அவர்களை நோயாளர் அபிவிருத்திச் சங்கத்திலிருந்து நீக்கினால் வைத்தியசாலைக்கும் நோயாளர் நலன்புரி சங்கத்துக்குமிடையில் பெரிய இடைவெளி ஏற்படும் என்று எண்ணுகின்றேன்.

எமது வைத்தியசாலையில் பல உத்தியோகத்தர்கள் ஆயுட்கால உறுப்பினர்களாக இணைந்துள்ளார்கள். யாப்பின் பிரகாரம் ஒருவரை உறுப்புரிமையிலிருந்து நீக்குவதாயின் அவர் சித்த சுவாதீனமற்றவராக இருக்கவேண்டும், தாமாகவே பதவி விலகுதல் வேண்டும் அல்லது அவர் சங்கத்தால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். மேற்படி காரணங்கள் ஏதும் இல்லாவிட்டால் அவர் அவரது ஆயுள் முடியும் வரை உறுப்பினராகப் பதவிவகிப்பார். எக்காரணத்தைக் கொண்டும் அவரது உறுப்புரிமையை இரத்துச்செய்ய இயலாது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற ஒரு கட்டமைப்பே நோயாளர் நலன்புரி சங்கம். இந்தச் சங்கத்தின் தலைவராக திணைக்களத் தலைவரும், செயலாளராக பொதுமக்கள் பிரதிநிதியும், பொருளாளராக திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரும் கடமையாற்றுகின்றனர்.

நிதி கையாளுதல் தொடர்பில் இந்த அமைப்பு முறையே சரியான தொன்றாகும். உள்ளக, வெளியக கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கும் இந்த அமைப்பு முறையே சாலப் பொருந்தும். தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரையும் வெளியாரில் இருந்து நியமித்தால் எவ்வாறு உள்ளக, வெளியகக் கணக்காய்வை மேற்கொள்ள முடியும்.

சரியான முறையில் பொறுப்புக் கூறுந்தன்மையும் இருக்காது. ஆகவே, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் இந்த அறிவிப்பு நோளாளர் நலன்புரி சங்கங்களை மூடுவதற்கான அத்திபாரம் என்றே நான் கருது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவரின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

## கூட்டு எதிர்க்கட்சி முடிவு

கொழும்பு,ஏப்.29

தமிழீழத்தை உருவாக்குவேன் என்று கோசமிடும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் கருத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில், நாட்டைத் துண்டாட முயற்சிக்கும் இரா. சம்பந்தனுக்கு எதிராக நாடாளு மன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு கூட்டு எதிர்க்கட்சி உத்தேசித்துள்ளது என்று அந்த அணியின் நாடாளு மன்ற உறுப்பினர் பந்துல குண வர்த்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

கொழும்பில் உள்ள தமிழ் – முஸ்லிம் மக்கள் ஒருபோதும் சுயநிர்ணய உரிமையைக் கோரவில்லை. சர் வதேசப் புலி ஆதரவாளர்கள் தான் இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளனர். அவர்கள் வான வில் வடிவில் தமது போராட்டத்தை அதாவது பல நிறங்களில், பல வடி வங்களில் இதனை ஆரம்பித்துள்ள னர். தமிழீழத்தை அடைவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ள னர்.

> வடக்கு மாகாண சபையின் தீர்மானம் இன வாதத்தின் உச்சக் கட்டத்தை வெளிப்படுத்து கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது தேர்தல் அறிக்கையில், வடக்கு – கிழக்கு இணைந்த தனியாட் சிக்கான வலியுறுத்தலை முன்வைத்தி ருந்தனர்.

வடக்கு மாகாண சபையின் தீர்மா னம் இனவாதத்தின் உச்சக் கட் டத்தை வெளிப்படுத்துகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது தேர்தல் அறிக்கையில், வடக்கு - கிழக்கு இணைந்த தனியாட்சிக்கான வலியுறுத்தலை முன்வைத்திருந் தனர். தமிழக முதலமைச்சரும் இலங்கையில் தமிழீழம் உருவாக வேண்டும் என்று போராட்டத்தை முன்னெடுத்து - வருகின்றார்.

இதற்கு இணையான செயற்பாடு களை இங்குள்ள தமிழ்த் தலை வர்கள் முன்னெடுத்து வருகின்றனர். இத னால் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மா னம் கொண்டு வரப்படும் - என்று தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

## நேபாளம் - இலங்கை விமான சேவை ஆரம்பம்

கொழும்பு,ஏப்.29

30 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கைக்கான நேரடி விமான சேவை களை நேபாளம் ஆரம் பிக்கவுள்ளது. அதற்க மைவாக நேபாள நாட் டின் இமாலயா எயார் லைன்ஸ் நிறுவனம் காத் மண்டுவில் இருந்து கொழும்பு வரையிலான விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதுடன், 158 ஆசனங்களைக் கொண்டுள்ள ஏ-320 எயார் பஸ் விமானத்தை சேவையில் ஈடுபடுத்தப்பட வுள்ளது.

இதனிடையே மிஹின் லங்கா விமான நிறு வனமும் காத்மண்டுவுக் கான நேரடி விமானப் பயணங்களை ஆரம்பிப் பதற்குத் தீர்மானித்துள்ள போதிலும், இன்னமும் அதற்கான முடிவுகள் எடுக்கப்படவில்லை.

இந்த நவீன மய விமான சேவைகளின் ஆரம்பத் தோடு 10 மணித்தியாலங் களில் காத்மண்டுவுக்குச் செல்லும் பயணத்தை , 4 மணித்தியாலங்களில் முடித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என ஆசியபசுபிக் வலயத்தின் சுற்றுலா வாணிப வர்த்தக இணயத்தளம் தெரிவித் துள்ளது.

இதற்கு முன்னர் 1980 ஆம்ஆண்டுநேபாளத்தின் றோயல் விமான நிறுவ னத்தால்கொழும்புக்கான நேரடிச் சேவைகள் நடத் தப்பட்ட போதும் அதன் பின்னர் இலங்கையில் நிலவிய போர் காரண மாக அந்த விமானப் பய ணங்கள் நிறுத்தப்பட்டன.

நேபாளத்தின் நான்கா வது வர்த்தகச் சந்தையாக இலங்கையே இடம் பிடித் துள்ளது. இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் முதலிடங்களில் உள்ளன. (ற-ஜ-22)

## பிரச்சினைகளை தீர்க்க மக்கள் அமைச்சர்களைச் சந்திக்கலாம்

கொழும்பு, ஏப்.29

தத்தமது பிரதேசங்களில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக, சம் பந்தப்பட்ட அமைச்சர்களைச் சந்தித் திக்கும் வாய்ப்புக்கள் ஏற் படுத்திக் கொடுக்கப்படவுள் ளன.

இதற்காக ஒவ்வொரு மாதத்தி லும், நாடாளுமன்றம் கூடும் இரண்டாவது வாரத்தின் செவ் வாய்க்கிழமைகளில் பிற்பகல் 2 மணியில் இருந்து, அமைச் சர்கள் நாடாளுமன்றத்தில் தங்கியிருக்க வேண்டியுள்ளது.

இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன் வைக்கப்பட்டிருந்த பிரேர ணைக்கு அமைச்சரவையின் இணக்கம் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின் றது. (ற-ஜ-22)

## பிளாஸ்ரிக், கழிவுகளைக் கடலில் வீசுவதில் இலங்கை 5ஆவது இடம்

கொழும்பு,ஏப்.29

மிகப்பெரிய அளவில் பிளாஸ்ரிக் மற்றும் கனதியான கழிவுப் பொருள் களைக் கடலில் கொட்டும் பிரதான 20 நாடுகளிடையே இலங்கை 5 ஆவது இடத்தில் உள்ளது.

"இன்ரநஷனல் பிஸ்னஸ் ரைம்ஸ் சஞ்சிகை" உலகிலுள்ள 192 நாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தி, சமுத்திரத்துக்கு மிகப் பெரிய அளவில் பிளாஸ்ரிக் மற்றும் கனதியான கழிவுப்பொருள்களைச் சேர்க்கும் 20 நாடுகளைப் பெயரிட்டுள்ளது.

இவற்றுள் பிரதானமான ஐந்து நாடு களிடையே முதலாவதாக சீனாவும், இரண்டாவதாக இந்தோனேசியாவும் மூன்றாவதாக பிலிப்பைன்ஸும், நான் காவது இடத்தில் வியட்நாமும் உள்ளன.

இலங்கை ஆண்டொன்றில் கடலில் கொட்டும் பிளாஸ்ரிக் உள்ளிட்ட கனதி யான கழிவுப் பொருள்களின் தொகைப் பிரமாணம் 1.59 மெற்றிக் தொன் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இலங்கையின் ஒவ்வொரு நபரும் நாளொன்றுக்கு 5.1கிலோ கழிவுகளை சுற்றாடலில் வீசுகின்றனர். அவற் றிடையே 300 கிராம் பிளாஸ்ரிக் உள்ளடங்குகிறது. உற்பத்தி செய்யப் பட்ட கழிவுப்பொருள்களின் தொகை, சனத்தொகையால் பிரிப்பதன் மூலம் இந்தப் பெறுமதிகள் பெறப்பட்டுள் ளன.

இது தொடர்பாக சுற்றாடல் மற்றும் இயற்கை ஆய்வுகள் மையத்தின் ஒருங்கிணைப்பாளரான வாகந் தவல ராஹுப் லதேரர் தெரிவித்துள்ளதா வது:-

2025 ஆம் ஆண்டாகும் போது, இந்த நிலைப்பாடு மேலும் உச்சமடை யும்.

சீனாவின் துறைமுக அபிவிருத்தி திட் டம் காரணமாக கழிவுப் பொருள்கள் சமுத்திரத்தில் சேர்க்கப்படுவது 3.2 வீதத்தால் அதிகரிப்பதும் இதற்குக் காரணமாகியுள்ளது - என்று தெரி வித்துள்ளார். (ற-ஜ-22)

## கடந்த மார்ச் மாதத்தில் பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.29

கடந்த பெப்ரவரி மாதத்தை விட மார்ச் மாதத்தில் பணவீக்கம் அதிகரித்துள் ளது. பெப்ரவரி மாதத்தில் பணவீக்கம் நூற்றுக்கு 1.7 வீதமாக இருந்துள்ளது. மார்ச் மாதத்தில் அது நூற்றுக்கு 2.2 வீதம் வரை யில் அதிகரித்திருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

பொதுசன மதிப்பீடு மற் றும் புள்ளிவிவரங்கள் திணைக்களத்தால் வெளிப்பட்டிருந்த அறி வித்த லொன்றில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள் ளது.

பெரியவெங்காயம், நெத் தலிக்கருவாடு, மீன், பாண் மற்றும் மிளகாய்த் தூள் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள் ளன. அதே போன்ற உண வுகள் அல்லாத தொகுதி யில் மதுசாரங்கள், புகை யிலை மற்றும் போதைப் பொருள்கள் என்பனவற் றின் விலை அதிகரிப்பும் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொதுவாக இந்த ஆண் டின் மார்ச் மாத பாவனை யாளர் விலைச் சுட்டி அட்ட வணைபெப்ரவரிமாதத்தை விடக் குறைந்துள்ளது என்று அந்தத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாதத்தின் விலைச்சுட்டிஅட்டவணை 110.8 ஆக இருந்துள்ள தோடு, அது மார்ச் மாதத் தில் 110 வரையில் குறை வடைந்துள்ளது.

இந்த விதம் குறைவடை வதற்கு மரக்கறிகள், அரிசி, பச்சைமிளகாய், தேங்காய், சின்னவெங் காயம், வாழைக்காய், புளி ஆகிய உணவுப் பொருள்களின் பெறுமதி யில் ஏற்பட்ட மாற்றம் கார ணமாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-22)

## வடமேல் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் அமைக்க முடிவு

கொழும்பு, ஏப்.29

வடமேல் பல்கலைக்கழ கத்தின் கீழ் மருத்துவப் பீடமொன்றைப் புதிதாக ஆரம்பிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

வடமேல் பல்கலைக் கழகம் 1991 ஆம் ஆண் டில் தேசிய பல்கலைக் கழகமாகப் பிரகடனப் படுத்தப் பட்டிருந்ததோடு, தற்போது நான்கு கல்விப் பீடங்கள் அங்கு செயற் படுத்தப்பட்டு வருகின் றன.

புதிதாக நிறுவப்படவுள்ள இந்த மருத்துவ பீடம் குரு நாகல் போதனா வைத்தி யசாலையுடன் தொடர்பு படுத்தப்படவுள்ளது.

வடமேல் பல்கலைக்கழ கத்தின் மருத்துவபீடம் தொடர்பாகத் தேவைப் படும் காணியைக் கொள் வனவு செய்து, கட்டடங் களை நிர்மாணிப்பது மற் றும் அடிப்படை வசதி களை ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்பாடு கள் விரைவில் மேற்கொள் ளப்படவுள்ளன என்று உயர்கல்வி மற்றும்பெருந் தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (ற-ஜ-22)

# இராணுவ முகாமுக்குச் சம்பந்தன் முன்னறிவிப்பு செய்தே சென்றார்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.29

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம் பந்தன் பரவிப்பாஞ்சான் இராணுவ முகாமுக்குள், முன்னறிவிப்புச் செய்து விட்டே சென்றார் என்று இரா ணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்துள் ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஊடகங்களிடம் கருத் துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் சரியான நெறிமுறை களுக்கு ஏற்பவே பரவிப்பாஞ்சான் இராணுவ முகாமுக்குள் சென்றிருந் தார். அதுபற்றி இராணுவத்தால் எந்தப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்படவில்லை.

தனது பயணத்துக்கு முன்னதாக, யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடி யிருந்தார். தமது வருகை தொடர் பாக, யாழ்.படைகளின் தளபதிக்கு, தொலைபேசி மூலமும் அறிவித்தி ருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் இராணுவ முகாமுக்குள் அத்துமீறி நுழைய வில்லை. அதனால் எந்தப் பொலிஸ் நிலையத்திலும், முறைப்பாடு செய்யப்படவில்லை.

முக்கிய பிரமுகர்களின் வருகை தொடர்பாக, முன்கூட்டியே அறி விப்பது பற்றி, கிளிநொச்சிப் படை களின் தளபதி, வடக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் தொலை பேசி மூலம் உரையாடியிருந்தார். அது முறைப்பாடு அல்ல - என்று தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசிலிருந்து சுதந்திரக் கட்சி இரண்டு வருடங்களில் வெளியேறும்

## அமைச்சர் பிரியதர்சன யாப்பா கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.29
இரண்டு வருடங்களுக்குத் தான் தேசிய அரசில் இருப்போம். அதன் பின்னர் தேசிய அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறும்.- இவ்வாறு அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசு அமைத்துள்ளோம் என்பதற்காக, ஐக்கிய தேசியக் கட்சியின் வாலாக எம்மை நினைத்து விடக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டு பிரதான கட்சிகளுக்கும் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை. இதனால் நாட்டின் நிலைமைகளைச் சமாளிக்கவும், சர்வதேச சிக்கல்களிலிருந்து மீண்டெழும் நோக்கிலும் தேசிய அரசுக்கு ஒத்துழைத்தோம்.
இரண்டு வருடங்களுக்கே தேசிய அரசின் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டோம். மோசமாக காணப்பட்ட நாட்டின் நிலைமைகளைச் சரி செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கருதினார்கள். அதற்காகவே நாம் ஒத்துழைப்பு வழங்கினோம். கட்சி தாவி ஒரு கட்சியைப் பலப்படுத்தும் அரசியல் கொள்கை மட்டுமே கடந்த காலங்களில் இருந்தது. இந்த முறை அவ்வாறு இல்லாது இரண்டு கட்சிகளின் உறுப்பினர்களும் கட்சியை விட்டு வெளியேறாது பொது உடன்படிக்கையில் இணைந்து ஆட்சி அமைத்துள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சிக்கு முன்னுரிமை என்றோ அவர்களின் தயவில் ஆட்சி அமைத்துள்ளோம் என்றோ சொல்ல முடியாது. தேசிய அரசு நிரந்தரமானது அல்ல.

> இரண்டு வருடங்களுக்கே தேசிய அரசின் உடன் படிக்கையை ஏற்றுக் கொண்டோம். மோசமாக காணப்பட்ட நாட்டின் நிலைமைகளைச் சரி செய்ய வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டணிக் கட்சிகள் எப்போதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தியே செயற்பட்டுள்ளன. அதனை நாம் மறுக்கவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சி பலவீனமடையும் சந்தர்ப்பத்தில் கூட்டணிக் கட்சிகள் எம்முடன் முரண்பட்ட வரலாறுகள் உள்ளன. இப்போது அவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது.
இப்போதும் அவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது. இதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை மையப்படுத்தி கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். மே தினக் கூட்டத்தையும் இரண்டு பிரிவுகளாகவே நடத்துவதாகக் கூறுகின்றனர்.
நாம் இப்போது பிளவுபடுவது எமது கட்சியையும், எமது அடுத்த கட்ட அரசியல் பயணத்தையும் பாதிக்கும். அதனை விளங்கிக் கொண்டு செயற்பட வேண்டும் - என்று தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

## யோசித தொடர்பான விசாரணை இன்னமும் நிறைவடையவில்லை

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.29
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன் யோசித ராஜபக்ச தொடர்பில் கடற்படையால் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.
இந்த விசாரணைகளின் போது, யோசித இராணுவச் சேவையில் இணைந்த விதம் குறித்தும், அவரது வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பிலும் தகவல்கள் தேடப்பட்டு வருகின்றன.
லெப்டினன்ட் யோசித ராஜபக்ச கடந்த 2016 ஆம் ஆண்டு பெப்ரவ்ரி 29 ஆம் திகதி சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டார்.
வேறு விடயங்கள் தொடர்பில் அவருக்கு எதிராகச் செயற்படுத்தப்படும் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், கடற்படையால் அவர் குறித்து முன்னெடுக்கப்படும் விசாரணைக்கு அவர் அழைக்கப்பட்டுவார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-ஐ-5)

## மத்தல சர்வதேச விமான நிலையத்தை கைப்பற்ற சீன நிறுவனங்கள் போட்டி

கொழும்பு, ஏப்.29
அம்பாந்தோட்டை - மத்தல சர்வதேச விமான நிலையத்தைக் கைப்பற்றும் போட்டியில் மூன்று சீன நிறுவனங்கள் களமிறங்கியுள்ளன.
மத்தல சர்வதேச விமான நிலையம் ஒரு ஆண்டுக்குள் தனியார் மயப்படுத்தப்படவுள்ளது என்று சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.
தனியார் மயப்படுத்தப்படவுள்ள மத்தல விமான நிலையத்தை, பொறுப்பேற்று நடத்துவதற்கு மூன்று சீன தனியார் துறை நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள், தமது யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளன.
இந்த விமான நிலையத்தை சீன அரசே நிறுவியதால், இதனைப் பொறுப்பேற்பதற்கான திட்டத்தைச் சீன அரசு முன்வைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.
விமான நிலையத்தை கட்டுவதற்குப் பெறப்பட்ட கடன்களை அடைப்பதற்கே இலங்கை அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.
தற்போது, கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் வருமானத்தின் மூலமே, மத்தல விமான நிலையத்தை அமைக்க சீனாவிடம் பெறப்பட்ட கடன் அடைக்கப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் இவ்வாறு செய்யப்பட மாட்டாது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
209 மில்லியன் டொலர் செலவில் மத்தல விமான நிலையத்தை அமைப்பதற்கு, சீனா 190 மில்லியன் டொலர் கடன் வழங்கியுள்ளது. (ற-ற-ஐ-5)

## முக்கூட்டு மருந்துக்குப் பதிலாக இனி இரு எதிர்ப்பு மருந்துகள்

கொழும்பு, ஏப்.29
போலியோ நோய்க்கு இது வரையிலும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த முக்கூட்டுத் தடுப்பு மருந்துக்குப் பதிலாக எதிர்வரும் 30 ஆம் திகதியிலிருந்து இரண்டு எதிர்ப்பு மருந்துகள் உள்ளடக்கிய தடுப்பு மருந்து வழங்கப்படும் என்று- உயிர் கொல்லி நோய் ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளரான வைத்திய நிபுணர் திருமதி பபாபலிஹவடன தெரிவித்துள்ளார்.
போலியோ நோயைப் பரப்பும் வைரஸ் தொகுதிகளில் மூன்றில் இரண்டாவது உலகிலிருந்து அற்றுப் போயிருப்பதால், இந்த இருவித தடுப்பு மருந்துகளையும் வழங்குவதற்கு உலக சுகாதார அமைப்பு பரிந்துரை செய்துள்ளது.
அதன் மூலம் உலகளாவிய ரீதியில் போலியோ நோயை ஒழிக்கும் வேலைத்திட்டத்துக்கு இலங்கையும் இணைந்துள்ளது என்று பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.
ஏற்கனவே விநியோகிக்கப்பட்டிருக்கும் முக்கூட்டு தடுப்பு மருந்தை மீளச் சேகரித்து அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-22)

## ஜனாதிபதியை மிரட்டியவர் கட்டுநாயக்காவில் சிக்கினார்

கொழும்பு, ஏப்.29
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, சமூக வலைத்தளத்தில் (பேஸ்புக்) அச்சுறுத்தல் விடுத்தவர், கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய் யப்பட்டுள்ளார்.
யக்கலவைச் சேர்ந்த இந்தச் சந்தேகநபர், மலேசியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட நிலையில், கட்டுநாயக்கா விமான நிலையம் திரும்பிய போது குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். மலேசியாவில் நுழைவிசைவு காலாவதியான நிலையில் இவர் தங்கியிருந்தார் என்று கூறப்படுகிறது.
பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரரைக் கைதுசெய்து சிறைப்பிடித்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக, ஜனாதிபதிக்கு தனது முகநூல் பக்கத்தில் உயிர் அச்சுறுத்தல் விடுத்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-5)

## கிருலப்பனைக்கூட்டத்தில் மகிந்த கலந்துகொள்வார்

### அடித்துக் கூறுகின்றார் பசில்

கொழும்பு, ஏப்.29
என்ன அச்சுறுத்தல் வந்தாலும் மகிந்த ராஜபக்ச கிருலப்பனை மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்வார் என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாம் சிறிய குறைகளை நிவர்த்தி செய்து கொண்டு, முன்னோக்கி நகர வேண்டும். சில குறைபாடுகளுக்கு நாமும் பொறுப்புச் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.
நாடு முழுவதிலும் சென்று பணம் வழங்கி கிருலப்பனையில் இடம்பெறவிருக்கும் மே தின பேரணிக்கு ஆள் சேர்ப்பதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்தாலும், அது பொய்யானது. தற்போதுள்ள நிலைமைக்கு மக்கள் கிருலப்பனைக்கு வருவதற்கு மிகவும் ஆர்வமாக உள்ளார்கள். பணம் பகிர்ந்து மக்கள் அழைக்கத் தேவை இல்லை என்று- தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

## பொலிஸ் உத்தியோகத்தர்களின் பதவி உயர்வை ஆராயக் குழு

கொழும்பு,ஏப்.29
இலங்கை பொலிஸ் சேவையின் உதவிப் பொலிஸ் பரிசோதகர்கள் உள்ளடங்களாக அதற்குக் கீழேயுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுகள் தொடர்பான சிக்கல்களை ஆராய்ந்து ஆணைக்குழுவுக்குப் பரிந்துரை செய்வதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஐவர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளது.
இதேவேளை - பொலிஸ் வேவையின் ஒவ்வொரு தரங்களையும் சேர்ந்த ஆண், பெண் உத்தியோகத்தர்கள் பதவி உயர்வுகளோடு சம்பந்தப்படும் தத்தமது சுய யோசனைகள், கருத்துக்கள் அல்லது சிக்கல்கள் உள்ளிட்ட பதவி உயர்வுகள் தொடர்பாக எந்தவொரு முறைப்பாட்டையும் எழுத்து மூலமான முன்வைப்பதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு வாய்ப்பளித்துள்ளது .(ற-ஐ-22)

# அரச ஊடக நிறுவனங்கள் அடுத்த மாதம் மறுசீரமைப்பு

## முக்கியஸ்தர்கள் பலருக்கு மாற்றம்

கொழும்பு, ஏப்.29
அரச ஊடக நிறுவனங்களில் முக்கியஸ்தர்கள் பலரை மாற்றம் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளதுடன், அடுத்த மாதம் ஆரம்பத்தில் இந்த மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் - தெரிவிக்கப்படுகின்றன.
அரசின் கீழுள்ள தொலைக்காட்சிச் சேவைகள் மற்றும் பத்திரிகை நிறுவனங்களில் உயர் [illegible] கணிசமான [illegible] ளாதார மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களைச் சரியான முறையில் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்குத் திறனற்று இருப்பதாக அரசால் மேற்கொள் [illegible] வொன்றில் தெரியவந்துள்ளது.
இதன் காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று - தெரியவந்துள்ளது. அதற்கமைய வெசாக் பௌர்ணமி தினத்தின் பின்னர் அரச ஊடக நிறுவனங்களின் உயர்மட்டப் பதவிகளில் மிகப் பெருத்த மாற்றங்கள் நிகழக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ற-ஐ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## என்னவோ நடக்குது மர்மமாய் இருக்குது

இலங்கை வாழ் தமிழ் மக்கள், மீண்டும் மனித உரிமை ஆணைக்குழுக்களை நாடி ஓட வேண்டிய நிலைமை மீண்டும் உருவாக்கப்படுகிறதா என்ற பென்னம் பெரும் வினா மேலெழுந்து வருகிறது.

நல்லாட்சி அரசு பதவிக்கு வந்த ஓராண்டு காலத்துக்குள்--

இத்தகைய ஓர் அதர்மம் முளைத்து எழும் என்று அவர்கள் நினைத்தும் பார்த்தது இல்லை.

பொலிஸாரால் அல்லது இராணுவத் தரப்பினரால் கைது செய்யப்படும் எவர் குறித்தும், காரணத்தை விளக்கி உறவினர்களுக்கு, உத்தியோகபூர்வமாக பதிவுப் பத்திரம் வழங்கப்பட்டாக வேண்டும் என்பது நடைமுறை.

ஆனால், மகிந்த ஆட்சியாளர் காலத்தில் அது குறித்து எந்தவித அக்கறையும் காட்டப்படவில்லை என்பது பரகசியமானது.

அதே பாதையில், மைத்திரியின் அரசு தடம் பதித்து வருவது மெல்ல, மெல்ல பெருத்துப் பருத்து வருகிறது. ஒரு வகையில், மகிந்த அரசை விட, நல்லாட்சி அரசும் அதே தடத்தில் தடம் பதித்து வருகிறது!

மேலும், இராணுவத் தரப்பிடம் சரணடைந்தவர்கள், வடக்கு மற்றும் கிழக்கில் ரி.ஐ.டியின் கைது வேட்டை தணிவதாக இல்லை. முன்னரை விட, அமசடக்கமாக, மனித உரிமைகள் கடாசப்பட்டு, தமிழ் இளைஞர்கள், முன்னாள் போராளிகள் மீது கூரிய கண் வைக்கப்படுவதாகத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன!

மொத்தத்தில்--

தமிழ் மக்கள் மீண்டும் ஒரு தடவை, அனைத்துலக மனித உரிமை ஆணைக்குழுக்களை நாடி வேகமாக ஓடவேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை அரசினால் உருவாக்கப்பட்டுள்ளது.

ஏன், புனர்வாழ்வு பெற்றவர்கள் கூட, மீண்டும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என்ற தகவல்கள் கசிந்து வருகின்றன.

மறுபுறத்தில் பார்த்தால்--

ஆனால், முன்னர் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த தமிழ் இளைஞர்கள் பலர் காணாமற் போகச் செய்யப்பட்டனர் என்பதே உள்ளார்ந்த உண்மை.

இவற்றைக் கூர்ந்து நோக்கும்போது--

என்னவோ நடக்குது மர்மமாய் இருக்குது; ஒன்றுமே புரியவில்லை உலகத்திலே-என்ற தமிழ்ச் சினிமாப் பாடலே முன்னே வந்து நிற்கிறது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை மட்டும் அன்றி, அவர்களின் வாழ்வியல் நலன்கள் கூட, நல்லாட்சி அரசால், முந்தைய மகிந்த ஆட்சியாளர்களைவிட கீலம் கீலமாக, அதி வேகத்திலும், வெளிப்படையாகவும், உள்ளார்ந்தும் புதைக்கப்படும் எனக் கொள்ளலாம் அல்லவா?

எல்லாமே என்னவோ நடக்குது மர்மமாய் இருக்குது...!

# வர்த்தகத் துறையிலும் கால்பதித்த கனடாவாழ் தமிழர்கள்

அருட்கலாநிதி அமுது
ஜோசப் சந்திரகாந்தன்,
இறையியல் பேராசிரியர்,
றொறன்ரோ
பல்கலைக்கழகம்.

**தந்தைசெல்வாவின் 39ஆவது நினைவு தினத்தில் ஆற்றிய உரையின் இறுதிப்பகுதி**

எமது எதிர்கால மாணவ சமூகம் பல உலகளாவிய பெருமைகளை பெற வைப்பது எமது முதியோரினதும் பெற்றோரினதும் கற்றறிந்த மூத்த தமிழரினதும் சமூகக் கடமையாகும்.

### கலை, பண்பாட்டு உயர்ச்சிகள்

கடந்தபல ஆண்டுகளாக கோடை காலத்தின் ஒவ்வொருவார இறுதியிலும் றொறன்றோ, மார்க்கம், மிசிசாகா, மொண் ட்ரியல் ஆகிய நகர்களில், பரதநாட்டிய, மிருதங்க, வீணை, பண்ணிசை அரங்கேற் றங்கள் நிறையவே இடம்பெற்று வரு கின்றன.

கனடாவில், இருபதுக்கும் மேற்பட்ட, நல்ல தரம்மிக்க நடன பாடசாலைகளிலும் இசைக் கல்லூரிகளிலும் பட்டதாரி ஆசிரியர்கள் நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகளுக்குப் பயிற்சி தருகின்றனர். சிலர் இந்தியாவில் இயங்கும் முன்னணிக் கலைக் கல்லூரிகள், பல்கலைக்கழகங் களில் இந்தத் துறைகளில் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

பரத நாட்டியத்தைப் பல்கலைக்கழக நிலைக்கு உயர்த்த வேண்டும் என்பதில் தமிழர் அல்லாத பல நடனவியல், அரங்கியல் பேராசிரியர்கள் முனைப்புக் காட்டி வருகிறார் கள். பல நூற்றாண்டு கால வளர்ச்சி கண்ட தமிழ் அரங்காற்றுக் கலையின் உன்னத தூலங்களை உயர் கல்வி நிலைய அளவில் கொண்டு சேர்த்து கற்பித்தல் செய்வது மிகவும் வேண்டப்படுவதாகும். எமது பண்பாட்டின் வேர்களை நீண்ட காலத்துக்கு உறுதியாக வளர்ப்பதற்கு இவை உதவியாய் அமையும்.

### விழாக்களும் உண்டாடுதல்களும்

நாடு கடந்த நிலையில் பரவி வாழும் இனங்களின் உள்ளக சமூக வலைப்பின்னல்கள் தவிர்க்க முடியாதவை என முன்னர் பார்த்தோம். சமூக விழாக்கள், கொண்டாட்டங்கள், ஒன்று கூடல்கள், உண்டாடுதல்கள் என்பன தமிழர் மத்தியில் ஏனைய இனக் குழுமங்களை விட எண்ணுக் கணக்கில் சற்று அதிகமாகவே காணப் படுகின்றன. எமது பூர்வீக இணைப்புக் குடும்பங்களின் ஓர் அம்சமாகவும் இவற்றை நோக்கலாம்.

பெருவிழாக்கள், கொண்டாட்டங்களுக்கு முழுமையான ஒழுங்குகள் செய்து, சோடினைகள் முதல் விருந்துப்பரிமாறல் ஈறாக அனைத்தையும் கணினி வழித் திட்டமிடல் வரையாக ஒழுங்கு செய்து கொடுக்கும் வர்த்தக அமைப்புக்களை பல்கலைக்கழக பட்டதாரிகளான இளைஞர் பகுதி நேர வேலையாகவும் செய்து வருகின்றனர்.

திருமண வைபவங்கள், அரங்கேற்றங்கள், பிறந்த நாள் கொண்டாட்டங்கள், வியாபார வர்த்தக நிறுவனங்களின் ஆண்டு விழாக்கள், பரிசு வழங்கல் நிகழ்வுகள் போன்றவை பெரிய பணச் செலவிலேயே இப்போது இடம்பெறுகின்றன. பதினைந்து இருபது வருடங்களுக்கு முன்பு கிறிஸ்தவ தேவாலயங்களின் நிலக்கீழுள்ள மண்டபங்களிலேயே இத்தகைய நிகழ்வுகள் கொண்டாடப்பட்டன. இன்று இத்தாலியர், சீனர்களுக்கு அடுத்ததாக பெருவிழா மண்டபங்களின் சொந்தக் காரர் தமிழர்களே என்று கூறும் அளவுக்குப் பல மில்லியன் டொலர் பெறுமதியான மண்டபங்களை தமிழ் வர்த்தகர்கள் சொந்தமாக்கியுள்ளனர். இந்த மாற்றம் கடந்த இருபது வருடங்களில் இவற்றை சொந்தமாக்கியுள்ள தமிழரும், நுகரும் தமிழரும் பொருண்மிய வளர்ச்சியில் மிகவும் வளர்ந்துள்ளனர் என்பதையும் சுட்டி நிற்கின்றது.

**சிறு குழுமங்களுக்கிடையிலான நல்லுணர்வும் புரிந்துணர்வும் விட்டுக் கொடுத்தலும் ஒருமைப்பாடும் கனடாவைத் தமது பிறந்த நாடாகவும் தாம் வளர்ந்த சொந்த வீடாகவும் கொள்ளும் எமது பிள்ளைகளின் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல ஒற்றுமை மரபை வருங்கால சொத்தாக விட்டுச் செல்லும்.**

### மருத்துவ சுகவாழ்வு போக்குகள்

தேசிய அளவிலும், சர்வதேசப் பரப்பிலும் கனேடிய தமிழ் மருத்துவர்கள் இரண்டு பெரிய அமைப்புக்களை நிறுவி (Canadian Medical and Dental Association, International Medical Health Organization) கனே டிய தமிழ் மக்களுக்கும், தாயாக மக்களுக்கும் நேர்த்தியான தேவையான பெரும் பணி களை ஆற்றி வருகின்றார்கள். தாய்மை நிலையில் உள்ள இளம் தமிழ்த் தாய்மார் பிள்ளை களுக்கு முன்னுரிமை கொடுத்து எமது தாயகத்தில் பெரிய அளவில் பல திட்டங்களை இவர்கள் முன்னெடுத்த செய்து வருகின்றார்கள். IMHO வின் தலைவர் மருத்துவர் இலம்போதரன் இதில் பெரும் பங்கு வகிக்கின்றார்.

கலாநிதி வசந்தகுமார் ஆரம்பித்த Computek கல்லூரி கணினிப் பயிற்சியோடு மருத்துவ உதவியாளர் சான்றிதழ் நெறிப் பயிற்சிகளையும் ஆரம்பித்து பலநூறு கணினி வல்லுநர்களையும், மருத்துவ உதவியாளர்களையும் தமிழர் மத்தியிலும், தமிழர் அல்லாதவர் மத்தியிலும் நெறிப்படுத்தியுள்ளார்.

பத்து வருடங்களுக்கு முன்பு கணபதிப்பிள்ளை தெய்வேந்திரன், கலிஸ்டா தெய்வேந்திரன் ஆகியோர் இணைந்து ஆரம்பித்த கனடா சுகாதாரப் பராமரிப்பு மாநாடு (Health



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Care Conferences canada - HCCI) என்ற நிறுவனம் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட பல்லினங்களை சார்ந்த மருத்துவர்கள், மருத்துவத் தாதிகள், சமூக சேவையாளர்கள், மருத்துவ மாணவர்கள், மனநோய் பராமரிப்பு உதவியாளர்கள், காவல்துறையினர் பங்கெடுத்து தொழில் சார் சான்றிதழ்கள் பெறுவதற்கு வழிசமைத்துள்ளது. மரணநோய், மற்றும் இறுதிப் காலப் பராமரிப்பு, மனநோயாளர் பராமரிப்பு ஆகிய துறைகளுக்கு முன்னுரிமை கொடுத்து இந்தத் துறைகள் சார்ந்த அறிஞர்களை வரவழைத்து ஆண்டு தோறும் இந்தத் தொடர் கற்கை மாநாடுகள் நடத்தப்படுகின்றன.

கனடாவின் பல பல்கலைக் கழகங்களிலும் மற்றும் அமெரிக்கா, கரிபியன் நாடுகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் மாணவர்கள் மருத்து வத் துறை சார்ந்த கல்வியை மேற்கொண்டு வருகின்றனர். ஓரிரு கனேடியத் தமிழ் மாணவராவது உலகின் அதியுன்னத பல்கலைக்கழகங்களாகிய ஹார் வர்ட், கேம்பிரிட்ஜ் போன்ற வற்றில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ள னர். ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் கட்டடத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற ஜெகன் வின்செண்ட் டி பால் ஜப்பான், சிங்கப்பூர் நாடுகளில் அந்தத் துறையில் மதி யுரை நிபுணராகப் பணியாற்றுகின்றார். இவர் போன்றவர்களின் செழுமை இனிவரப் போகும் உயர்வுகளும் வழிகாட்டியாகும்.

வசந்தம் உளவளத்துறை நிலையம் தமிழ் முதியோரினதும் குடும்பங்களினதும் நன்மை கருதியே பதின் மூன்று ஆண்டுகளுக்கு முன் தொடக்கி வைக்கப்பட்டது. இன்றுவரை தமிழரின் நிறைவான சுகாதார வாழ்வுக்கும் உளவள முழுமைக்கும் இந்த நிறுவனம் பெரும்பணி செய்கின்றது.

**வர்த்தக விருத்திகள்**

கனேடிய தமிழர்கள் வர்த்தகத் துறையில் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். வீடு விற்பனைத் துறையிலும், உணவு தயாரிப்பு, விற்பனை, உணவக நிர்வகிப்பு, பெருவிழாக்கள், கொண்டாட்டங்களுக்கு முழுமையான ஒழுங்குகள் செய்து, சோடினைகள் முதல் விருந்துப் பரிமாறல் ஈறாக அனைத்தையும் கணினி வழித் திட்டமிடல் வரையாக வளர்ச்சி கண்டுள்ளனர். கனடாவில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள், நிறுவனங்கள், சிறிய, பெரிய முதலீடுகளுடன் தமிழர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

ஐந்து முதல் பத்து மில்லியன் டொலர் வரையிலான முதலீட்டுடன் வர்த்தகத் துறையில் முன்னேற்றம் கண்டுள்ள தமிழர்களின் எண்ணிக்கை கூடிவரு தல் கண்கூடு. சிறிய கட்டடங்கள், நிலக்கீழ் அறை களை வடிவமைத்தல், சமையலறை, குளியல் அறைகள் அமைத்தல் போன்று பல வீட்டலங்காரம், வீடமைப்பு சார்ந்த வேலைகளிலும், ஜன்னல், கதவு, புதுப்பித்தல், வெளிப்புற நடைபாதை கள் வரைபு செய்தல் ஆகிய பல்வேறு துறைகளில் உரிய பயிற்சியோடு தனியார் வர்த்தகமாக சிலர் செய்து வரு கின்றனர். சுருக்கமாக, வர்த்தகம் சார்ந்த எல்லாத் துறைகளிலும் தமிழர் கள் தமது சிறகுகளை அகல விரித்து ஈடுபட்டு வருகின்றனர்.

தொழில் சார் ஏற்றத் தாழ்வுகளை ஒரு காலத்தில் கெட்டியாகப் பிடித்திருந்த சமூக நிலை மாறி, வாழ்வாதாரத் துக் கும் பொருண்மிய வளர்ச்சிக்கும் ஏதுவாய் அமையும் எந்தத் தொழில் துறையையும் மதித்து ஏற் கும் வகையில் தமிழ்ச் சமூகத் தின் மன நிலைகள் போக்குகள் ஆரோக் கியமான திசை யில் செல்கின்றனஎன்றுகூறு தல் தவறாகாது.

> **தொழில் சார் ஏற்றத் தாழ்வுகளை ஒரு காலத்தில் கெட்டியாகப் பிடித்திருந்த சமூக நிலை மாறி, வாழ்வாதாரத்துக்கும் பொருண்மிய வளர்ச்சிக்கும் ஏதுவாய் அமையும் எந்தத் தொழில் துறையையும் மதித்து ஏற்கும் வகையில் தமிழ்ச் சமூகத்தின் மனநிலைகள் போக்குகள் ஆரோக்கிய மானதிசையில் செல்கின்றன என்று கூறுதல் தவறாகாது.**

கனேடியத் தமிழரின் வர்த்தக வீச்சுகளை மேலே தூக்கி செல்வதற்கு கனேடிய தமிழ் வர்த்தக சம் மேளனம் (Canadian Tamil Chamber of commerce) ஓரளவு வழிகாட்டி வருகின்றது. ஆயி னும் சிறிய முதலீடுகளுடன் வர்த்த கத்துறையில் ஈடுபட்டவர்கள் சிலர் பெரிய பின்னடைவுகளையும் சந்தித்துள்ளனர். கனேடிய தமிழ் வர்த்தக சம்மேளனம் இவர்களுக்கு உரிய முறையில் வழிகாட்டி நெறிப்படுத்துதல் வேண்டும்.

**பேரவைகள், அமைப்புகள் மன்றங்கள்**

கனேடிய தமிழர் பேரவை தமிழ் ஈழச் சங்கம் தேசிய மக்கள் அவை போன்ற பெரிய அமைப்புகளும் பல பாடசாலைகளினதும் கல்லூரிகளினதும் பழைய மாணவர் சங்கங்களும் இளையோர் அமைப்புக்களும் பல்வேறு முதியோர் அமைப்புக்களும் ஊர்கள் சார்ந்த சங்கங்கள் இணையங்களுமாக கனேடிய தமிழர் பல நூறு அமைப்புக்களை ஏற்படுத்தி பழைய உறவுகளை வளர்த்தும் தாம் வேர்விட்டு வளர்ந்த மண்ணும் மக்களும் வாழ்வைத் தொடர்வதற்காக அவர்களுக்கு உதவிகள் நல்கியும் செயற்பட்டு வருகின்றனர். பல பழைய மாணவ சங்கங்கள் இதில் முன்னிலை வகிக்கின்றன.

இத்தகைய அமைப்புக்கள் சமூக வாழ்வின் சிக்கல் நிறைந்த பலதரப்பட்ட உறவு நிலைகளைத் தக்க வைக்கவும் சிறிய பெரிய அளவில் தனிமனிதர்களும் குடும்பங்களும் தமது குழும இருத்தலை இனம்காட்டவும் இந்த அமைப்புக்கள் தேவைப்படுகின்றன.

இவற்றுள் அதிகமானவை பரஸ்பர நல்லுணர்வுடனும் ஒற்றுமையுடனும் செயற்பட்டாலும் சிலவற்றுக்குள்ளேனும் பிரிவினைவாதப் போக்குகள் பதவிப் போராட்டங்கள் இல்லை என்று அடித்துக் கூற முடியாது. இவை பிரிவினைகளை வளர்க்காமல் தமிழ்த் தோட்டத்தில் வளரும் பன்னிற மலர்களாக தமிழ்ச் சமூகத்தை அந்த அழகிய கனடா நாட்டில் அணி செய்ய வேண்டும்.

சிறு குழுமங்களுக்கிடையிலான நல்லுணர்வும் புரிந்துணர்வும் விட்டுக் கொடுத்தலும் ஒருமைப்பாடும் கனடாவைத் தமது பிறந்த நாடாகவும் தாம் வளர்ந்த சொந்த வீடாகவும் கொள்ளும் எமது பிள்ளைகளின் பிள்ளை களுக்கு ஒரு நல்ல ஒற் றுமை மரபை வருங்கால சொத்தாக விட்டுச் செல்லும்.

**இங்கிருந்து எங்கே**

யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோண மலை, மலையகம் என்ற பிராந்தியப் பிரிவினைகள், ஊர் வழிவரும் பாகுபாடுகள், கற்றோர் மற்றோர் என்றும் உடையார் இல்லார் என்றும், ஆங்கில மயமானோர் தமிழ் மட்டும் பேசுவர் என்ற படிமுறைகளும், சாதியம் சார்ந்த வேறுபாடுகள் ஏற்றத் தாழ்வுகளும் கனடாவில் பரந்து வாழும் தமிழரிடம் இல்லை என்று தீர்க்கமாகக் கூற முடியாது. மனதுத்துருவ வேர்கள் இருக்கும் வரை கருத்துருவ தூலங்கள் வளர்வதை நிறுத்த முடியாது. சைவம் வேதம் என்ற பிரிவு பெரிதாக அழுத்தப் படுவதில்லை.

ஆயினும் அது முற்றாகவே இல்லை என்றும் கூற முடியாது. அத்தகைய வளர்ச்சிக்குப் பல காரணிகள் குந்தகமாய் இருந்தன, இருக்கின்றன. அதீத தன்னலப் போக்கும், போலித்தனமான தலைமைகளும், குறுக்கு வழிகளில் இலாபமும், வசதிகளும் பிரபலமும் தேடும் கும்பல்களும் தங்களை முன்னிலைப்படுத்தி வரும் வரை நேர்மையானவர்கள், சமூக நலன் விரும்பிகள் பின்வரிசைக்கு செல்வது தவிர்க்க முடியாதது.

சிறிது காலமாகத்தான் சுதந்திரமாகவும், ஓரளவு கட்டற்ற தன்மையிலும், வெளிப்படையான சமூகஅரசியல் விமர்சனப் போக்குடனும் தமிழ்ச் சமூகம் சிந்திக்கவும் செயற்படவும் தொடங்கியுள்ளது. நீண்ட காலத்தில் இது நன்மை பயக்கும் என்பது எனது நம்பிக்கை.

புறநாட்டுத் தமிழரின் பாசமும் பணமும் போதும். அவர்களது அறிவும் அனுபவமும் ஆற்றல்களும் அவசியமில்லை என்று குறைத்து மதிப்பீடு செய்யாது, திறந்த மனத்துடன் எல்லாவற்றையும் உள்வாங்கி, பூகோளத்தின் பல பகுதிகளுடனும் நியதியான, நிலையான உறவுகளை சமூக, நிறுவன ரீதியான ஏற்படுத்தி வளர முயற்சி செய்வது உள்நாட்டுத் தமிழினத்துக்கு உகந்ததாகும்.

நவீன உலகத் தொடர்பாடல்களும் அதன் வழி வரும் பரந்த அறிவுசால் எண்ணக்கருக் களும், சிந்தனைகளும், நன்மைகளும், பூகோளமயமாதலின் பரந்துபட்ட விளைவுகளும், தமிழினத்தின் உலக ஒருமைப்பாடு பற்றி வளர்ந்து வரும் நல்லுணர்வுகளும், தென்னாசிய புலமைசார் தமிழ்த் தலைமைகளின் வழிகாட்டல்களும், பூகோளத் தமிழரின் கல்வி, அறிவியல், வர்த்தகம், தொழில் நுட்பம், மருத்துவம், பொருண்மிய மேம்பாடுகளும் மற்றும் இலக்கியம், கலைத்துவம், பண்பாடு, அறநெறி, சமயம், சமூக வாழ்வு போன்றவற்றில் ஏற்படும் சீரிய உயர்வுகளும் எதிர் காலத் தமிழினம் உலகளாவிய ரீதியில் உயர்ந்தோங்க வழி சமைக்கும்.

சென்ற ஆண்டு கனேடியத் தமிழர் பேரவையின் பொங்கல் விருந்து விழாவில் பிரெஞ்சு மொழியில் பேசிய கனடாவின் இன்றைய பிரதமர் ஜஸ்டின் ரூடோ கூறினார் : Nous savons quele Canada a reussi, culturellement, politiquement, economiquement en raison de notre diversite, non pasen depit de celui-ci (We know that Canada has succeeded-culturally, politically, economically-because of our diversity, not in spite of it.) கனடாவில் இனத்துவகலாசார, அரசியல், பொருண்மிய பன்மைத்துவம் இருந்தபோதும் கனடா ஒரு வலிமை மிக்க நாடாகவுள்ளது என்பதல்ல, மாறாக பல்லின பன்மைத்துவம் கனடாவில் உள்ளமையால் நாம் வலிமை பொருந்திய நாடாக விளங்குகிறோம் - என்றார்.

இந்த மனநிலை தொடரும் வரை கனடாவில் தமிழரின் வாழ்வும் வளமும் மேலோங்கி வளரும். தமிழர் அங்கு பரவிப் படர்ந்து, கிளை பரப்பி, பல உன்னதங்கள் எய்தி தமது தொன்மைத் தாயகம் நோக்கித் தலை வணங்கி, தமது இன்றைய தாய் நாடாம் கனடாவில் தலை நிமிர்ந்து நிற்பார்கள், நிலைப்பார்கள்.

(முற்றும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகளின் பற்றாக்
# கடும் நெருக்கடிக்குள் ஐ

## நிதி நிலைமையும் படு மோசம்

டமஸ்கஸ், ஏப்.29
ஐ.எஸ். அமைப்புக்குப் பண நெருக்கடியுடன், போராளிகள் பற்றாக் குறையும் ஏற்பட்டுள்ளது எனக் கூட்டுப்படைத் துணைத் தளபதி கிறிஸ் டென் கடந்த செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்குத் தெரிவித்தார். இர கசியமாகப் பெறப்பட்ட ஐ.எஸ். ஆவணங்களின் தகவல்களின் அடிப் படையில் இந்தத் தகவலை அவர் தெரிவித்தார்.

அவர்களது நிதி நிலைமையும் மோசமடைந்துள்ளது. இதனால் மின் சாரத்தைக் கட்டுப்பாட்டுடன் பாவிக்கவும், வாகனங்களைச் சொந்தப் பாவனைக்குப் பயன்படுத்த வேண்டாம் எனவும் ஐ.எஸ். அமைப்பினர் கட்டளையிட்டுள்ளனர் என துணைத் தளபதி மேலும் தெரிவித்தார்.

அத்துடன் தளர்ந்த மனநிலையுடன் ஐ.எஸ். போராளிகள் காணப்படு கின்றனர். அவர்களை மருத்துவர்கள் மூலம் உற்சாகப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் வெளிநாடுகளில் இருந்து ஆயிரத்து 500 பேரில் இருந்து இரண்டாயிரம் பேர் வரை ஒவ்வொரு மாதமும் போராளிகளாக இணைந்து வந்தனர். ஆனால் தற்போது அந்த நிலை வீழ்ச்சியடைந் துள்ளது. தற்போது மாதம் 200 பேர் போராளிக ளாக இணைகின்றனர் என அவர் மேலும் கூறினார்.

போராளிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சியையும், உள ரீதியான சரிவையும் காணக் கூடியதாகவுள்ளது. இத்துடன் போராளிகளுக்கான சம்பளம் வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் போரா ளிகள் மனமுடைந்து விலகுவதையும் காணக்கூடியதாக உள்ளது.



கடந்த ஒக்ரோப
கள் குறிவைத்து
800 மில்லிய
பட்டது. ஐ.எஸ்
வதில் ஆர்வம்
வொஷிங்டனை
செய்யும் ஆரா
ஆவணங்களை
வெளியிட்டார்.
அந்தத் தகவல்
தாகவும், பொரு
டிருப்பதாகவும்
உள்ளது. இவ்
ளர்களிடம் இரு
மைக் காலத்தி
கிடைக்கப் பெ
குக்குரியதாகும்
மாகப் பெறுகின்
வொரு பிள்ளை
பணிபுரிகின்றா
ஒருவருக்கு 50
களில் இருந்து

# மனுஸ் தீவுத் தடுப்புமுகாம் அரசமைப்புக்கு முரணானது


## பப்புவா நியூகினியின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

போர்ட் மோர்சபி, ஏப் 29
அகதித் தஞ்சக் கோரிக்கையாளர் களை மனுஸ் தீவில் தடுத்து வைத் துள்ளது அரசமைப்புக்கு முரணானது என்று பப்புவா நியூகினியின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அகதிகளையும் அகதித் தஞ்சக் கோரிக்கையாளர்களையும் மனுஸ் தீவில் தடுத்து வைத்துள்ளது அரச மைப்புக்கு முரணானது என்று பப் புவா நியூகினியின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சட்டவிரோத குடியேறிகள், தனிமைப் படுத்தப்பட்டவர்கள் மற்றும் குற்றத்து டன் தொடர்புடையவர்களாக அறிவிக் கப்பட்டவர்கள் தவிர அனைவரினதும் தனிப்பட்ட சுதந்திரத்தைப் பப்புவா நியூ கினியின் அரசமைப்பு உறுதிப்படுத்து கின்றது.

கடல்பயணம் மேற்கொண்டு ஆஸ் திரேலியாவுக்கு வரும் தஞ்சக் கோரிக் கையாளர்களை தமது நாட்டுக்கு வெளியே வைத்து விசாரிக்கும் ஆஸ் திரேலியாவின் கொள்கையின் கீழ் அகதித் தஞ்சக் கோரிக்கையாளர்களை மனுஸ் தீவில் உள்ள தடுப்பு முகாமில் வைத்து ஆஸ்திரேலியா பரிசீலித்து



வருகிறது.

சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப் பட்டுள்ளதை முடிவிற்குக் கொண்டுவரத் தேவையான நடைமுறைகளைப் பின் பற்றுமாறு பப்புவா நியூகினி மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய அரசுகளை நீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.

மனுஸ் தீவில் கிட்டத்தட்ட 850 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அனை வரும் ஆண்கள்.

தஞ்சக் கோரிக்கையாளர்களும் அகதி களும் தாமாக முன்வந்து பப்புவா நியூ கினிக்குள் வந்திராத ஒரு சந்தர்ப்பத் தில் அவர்கள் நாட்டினுள் சட்விரோத மாக வந்தவர்கள் எனப் பார்க்க முடி யாது என நீதிபதிகள் குழு அந்தத் தீர்ப் பில் குறிப்பிட்டுள்ளது.

பப்புவா நியூகினி நீதிமன்றத்தின் இந் தத் தீர்ப்பு ஆஸ்திரேலிய குடிவரவுக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வில்லை என ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் தெரிவித்துள்ளார். (தி)

# அகதிகள் குடியிருப்புக்கு நான்கு முறை தீ வைப்பு

## சுவீடனில் சம்பவம்

ஸ்ரொக்ஹொல்ம், ஏப்.27
சுவீடனில் அகதிச் சிறுவர்களுக்கு அமைக்கப்பட்ட முகாம் இனந் தெரியாதோரால் தீவைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சமீப காலமாக அகதிகள் முகாம் களுக்குத் தீ வைக்கும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஹர்னோசான்ட் பகுதியில் அமைந் துள்ள பாடசாலை ஒன்று அகதி களுக்கான முகாமாக மாற்றப் பட்டுள்ளது. அடக்குமுறையிலும், போரிலும் இருந்து வந்த சிறுவர் களுக்காகவும், அவர்களது பெற் றோருக்காகவும் இந்த முகாம் உருவாக்கப்பட்டது. இவ்வாறான தீவைப்புச் செயற்பாடுகளுக்குத் தீயணைப்புத் தலைமை அதிகாரி தனது கோபத்தை வெளிப்படுத்தி யுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதத்தில் இருந்து இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. இப்போது இடம்பெற்ற சம்பவத்துக்கு சுவீடன் பிரதமர் ஸ்ரெபான் லொவ்வென், இவ்வாறான செயற்பாடு சரியா னது அல்ல, இவ்வாறானவற்றைச் சுவீடன் மக்களிடம் இருந்து நான் எதிர்பார்க்கவில்லை எனத் தெரி வித்தார்.

ஒரு வாரத்தில் இவ்வாறான 4 சம் பவங்கள் இடம்பெற்றதால் சிறுவர் களையும் அவர்களது குடும்பத்தி னரையும் பாதுகாப்பான இரகசிய இடத்தில் அதிகாரிகள் தங்கவைத் துள்ளனர். அகதிகளுக்கு எதிராக வன்முறைகளைத் தணிப்பது சவாலான விடயம் எனப் பன்முக சேவைகள் பணிப்பாளர் தெரிவித் தார். (த-ரி4)

# சினாய்ப்
# 3 பொலி

கெய்ரோ, ஏப்.2
சினாய்ப் பகுதி
குண்டுத் தாக்கு
ஸார் கொல்லப்
ஊடகம்செய்தி
நேற்று முன்தி
என்னும் பிரதே
வாகனத்தைக்
தத் தாக்குதல்
ளது. இந்தச் சம்
காயமடைந்தன



# பெண்
# துருக்கி

அங்காரா, ஏப்.2
துருக்கியில் பெ
போராளி நடத்
13 பேர் காயம
நேற்று முன்தி
இந்தத் தாக்குத
எனத் துருக்கி
அமைச்சர் மெ
குழு தெரிவித்
காயமடைந்தவ
கேட்டல் தொடர்
கள் ஏற்பட்டன.
பத்துகள் ஏதும்
லின் பின்னன
விசாரணைகள்
மாறு புர்சா பகு

# சிரிய சமாதானப் பேச்சுக்களில் அமெரிக்கா, ரஷ்யா வேண்டும்

## ஐ.நா. தூதுவர் கோரிக்கை

தடுமாறிக்கொண்டிருக்கும் சிரியா சமாதானப் பேச்சுக் களைக் காப்பாற்ற உயர்மட் டத் தலையீட்டைச் செய்யு மாறு அமெரிக்காவையும் ரஷ்யாவையும் சிரியாவுக் கான ஐ.நா. தூதுவர் கேட்டி ருக்கிறார்.

சிரியாவில் ஏற்றுக்கொள் ளப்பட்ட பாதியளவிலான போர் நிறுத்தம் அங்கு மிக வும் மோசமான நிலையில் இருப்பதாக, சமாதானப் பேச் சுக்கள் குறித்து பாதுகாப்புச் சபைக்கு விளக்கமளித்த ஸ்டபோன் த மிஸ்துரா கூறி யுள்ளார்.

போர் நிறுத்தம் நடைமுறை யில் இருந்தாலும் சிரியா வில் அண்மைய நாள் களில் வன்செயல்கள் அதி கரித்துள்ளன.

அலெப்போவின் கிழக்குப் பகுதியில் மருத்துவமனை [illegible] அரச படைகள் நடத்திய தாக்குதலில் புதனன்று 20 பேராவது கொல்லப்பட்டிருக் கிறார்கள். இறந்தவர்களில் சிறுவர்கள், ஒரு பல் மருத்து வர் மற்றும் அங்கு எஞ்சியி ருந்த ஒரேயொரு குழந்தை நல மருத்துவர் ஆகியோர் அடங்குவதாகக் கூறப்படு கின்றது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறை
# ..எஸ்.

ும் இடம்பெற்ற தாக்குதலில் ஐ.எஸ். நிதித் தளங்
ிக்கப்பட்டன. 300 மில்லியன் டொலரில் இருந்து
ாலர் பணம் வரை தாக்குதல் மூலம் அழிக்கப்
ப்பினர் தற்போது ஆயுதம் கொள்வனவு செய்
கின்றனர் எனத் தளபதி மேலும் தெரிவித்தார்.
சார்ந்த ஐ.எஸ். போராளிக் குழுவை ஆராய்ச்சி
பாளர் ஜமின் அல்-ரமிமி, ஐ.எஸ் அமைப்பின்
பற்று அதன் அடிப்படையில் சில தகவல்களை

பில் ஐ.எஸ். அமைப்பினர் அழுத்தத்தில் இருப்ப
ார, தலைமைத்துவ நெருக்கடிகளைக் கொண்
ணத்தில் இருந்து தெரிந்து கொள்ளக் கூடியதாக
ான ஆவணங்கள் அப்பகுதி ஊடகவியலா
பெறப்பட்டதாகவும், அவற்றில் சில மிக அண்
றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.
ஆவணங்கள் இவ்வாண்டு மார்ச் மாதத்துக்
ாரண ஐ.எஸ். போராளி 50 டொலரைச் சம்பள
எனவும், மனைவிக்கு 50 டொலர்களும், ஒவ்
் 35 டொலர்களும், அவர்கள் எந்தப்பிரிவில்
ா அதற்கு 50 டொலர்களும், பாலியல் அடிமை
லர்களும் வழங்கப்படுகின்றது என ஆவணங்
பக் கூடியதாகவுள்ளது. (த-ரி4)

## ...தியில் குண்டுத் தாக்குதல்
## ...் சாவு

டம்பெற்ற
3 பொலி
ணஎகிப்து
ட்டுள்ளது.
ல்-அரிஷ்
தில், கவச
வத்து இந்
தப்பட்டுள்
தில் 8 பேர்
யமடைந்த

வர்கள் இராணுவ மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இதுவரை இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்புக் கூறவில்லை. சினாயில் ஏற்பட்ட இஸ்லாமிய கிளர்ச்சிக்கு எதிராக எகிப்து போராடி வருகின்றது. இந்தத் தாக்குதல் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (த-ரி4)



## ...கொலைப் போராளி
## ...ில் குண்டுத் தாக்குதல்

...கொலைப்
...ாக்குதலில்
...துள்ளனர்.
...சா நகரில்
...ம்பெற்றது
சுகாதார
...சின்னோ

...் பலருக்கு
...பிரச்சினை
...ால் உயிரா
...ல. தாக்குத
...ாடர்பாக,
கொள்ளு
...ளுநர் உத்

தரவிட்டுள்ளார்.

தாக்குதல் நடத்தப்பட்ட பகுதி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிரதேசம் ஆகும். இதனால் உள்ளூர், வெளிநாட்டவர்களின் பரம்பல் அங்கு அதிகமாகக் காணப்படும்.

துருக்கியில் சுற்றுலாப் பயணம் மேற் கொள்ளவது தொடர்பாக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்ததை அடுத்து இரு தினங்களின் பின்னர் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இதுவரை துருக்கியில் தற்கொலைப் படைத் தாக்குதலில் 200 பேர் கொல்லப்பட்டுள்ளனர். (த-ரி4)

# ஹெலி விபத்தில் விமானிகள் சாவு

பீஜிங், ஏப்.29
சீனாவின் தெற்குப் பகுதியில் ஹெலி கொப்டர் விபத்துக்குள்ளானதில் 2 விமானிகள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஹெலிகொப்டரைக் காணவில்லை எனத் தேடுதல் நடத்தப்பட்டது. 24 மணிநேரத்தின் பின்னர் ஹெலி விபத்துக்குள்ளாகி விமானிகள் உயிரிழந்திருப்பது தெரியவந்துள்ளது. குஆங்சி சுஆங் பகுதியில் ஹெலி கண்டெடுக்கப்பட்டது.

இந்த ஹெலிகொப்டர் உள்ளூர் சுற்றுலா நிறுவனத்துக்குச் சொந்தமானதாகும். மலைப்பாங்கான பிரதேசத்தில் இருந்து உடல்கள் கண்டெடுக்கப்பட்டன என நிறுவனம் தெரிவித்துள்ளது. (த-ரி4)







| சான்றிதழ் பெறுமதி | பரிசில்கள் |
|---|---|
| **சேமிப்புச் சான்றிதழ்களுக்கு** | |
| ரூ. 5,000/- | உணவுக் கொள்கலனொன்று |
| ரூ. 10,000/- | மக் அல்லது லன்ச் பேக் ஒன்று |
| ரூ. 25,000/- | சுவர்க் கடிகாரம் அல்லது பவர் பேங்க் ஒன்று |
| ரூ. 50,000/- | குடை மற்றும் பவர் பேங்க் ஒன்று |
| ரூ. 100,000/- அல்லது அதற்கு மேலதிகமாக | SINGER Plus பரிசு வவுச்சர்கள் |
| **நிலையான வைப்புக்களுக்கு** | |
| ரூ. 50,000/- | மக் அல்லது லன்ச் பேக் ஒன்று |
| ரூ. 100,000/- | சுவர்க் கடிகாரம் அல்லது பவர் பேங்க் ஒன்று |
| ரூ. 250,000/- | குடை மற்றும் பவர் பேங்க் ஒன்று |
| ரூ. 500,000/- அல்லது அதற்கு மேலதிகமாக | SINGER Plus பரிசு வவுச்சர்கள் |

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

- குறைவின்றிய வட்டியுடன், சந்தையில் அதிக வட்டி வீதத்துடன் பெறுமதிமிக்க பரிசில்கள்.
- சிறுவர் சேமிப்புக் கணக்குகள் உட்பட சகல சேமிப்புச் சான்றிதழ்களிலும் சேமிக்கும் ரூ.5,000க்கு மேற்பட்ட சேமிப்புக்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள்.
- 50% போனஸ் வட்டியுடன் 6% வருடாந்த வட்டி

SDBL
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
தேசத்தின் முன்னோடி
SDB வங்கி இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் விசேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருடமும் ராசி பலனும்




## கன்னி
**(உத்திரம், அஸ்தம், சித்திரை)**

**(புதுவருடமும் ராசி பலனும் என்ற தலைப்பில் சிம்ம ராசி பற்றிப் பார்த்தோம். இன்று கன்னி ராசி பற்றிப் பார்ப்போம்)**

**எதிலும் தூய்மையை விரும்புபவர் நீங்கள்!**

சந்திரன் 10ஆவது ராசியில் நிற்கும்போது புது வருடம் பிறப்பதால், உங்கள் சாதனை தொடரும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். புது வேலை கிடைக்கும். மதிப்பு மரியாதை கூடும். அரசால் அனுகூலம் உண்டு. புத்தாண்டு பிறக்கும் நேரத்தில் தனாதிபதி சுக்கிரன் 7இல் உச்சம் பெற்று அமர்ந்திருப்பதுடன் உங்களதுராசியையும்பார்த்துக்கொண்டிருப்பதால், உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் அன்னியோன்னியம் கூடும். விலை உயர்ந்தப் பொருள்கள் வாங்குவீர்கள்.

வருடத் தொடக்கத்தில் செவ்வாய் 3ஆம் இடத்தில் வலுவாக நிற்பதால், தைரியம் பிறக்கும். பழைய கடன் பிரச்சினையில் ஒன்று தீரும். உடன்பிறந்தவர்கள் பக்க பலமாக இருப்பார்கள். ராசிநாதன் புதன் வருடப் பிறப்பின்போது 8இல் மறைந்திருப்பதால், உறவினர், நண்பர்களின் அன்புத்தொல்லைகள் வந்து போகும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும்.

ராகு பகவான் ராசிக்கு பன்னிரண்டாம் வீட்டிலேயே தொடர்வதால், மாதக் கணக்கில் தள்ளிப் போய் கொண்டிருந்த வேலைகள் முடிவடையும். எதிர்பாராத பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். கேது 6ஆம் வீட்டில் நீடிப்பதால், சுப நிகழ்ச்சிகளால் வீடுகளை கட்டும் வழக்கு சாதகமாகும்.

1.8.16 வரை குரு ராசிக்கு 12இல் நிற்பதால், எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகமாகும். பணம் வந்தாலும் செலவுகளும் தொடரும். ஆனால், 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குரு உங்கள் ராசிக்கு ஜன்ம குருவாக வருவதால், உடல் நலம் பாதிக்கும். மருத்துவப் பரிசோதனை செய்துகொள்வது நல்லது. புது நண்பர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்கவேண்டாம். ஆனால், 17.1.17 முதல் 9.3.17 வரை குரு அதிசாரத்திலும், வக்ர கதியிலும் ராசிக்கு 2இல் அமர்வதால், அமைதி உண்டாகும். கண வன் -மனைவிக்குள் இருந்து வந்த சச்சரவுகள் விலகும். எதிர்பார்த்த தொகைகைக்கு வரும். நோய் குணமாகும். வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியம் சீராகும். அவர் உங்களின் தியாக உள்ளத்தைப் புரிந்துகொள் வார். பேச்சில் கனிவு பிறக்கும்.

27.2.17 முதல் 11.4.17 வரை செவ்வாய் உங்களுடைய ராசிக்கு 8இல் மறைவதால், சின்னச் சின்ன ஏமாற்றங்கள், பண இழப்புகள், சகோதர வகையில் மனக்கசப்புகள், வீடு, மனை வாங்குவது, விற்பதில் வில்லங்கம் ஏற்படும். வழக்கில் தீர்ப்பு தாமதம் ஆகும்.

சனி பகவான் உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டிலேயே தொடர்வதால், உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். பூர்வீகச் சொத்தில், உங்கள் ரசனைக்கேற்ப சில மாற்றங்கள் செய்வீர்கள். மகனுக்கு நல்ல வேலை கிடைக்கும். உங்களை எதிர்த்தவர்களும் நட்பு பாராட்டு வார்கள். சிலருக்கு அயல் நாடு செல்லும் வாய்ப்பு வரும்.

வியாபாரத்தில் சில தந்திரங்களைக் கற்றுக் கொள்வீர்கள். வியாபாரிகளும் வாடிக்கையாளர்களாக அறிமுகமாவார்கள். பெரிய நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். கல்விக் கூடங்களால் ஆதாயம் அடைவீர்கள்.

உத்தியோகத்தில் போராட்டங்கள் அதிகரிக்கும். வேலையில் நீடிப்பது பற்றி மனக் குழப்பம் உண்டாகும். உயர் அதிகாரிகள் உங்களை அலட்சியப் படுத்தினாலும், சக ஊழியர்கள் உதவியாக இருப்பார்கள். சிலர் புது பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப் படுவீர்கள்.

# நட்பும் நடப்பும்

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

ஒவ்வொருவரின் பண்பும் செயற்பாடும், அவர் பிறந்த சூழலிலும், பழகும் நண்பர்களிலும், பொழுதுபோக்குச் சாதனங்களிலும் தங்கியுள்ளது. நன்கு ஆராய்ந்து கற்றறிந்த சான்றோருடன் கொள்ளும் உறவு, எக்காலத்தும் குருத்திலிருந்து கரும்பைத் தின்பது போல் சிறப்பு வாய்ந்தது. இன்று பலர் கூட்டாளிகளின் சீர்கேட்டினால் சிதைவடைந்து குடும்ப நிலையிலும், தொழில் நிலையிலும் அரசியலிலும் விரக்தியடைந்துள்ளனர்.

குடிப்பிறப்பை எண்ணி, இவர் நடுவில் வேறுபாடு கொள்பவரல்லர் என்று கருதினாலும், அவரது மனத்தையும் ஆராய்ந்து பழகுவதே சிறப்பு. நற்குடிப் பிறப்பான கர்ணனும், சந்தர்ப்பச் சூழ்நிலை வசமாக, துரியோதனன் நட்பு கிடைத்தமையினால் சீரும், சீரழிவும் பெற்றதை மகாபாரதம் காட்டுகின்றது. செஞ்சோற்றுக் கடன் தீர்க்க, சொந்த பந்தங்களுடன் போராடிய கர்ணன் இறுதியில் வீரம், வள்ளல் என்பதில் மட்டும் கீர்த்தி பெற்றான்.

யானை போன்றவரிடத்து நட்புக் கொள்வதைத் தவிர்த்து, நாய் போன்ற நன்றியுடையாரிடத்து விரும்பி நட்புக் கொள்ளவேண்டும். யானை அறத்தறிந்தும் பாகனையே கொல்லும்
எறிந்த வேல் மெய்யதா வால் குழைக்கும் நாய் - நாலடியார்



**இன்று பலர் கூட்டாளிகளின் சீர்கேட்டினால் சிதைவடைந்து குடும்ப நிலையிலும், தொழில் நிலையிலும் அரசியலிலும் விரக்தியடைந்துள்ளனர். குடிப்பிறப்பை எண்ணி, இவர் நடுவில் வேறுபாடு கொள்பவரல்லர் என்று கருதினாலும், அவரது மனத்தையும் ஆராய்ந்து பழகுவதே சிறப்பு.**

பொறுத்துக் கொள்ள முடியாத குற்றங்கள் உடைய பொருந்தா நண்பரிடம் தம் காரியம் நிறைவேறும்வரை மட்டும் சிலர் மிகுந்த தொல்லைகளோடு தொடர்பு கொண்டு இருப்பர். தங்கருமம் முற்றுந் துணை அன்பான பிடிப்பு இல்லாதவரின் நட்பு வைக்கோலில் பற்றிய தீயைப் போல் முதலில் பெருகியதைப் போன்ற தோற்றத்தை அளித்து பின்னர் சிறிதும் இல்லாமல் போய்விடும். உள்ளம் ஒன்றுபடாத கூடா நட்பினரோடு நேயம் கூடாது.

சமூகநிலையிலும், அவரவர் சமய கலாசாரமே சிறந்த நட்பு. தன் சமயத்தை விட்டு மற்ற சமயம் சேர்பவன் தான் பெற்ற தாயை மறந்தவனே. மாற்றான் தோட்ட மலர் மணம் வீசும் தான்; நுகர்ந்து அனுபவிக்கலாம் தானே. சமண சமயத்துக்கு மாறி நாவுக்கரசர் பட்ட துன்பங்கள் எவ்வளவு? எனவே நல்ல நட்பை ஆராய்ந்து முயற்சியும், போகமும், அறமுடையவனாகவும் வாழ்தலே அறிவுடைமை.

முட்டிகை போல முனியாது வைகலும்
கொட்டியுண் பாரும் குறடு போற் கைவிடுவர்
சுட்டுக் கோல் போல எரியும் புருவரே
நட்டார் எனப்படு வார்
நாலடியார் 208

சமூகம், குடும்பம் நலன் கருதி இன்பம், துன்பம் ஆகியவற்றில் பங்களிப்பவரே சிறந்த நண்பர். கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை எஞ்ஞான்றும் குருத்திற் கரும்புதின் றற்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி எண்ணங்களுடன் துயில் எழுந்தால் ஒளிமயமான எதிர்காலம் மலர்ந்திடும்

கலாநிதி கு.குகதாசன்

(நேற்றைய 17 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)

அடிமனம் மிக உச்சநிலையில் செயற்படும் பிரம முகூர்த்தம் ALPHAd ENERGY
சுயஊக்க, சுய உற்சாக, சுய விழிப்புணர்வு நேரம் காலை 5.00 6.00

## A (ALERT YOUR MIND)

சின்னஞ் சிறிய வண்ணப்பறவைகள் விடிந்தும் விடியாத மங்களகரமான பிரமமுகூர்த்தத்தில் எவ்வாறு நான் இன்று மிக நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்கின்றேன் நான் இன்று மிக நல்ல உறுதியுடன், ஊக்கத்துடன், உற்சாகத்துடன் பறந்து பறந்து இரை தேடுவேன் எனக் கூறிக் கூறி சிறகை விரித்து ஆடிப்பாடி, ஆனந்தமாக துயில் எழுகின்றனவோ, அவ்வாறே நீங்களும் நான் இன்றும் என்றும் நலமிக்க நல்ஆரோக்கியத்துடன் வாழ்வேன். தினம் தினம் நான் சகல முயற்சிகளிலும் முன்னேறி வருகின்றேன். நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாக நான் சகல துறைகளிலும் சகல முயற்சிகளிலும் வளர்ச்சியும் - உயர்ச்சியும் காண்கிறேன் என்று கூறிக்கூறி, தினம் தினம் இன்மகிழநல வெற்றி எண்ணங்களுடன் துயில் எழுந்து வரும்பொழுது, ஒளிமயமான எதிர்காலம், வாழ்விலும், சேவையிலும், கடமைகளிலும் மலர்ந்திடும்.


## L (LAUNCH PAD)

எடுத்த காரியங்கள் யாவிலும் வெற்றி பெறவேண்டுமா? மனதில் உறுதி வேண்டுமா? நல்லதோர் ஆரம்பம் வெற்றியின் அறிகுறி, உங்கள் மூளை, மனம், உடல் ஆகிய முப்பெரும் சக்திகளும் நீங்கள் இடும் கட்ட ளைகளுக்கும், சபதங்களுக்கும், உறுதிமொழிகளுக்கும், அமைவாகவே செயற்படுகின்றன. உங்கள் விருப்பங்களையும் ஆசைகளையும் அவை ஏற்பதில்லை பதிவதில்லை மாறாக அவைகளைக் கட்டளையாகவும், சபதங்களாகவும் இடும் பொழுது, அவற்றை ஏற்று அவைக்கமையச் செயற்படுகின்றன. ஆகவே, அந்த உயர் உச்ச சாதனைக் காலத்தில் மதிநிறை மனவளச் சக்தி சபதம், மாணவர் கல்வி முன்னேற்றச் சபதம் போன்ற சபதங்களையும், கட்டளைகளையும் இட்டு வரும்பொழுது, இந்த முப்பெரும் உள்ளகச் சக்திகளது மிக உச்ச செயற்பாட்டு பலாபயன்களை நீங்கள் அடைந்திட முடியும். சித்த உறுதி கொண்டோர் செய்கை எல்லாம் வெற்றி எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி அடைந்திடலாம்.

**எனது தூரநோக்கு, இலக்கு, குறிக்கோள் என்ன? அவற்றை அடைவதற்கு நான் இன்று எவ்வாறான முயற்சிகளில் ஈடுபட வேண்டும், என்று சிந்தித்து, எனது இன்றைய செயற்றிட்டம் ஒன்றை மனதினில் தயார் செய்திடுங்கள். அந்தச் செயற்றிட்டத்தை மிக நல்ல முறையில் செயற்படுத்துவதற்குத் தேவை யான மூளைப்பலம், மனோபலம், உடற்பலம் ஆகிய சகல பலங்களையும் நீங்கள் அன்று அடைவது திண்ணம்.**

## P (PLAN FOR THE DAY)

எனது தூரநோக்கு, இலக்கு, குறிக்கோள் என்ன? அவற்றை அடைவதற்கு நான் இன்று எவ்வாறான முயற்சிகளில் ஈடுபட வேண்டும், என்று சிந்தித்து, எனது இன்றைய செயற்றிட்டம் ஒன்றை மனதினில் தயார் செய்திடுங்கள். அந்தச் செயற்றிட்டத்தை மிக நல்ல முறையில் செயற்படுத்துவதற்குத் தேவையான மூளைப்பலம், மனோபலம், உடற்பலம் ஆகிய சகல பலங்களையும் நீங்கள் அன்று அடைவது திண்ணம். அடிமனம், ஆழமாகச் செயற் படும் இந்த நேரத்தில் எண்ணியவை யாவும் எண்ணியவாறு எய்திடலாம்திட்டம் இல்லாமல் செயல் ஆக்கம் இல்லை.



## H (HEALTH)

உங்கள் முப்பெரும் சக்திகளும், புதுமலர்ச்சி பெறுவதற்கு, புத்தாக்கம் பெறுவதற்கு, சில மனவளப் பயிற்சிகளும், உடல் நலப் பயிற்சிகளும் அவசியமாகும். மூச்சுப்பயிற்சி, கால்நடைப் பயிற்சி போன்றவை போதுமானவை. யோகாசனப் பயிற்சிகளும் சிறந்தவை என்று இன்று ஐ.நா.சபையும், உலக சுகாதார நிறுவனமும் பரிந்துரை செய்கின்றன. மூளையும், மனதும் நன்றாகச் செயற்பட நல்ஆரோக்கியம் அவசியம்.

## A (ALARM CLOCK)

இன்றைய செயற்றிட்டம் என்ற திட்டத்தை மனதில் தயாரித்து விட்டீர்கள். அந்தத் திட்டத்தை மீண்டும் ஒருமுறை அலசி ஆராயுங்கள். எந்த எந்தக் கருமங்களை எவ்வாறு எவ்வாறு, எந்த எந்த நேரங்களில் ஆற்றிடல் வேண்டும் என்று எண்ணி எண்ணி மன அலாரக் கடிகாரத்தில் பதிவு செய்து விடுங்கள். திட்டமிட்ட நேரத்தில் திட்டமிட்ட கருமங்களை ஆக்கி அமைத்து ஆற்றுவதற்குத் தூண்டி வண்ணம் உங்கள் மன அலாரக் கடிகாரம் செயற்படும். மனத்திட்டமே செயல் ஆக்கம். எந்தச் செயலும் இருமுறை ஆக்கப் படுகின்றது. முதலில் மனதால் உருவாக்கப்படும் திட்டம். அந்தத் திட்டமே பின்பு சிறந்தசெயற்பாட்டுத்திட்டமாகமலர்ந்திடும். (மூலம் கலாநிதி க.குகதாசன்)

### வலது பக்க மூளை உங்களுக்கு எந்தவிமான நலன்களை நல்கின்றது?

ஆக்கத்திறன், புதியன புனைதல், உருவாக்கல் திறன், கணித விஞ்ஞான அறிவை மேம்படுத்தல் உயர் நுண்ணறிவு, உளச்சார்பு விருத்தி, சிந்தித்து தீர்வு காணும் அணுகுமுறை, முற்றி முதிர்ந்த ஆலோசனை, ஆக்கத்திறன், கற்பனை வளம், புதிய உத்திகள் உபாயங்கள், புத்திசாலித்தனமான தீர்மானங்களை எடுத்தல், பிரச்சினைகளுக்கு புத்திசாதூரியமான அணுகுமுறை ஆகியன சிறப்பு நுட்ப நுணுக்கங்களை நல்கிடும் மூளையே வலது பக்க மூளையாகும்.
கற்பனைதிறன், சிந்தனைத்திறன், ஆக்கபூர்வமான அணுகுமுறைகள் ஆகியவை ஊற்றெனப் பெருக்கெடுத்து ஓடிடும் மூளையே வலதுபக்க மூளையாகும்.
உங்கள் இடது பக்க மூளை, சிலருக்கு சில சமயம் வயது ஏற ஏற, அதன் சில செயற்பாடுகள் தேக்க நிலை அடைய இடமுண்டு. ஆனால் வலதுபக்க மூளை அவ்வாறு இன்றி வாழ்நாள் முழுவதும் குன்றாமல், குறையாமல் எல்லோருக்கும் எல்லாப் பருவத்தினருக்கும் வளர்ந்து, சிறந்து சிறந்து உயர்ந்து உயர்ந்து பல்வேறு திறன் களையும் சுரத்து சுரத்து நல்கிடும் ஓர் வற்றாத வள மிகு ஊற்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே நீங்கள எல்லோருக்கும், மாணவப் பருவத்திலிருந்து, வாழ்நாள் முழுவதும், வலதுபக்க மூளையின் செயற்பாட்டை விருத்தி செய்து வரும்போது பற்பல நலன்களையும், நன்மைகளையும் அடைந்திடலாம்.

01.நரம்பு மண்டலச் செயற்பாட்டை சமன்படுத்தல்.

பொதுவாகப் பலர் வலதுபக்க மூளையின் செயற்பாட்டை முப்பது (30) வீதமாகவும், இடதுபக்க மூளையின் செயற்பாட்டை எழுபது (70) வீதமாகவும் பயன்படுத்துகின்றனர். இதனால் பலர் வலது பக்க மூளையின் பல்வேறு சிறப்பு அம்சங்களை முழுமையாகப் பாவித்தப் பயன் அடைவதில்லை. முக்கியமாக அரசதுறை, வங்கித்துறை, தனியார் துறை ஆகிய சேவைகளுக்கு, சேவையாளர் களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் நுண்மதி, உளச்சார்பு போட்டிப் பரீட்சைகளில், வலது பக்க மூளையின் செயற்பாட்டுக்கு குறைவினால் பலர் அதிக புள்ளிகள் பெறத் தவறிவிடுகின்றனர்.

இந்த இருபகுதி மூளையின் வெவ்வேறு செயற்பாட்டை எடுத்துக் கூறியவர் அமெரிக்காவைச் சேர்ந்த ரோகர் ஸ்பரே என்பவரே. இந்த முறை மூளை இயல்வல்லுநர் எடுத்துக் கூறிய பின்வரும் விவரங்களுக்காக அவருக்கு 1960 ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

வலது பக்க மூளையை 50 வீதமும், இடது பக்க மூளையை 50 வீதமும் சரிசமமாகச் செயற்படும் பொழுது, நடுப்பக்க மூளை நன்றாகச் செயற்படும். நடுபக்க மூளையே ஞாபகசக்தியின் உறைவிடம். உங்கள் உடம்பில் உள்ள இடதுபக்க நரம்பு மண்டலம், வலதுபக்க மூளையிலும், வலதுபக்க நரம்பு மண்டலம், இடதுபக்க மூளையும் தொடுக்கப்பட்டிருக்கின்றன. உலகில் பலர் வலது கைப் பழக்கம் உடையவர்களே, இதனால் அவர்கள் இடதுபக்க மூளையின் அதிக செயற்பாட்டுக்கு உந்தப்படுகின்றன. ஆகவே இரு கைகளினதும், இரு கால்களினதும், சமன் செயற்பாட்டை பேணும்போது இத்தகைய குறையை நீக்கிவிட முடியும். சில உடற்பயிற்சிகள் மூலம் இரு கைகள், இரு கால்கள் பாவனையை அதிகரித்து, மூளையின் இரு பக்க சரிசமன் செயற்பாட்டை விருத்தி செய்யலாம். இதற்காக அவர் பரிந்துரை செய்த உடற்பயிற்சிகள் இவைகளே:


01. இரு கைகளையும், வீசியபடி துரிதமாக நடத்தல்.
02. இரு கைகளையும், இரு கால்களையும் பாவிக்கக்கூடிய சில விளையாட்டுக்கள், வொலி வோல், ரென்னிஸ், பூப்பந்தாட்டம், ரேபிள் ரென்னிஸ்.
03. துவிச்சக்கர வண்டி ஓடுதல்.
04. நீச்சல் பயிற்சி.

அந்த அறிஞர் கூறியவாறு நீச்சல் பயிற்சி மிகநன்று. ஆனால் ஆறுகளிலும், கடலிலும் நீச்சல் பயிற்சி செய்வது ஆபத்தானது. தினமும் இளைஞர் பலர் ஆற்றிலும், கடலிலும் நீராடி இறந்து விடுகின்றனர் என்று தினசரிகள் மூலம் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இதனால் இப்பொழுது பல பாடசாலைகளில் நீச்சல் தடாகம் அமைத்து மாணவர்களின் இரு கை, இரு கால் பழக்கச் செயற்பாடுகளை ஊக்குவிக்கின்றனர்.

(முற்றும்)

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





ஷ.யனுஜன்,
தரம் 4பி,
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை.

உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படும்.

# நல்ல காலம் பிறக்குது



அரண்மனை வாயில் காப்பவன், ஒரு குடுகுடுப்பைக்காரனைக் கைது செய்து மன்னரிடம் அழைத்துக்கொண்டு வந்தான்.

மன்னா! இந்த குடுகுடுப்பைக்காரன் அரண்மனை வாயிலில் நின்றுகொண்டு, தங்களை மிகவும் தரக்குறைவாக விமர்சித்தும், திட்டியும் இருந்ததோடு தங்களுக்கு மோசமான எதிர்காலப் பலனும் நடக்குமெனச் சொல்லிக்கொண்டு இருந்தான். அதை நிறுத்தச் சொல்லி எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. மிரட்டியும் பார்த்தாகிவிட்டது! சற்றும் பயப்படவில்லை! கீழ்ப்படிய மறுக்கிறான். என்ன செய்வதென்று தெரியாமல் கைது செய்து தங்களிடம் அழைத்து வந்திருக்கிறேன்" என்று அவன் சொன்னான்

மன்னர் சிரித்துக்கொண்டே குடுகுடுப்பைக்காரனை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு அவனிடம், என்ன குடுகுடுப்பைக் காரரே...,காவலன் சொல்வது உண்மை தானா? மிகவும் அவதூறாக என்னைப் பேசியது உண்மையா? எப்பொழுதும் நல்ல காலம் பிறக்குது...,நல்ல காலம் பிறக்குது...' என்று நல்வாக்கினையே கூறும் நீங்கள் ஏன் இப்படி நடந்து கொண்டீர்கள்? உங்களுக்கு என்ன பிரச்சினை? என்னைத் தூற்றிப் பேசியதற்கு என்ன காரணம்?"

குடுகுடுப்பைக்காரன் மன்னரை வணங்கினான். பிறகு மன்னனிடம், என்னைத் தயவு செய்து மன்னியுங்கள்......நான் கூறியது அவதூறுதான். தங்கள் ஆட்சியில் எவருக்கும் எந்தக் குறையும் இல்லை! மக்கள் அனைவரும் நலமாகவே உள்ளனர்! அவர்கள் செய்யும் தொழிலும் சிறப்பாக நடைபெறுகிறது! அனைவரும் உடல்நலத்தோடும் உள்ளனர்! கல்வியும் சிறப்பாக போதிக்கப் படுகிறது! கல்விச் சாலையிலுள்ள மாணாக்கர்கள் அனைவரும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குகின்றனர்."

சரி வேறு என்ன குறை?" மன்னர் கேட்டார்.

குறையே இல்லை மன்னா! வழிபாட்டுத் தலங்கள் அனைத்தும் தூய்மையாகவும் சிறப்பாகவும் உள்ளது!.......தெய்வபக்திக்கும் பெரியோரிடம் மரியாதைக்கும் குறைவில்லை! எல்லோரும் மகிழ்ச்சியாகவும், சுறுசுறுப்புடனும் இருக்கின்றனர்! அத்தனைபேரும் செல்வச் செழிப்புடனும், ஆரோக்கியத்துடனும்,கல்வி அறிவுடனும் இருக்கின்றனர்!"

பின் ஏன் என்னைத் தூற்றினீர்கள்?" மீண்டும் மன்னர் கேட்டார்.

இப்படி எல்லாம் சரியாக இருக்கும்போது, நான் வீடு வீடாகச் சென்று நல்ல காலம் பிறக்குது...,நல்ல காலம் பிறக்குது'ன்னு போய்ச் சொன்னால் என்னை அனைவரும் கேலியாகவும், பரிகாசமா கவும் பார்க்கின்றனர்... நல் வாக்கு சொல்வதைத் தவிர வேறு இதுவரை செய்ததில்லை! தற்போது எதுவும் வேலை இன்றி முடங்கிப் போய் இருக்கிறோம்! தங்கள் சிறப்பான ஆட்சியினால் நாங்கள் பிழைப்பின்றி இருக்கிறோம்"

நீ என்னதான் சொல்ல வருகிறாய்?" என்றார் மன்னர்

இதையெல்லாம் நேரில் தங்களிடம் முறையிட வேண்டும் என்று பலமுறை முயற்சித்தும் நடக்கவில்லை. எனவேதான் அரண்மனை முன்பு தங்களைப் பற்றி அவதூறு பேசும்படி ஆகிவிட்டது! மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுக்கு பிழைப்பிற்கு ஏதாவது வழி செய்ய வேண்டுகிறேன்" என்று பெருமூச்சுடன் குடுகுடுப்பைக்காரன் கூறினான்.

குடுகுடுப்பைக்காரனின் சாமர்த்தியத்தைப் பாராட்டி, அவர்களின் மாற்றுத் தொழிலுக்கான ஏற்பாட்டை செய்வதாக உறுதி அளித்தார் மன்னர். மேலும் தற்காலிகமாக ஒரு நிவாரணத்தொகையும் அளித்து குடுகுடுப்பைக்காரனை சந்தோசமாக வழி அனுப்பினார்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1903 - 30 மில்லியன் கன மீற்றர் மண் சரிந்து கனடா பிராங்கில் 70பேர் சாவு.

1945 - இரண்டாம் உலக மகாயுத்தம் இத்தாலியிலிருந்த ஜேர்மன் படைகள் நிபந்தனை எதுவுமின்றி கூட்டுப் படையிடம் சரணடைந்தன.

1945 - இரண்டாம் உலக மகாயுத்தம் அடொல்ப் ஹிட்லர் தனது நீண்ட நாள் சகாவான ஈவா பிறவுணை பேர்லின் நிலக்கீழ் அறை ஒன்றில் (பங்கர்) திருமணம் புரிந்துகொண்டார். தனது அடுத்த வாரிசாக அட்மிறல் கார்ல் டொனிற்ஸை தேர்வு செய்துவிட்டு மறுநாள் ஹிட்லரும் ஈவா பிறவுணும் தற்கொலை செய்து கொண்டனர்.

1951 - திபெத்தின் மக்கள் மத்திய அரசைச் சேர்ந்த பேராளர்கள் பீஜிங்கை வந்தடைந்து சீனாவின் இறைமை மற்றும் திபெத்திய சுயாட்சி பற்றிய 17அம்ச ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

1965 - பாகிஸ்தானின் விண்வெளி மற்றும் மேல் வளிமண்டல ஆராய்ச்சி ஆணையகத்தால் அதனது 7ஆவது ஏவுகணை வெற்றிகரமாக ஏவப்பட்டது.

1967 - மதக் காரணங்களைக் குறிப்பிட்டு அமெரிக்க இராணுவத்தில் இணைய மறுத்த முஹமட் அலி தனது குத்துச் சண்டைப் பட்டத்தைத் துறந்தார்.

1970 - வியட்நாம் யுத்தம் அமெரிக்க மற்றும் தென் வியட்நாம் படைகள் 'வியட் கொங்' இயக்கத்தைத் தேடி கம்போடியாவினுள் நுழைந்தன.

1974 - வாட்டர்கேற் ஊழல் தொடர்பான வெள்ளை மாளிகையின் தணிக்கைசெய்யப்பட்ட நாடா பதிவை வெளியிடுவதாக அமெரிக்க ஜனாதிபதி றிச்சாட் நிக்ஸன் அறிவித்தார்.

1986 - லொஸ் ஏஞ்சல் நகர் பொது நூலக தீ விபத்தில் 400 000 புத்தகங்களும் வேறு பொருள்களும் சேதமடைந்தும் அழிந்தும் போயின.

1986 - அமெரிக்க மற்றும் ஐரோப்பிய உளவு (சற்றலைட்ஸ்)உபகிரகங்களால் செனோர்பில் அணுசக்தி நிலைய 4 ஆவது அணு உலை அழிவுகள் படம் பிடிக்கப்பட்டன.

1991 - பங்களாதேஷ் தென் கிழக்கு மாகாணமான சிட்கொங்கை பணிக்கு 155 மைல் வேகமான சூறாவளி தாக்கியதில் 138, 000 பேர் சாவடைந்ததுடன் பல மில்லியன் மக்கள் வீடுகளை இழந்தனர்.

1997- இரசாயன ஆயுத உற்பத்தி, அவற்றை வைத்திருத்தல் ஆகியன சட்ட விரோதமானதாக குறிப்பிடும் 1993 இன் இரசாயன ஆயுத பட்டயம் ஒப்பமிட்ட நாடுகளில் நடைமுறைக்கு வந்தது.

1997 - 4300 ஆண்டுக்கு முந்திய பழமையான பிரமிட் எகிப்தில் பிரான்ஸ் நாட்டு அகழ்வாராய்ச்சியாளரால் கண்டுபிடிப்பு.

1999 - பெல்கிரேட் அவலா குன்றின் மீது அமைந்த தொலைதொடர்பு கோபுரம் யூகோஸ்லேவியாவின் நேட்டோ குண்டு வீச்சில் அழிக்கப்பட்டது.

2005 - லெபனான் நாட்டில் 29 ஆண்டுகள் நிலை கொண்டிருந்த சிரியப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.

2011 - இளவரசர் வில்லியம் மற்றும் கதறின் மிடில்ரோன் திருமணம் லண்டன் வெஸ்மினிஸ்டர் அபேயில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒற்றுமையாகப் பலம்பெறு தொழிலாளர் வர்க்கமே

கிருஷ்ணராஜா சஞ்ஜீவன்

உலகத்தில் தொழிலாளரின்றி எந்த வேலையும் நடைபெற மாட்டாது. உழைப்பாளி இல்லாத நாடு என்று எந்த நாட்டையும் கூறமுடியாது. அந்தளவுக்கு உழைப்பின் மகத்துவம் உயர்ந்து காணப்படுகிறது. ஒவ்வொரு உழைப்பாளியும் ஒவ்வொரு நாட்டின் பலம் எனக் கூறலாம். ஒவ்வொருவருக்கும் உலகில் ஒவ்வொரு தொழிலிருக்கும். மண்ணை உழுது வெட்டிப்பதப்படுத்தி நெல் மற்றும் தானியவகைகளை விதைத்து அதன் மூலம் வாழ்பவன் தான் விவசாயி. அந்த விவசாயி இன்றேல் அந்த நாடே பட்டினித் தேசம் தான். அதேபோல ஒவ்வொரு நோயையும் தீர்த்து வைக்க பாடுபட்டு ஒவ்வொரு நோயாளியின் கவலையைத் துடைத்துவிடும் மருத்துவரும் ஒரு தொழிலாளி தான். அவரில்லையெனின் நாடே நோயாளித் தேசம் தான். ஒவ்வொரு மாணவனையும் தன் பிள்ளை போல பார்த்து நல்லறிவு, பண்பு, பண்பாடு போன்றவற்றையும் கல்வியையும் புகட்டும் ஒவ்வொரு ஆசானும் ஒரு தொழிலாளிதான். அவர்கள் இல்லாவிடின் நாடே அறிவற்ற மூடதேசமாகிவிடும். இப்படி ஒவ்வொரு வேலையையும் செய்யும் மனித சமுதாயமும் ஒரு தொழிலாளர் குடும்பம் தான்.

இத்தனை தொழில்களையும் தன் நலம் பாராது பாடுபடும் இந்தத் தொழிலாளர் சமூகத்துக்கு வித்தாக உதித்ததே மே 01 ஆம் திகதி ஆகும். இந்தத் தினம் வயலில் வியர்வை சிந்தி உழைக்கும் விவசாயிக்கும், தன்நோயைப் பாராது பிறர்நோயைக் குணப்படுத்தும் வைத்தியருக்கும், இரவு பகலாக படுக்கையின்றி பிள்ளைகளுக்காக பாடுபடும் ஆசான் என அனைத்து வேலைகளையும் தம் இரத்தம் சிந்தி உழைக்கும் அத்தனை உறவுகளுக்கும் பொதுவானதாகும். இந்த மேதினம் உருவாக பற்பல தியாகங்களை மேற்கொண்ட காரணத்தால் தான் இந்தத் தினம் உருவானது. 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் 12, 18 மணி நேரம் வரை கட்டாயம் வேலை செய்ய வேண்டும் என விதிக்கப்பட்டிருந்தது. இதற்கென பல்வேறு குரல்கள் ஆங்காங்கே ஒலிக்கத் தவறவில்லை.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் 12, 18 மணிநேரம் வரை கட்டாயம் வேலை செய்ய வேண்டும் என சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. இதற்கென பல்வேறு குரல்கள் ஆங்காங்கே ஒலிக்கத் தவறவில்லை.

இந்தக்கடும் சட்டங்கள் பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ரஷ்யா, அமெரிக்கா, சிக்காக்கோ எனப்பல பிரதேசங்களில் இடம்பெற்றது. இப்படி இருக்கையில் பிரான்ஸில் வேலை நேரத்தைக் குறைக்க ஏற்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன. ஆஸ் திரேலியாவில் கட்டடத் தொழில் செய்த தொழிலாளிகள் முதன் முதலாக 8 மணிநேர வேலையைக்கோரி ஆர்ப்பாட்டம் செய்து வெற்றியும் அடைந்தனர். இது தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டத்துக்கான மைல் கல்லாக இருந்தது, ரஷ்யாவிலும் இந்த தொழிலாளர் போராட்டம் வெற்றி பெற்று தொழிலாளர் வேலை 8 மணி நேர மாக்கப்பட்டது. இந்த மேதினப் போராட்டம் சிக்காக்கோவில் கடும் எழுச்சியும் கண்டது. இந்தப் பேரெழுச்சியில், தொழிலாளர் போராட்டத்தில் குண்டு வீசிக் கலவரம் நிகழ்ந்த போது ஒரு பொலிஸ்காரர் இறந்து விட மேலும் பல போராட்டத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு துப்பாக்கிச் சூடு மூலம் போராட்டத்தைக் கலைத்து பல துன்பங்களை தொழிலாளருக்கு இழைத்தனர்.

பின்பு அமெரிக்காவில் தொழிலாளர் தலைவர்கள் நால்வரைத் தூக்கிலிட்ட காரணத்தால் அமெரிக்காவில் கறுப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. 8 மணிநேர போராட்டமும் சிக்காக்கோ தியாகிகளின் வீரத் தியாகமும் தான் இன்று மேதினமாகவும் உழைக்கும் தொழிலாளர் தினமாகவும் உள்ளதை மறக்கலாகாது. இறுதியாக சர்வதேச தொழிலாளர் நாடாளுமன்றம் ஒன்று கூடி 8 மணிநேர போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதென்றும் இந்த மாநாடு சிக்காக்கோ சதியை கடுமையாக கண்டித்த காரணத்தாலும் மே 01 ஆம் திகதி மேதினமாக அதாவது தொழிலாளர் தினமாக இந்தத் தினம் கொண்டாடப்படுகிறது. இத்தனை துயரப்பட்ட இந்த மனிதரை நாம்மறக்கக் கூடாது. இவர்களினால் தான் எம்தொழலாளர் வர்க்கம் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றதை நாம்ஒருபோதும் மறக்கக் கூடாது. செய்யும்தொழிலே தெய்வம்.

யா/ அவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்.

# நல்லாட்சியின் வாக்குறுதிகள்

## நிறைவேற்றப்படவேண்டும்

கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்துகள், மக்கள் மத்தியிலும் இந்த அரசை ஆட்சிபீடமேற்றுவதற்கு முன்னின்று உழைத்த தரப்பினர் மத்தியிலும் அண்மைக் காலமாக நிலவிய பல சந்தேகங்களுக்கு விடையளிப்பதாக அமைந்திருந்தது .

இதிலே குறிப்பாக, நல்லாட்சியை முன்னிலைப்படுத்தி 2015 ஜனவரி 8 இல் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு 16 மாதங்களாகின்ற நிலையில், நல்லாட்சியின் நோக்கங்களிலிருந்து அரசு தவறிச்செல்கின்றதா என்ற அங்கலாய்ப்பு மக்கள் மத்தியில் இருந்துவந்த நிலையிலேயே ஜனாதிபதியின் கருத்துகள் வெளியாகியுள்ளன.

ஊழல், மோசடி நிறைந்த மோசமான முன்னைய அரசு இழைத்த தவறுகளை தற்போதைய அரசு இழைக்கின்றதா என மக்கள் மனங்களில் காணப்படும் கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி குண்டும் குழியுமான மோசமான வீதியொன்றைச் செப்பனிட வேண்டுமானால் அந்த வீதியின் மேல் பயணித்துக் குண்டு குழிகளில் இறங்கிச் சென்றே அதனைச் சீர் செய்யமுடியும் என விளக்கிய பாங்கில் தற்போதைய அரசுக்கு முன்பாக உள்ள சவால்களை ஜனாதிபதி சிறப்பாக சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆனபோதிலும் இந்தச் சவால்களையெல்லாம் முறியடித்து வெற்றி பெறமுடியும் என்ற நம்பிக்கை தனக்கும் பிரதமருக்கும் உள்ளதாக மிகுந்த உறுதியுடன் ஜனாதிபதி தெரிவித்தது நம்பிக்கையளிப்பதாக இருந்தது.

இலங்கை வாழ் மக்கள், கடந்தகால ஆட்சியாளர்களால் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்ட வரலாறுகளுக்கு முன்பாக தற்போதைய ஆட்சியாளர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறுமிடத்து ஜன நாயகத்தின் மீதான நம்பிக்கை எதிர்வரும் காலத்தில் மேலும் அருகிச் சென்று குழிதோண்டிப் புதைக்கப் படலாம் என்பதை உணர்ந்து ஆட்சியாளர்கள் செயற்படவேண்டும்.

கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவது கடினமானது என்பதைச் சாதாரண மக்கள் கூட தெரிந்தே வாக்களித்திருப்பர். ஆனால், நல்லாட்சி தொடர்பான வாக்குறுதிகள் இந்த நாட்டின் எதிர்கால இருப்புக்கும் சிறப்பான பயணத்துக்கும் அடித்தளமானது என்பதை உணர்ந்து அவற்றை மேலும் தாமதிக்காது நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | | 1 | | | 8 |
| 8 | | | 4 | 6 | | 2 | 3 | |
| 5 | | 6 | | 2 | | | | |
| | 8 | | | 7 | | | | 5 |
| | | | | | | | | |
| 1 | | | | 3 | | | 4 | |
| | 2 | | | 5 | | 6 | | 7 |
| | 5 | 1 | | 8 | 7 | | | 3 |
| 9 | | | 2 | | | 8 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 8 | 5 | 9 | 1 | 3 | 4 | 6 |
| 6 | 1 | 3 | 8 | 4 | 7 | 2 | 5 | 9 |
| 4 | 5 | 9 | 2 | 3 | 6 | 1 | 8 | 7 |
| 3 | 6 | 4 | 7 | 1 | 8 | 9 | 2 | 5 |
| 9 | 7 | 1 | 4 | 2 | 5 | 8 | 6 | 3 |
| 2 | 8 | 5 | 3 | 6 | 9 | 4 | 7 | 1 |
| 8 | 9 | 6 | 1 | 5 | 4 | 7 | 3 | 2 |
| 5 | 4 | 2 | 9 | 7 | 3 | 6 | 1 | 8 |
| 1 | 3 | 7 | 6 | 8 | 2 | 5 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




அன்ரனி @MaGeShAnTonY
தண்ணீரை சேமிப்போம்
பிற உயிர்களையும்
காப்போம்... !!!










"பிச்சை எடுக்கிறது மகா கேவலம் அப்பா...!

"நான் உங்களை பிச்சை எடுக்க சொல்லலையே..

போடத்தானே சொல்றேன்...!"



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** நண்பர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, விடாமுயற்சி தேவைப்படும். பணவரவு சுமாராக இருக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** செயலில் விழிப்புடன் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். பாதுகாப்பு குறைவான இடத்துக்குச் செல்ல வேண்டாம்.

**மிதுனம்:** பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, புதிய அணுகுமுறை தேவை. வருமானம் மிதமாக இருக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**கடகம்:** தடைகளைத் தகர்த்தெறிய பணி புரிவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில், புதிய சாதனை உருவாகும். ஆதாயம் அதிகரிக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். ஆன்மிகச் சுற்றுலா செல்ல வாய்ப்புண்டு.

**சிங்கம்:** எவரிடமும் நிதானித்து பேசுவது நல்லது. தொழிலில், கூடுதல் மூலதனம் தேவைப்படும். இலாபம் படிப்படியாக உயரும். பெண்கள், பணம், நகை இரவல் கொடுப்பது கூடாது.

**கன்னி:** உங்களின் பேச்சால் சிலர் அதிருப்தியடைவர். தொழிலில், முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். அரசு உதவி கிடைப்பதில் தாமதம் இருக்கும்.

**துலாம்:** செயலில் மதிநுட்பம் நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். வழக்கு விவ காரத்தில் நல்ல தீர்ப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்:** நல்லவர்களின் ஆலோசனை கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் கூடும். வாகன பயணத்தில் மிதவேகம் தேவை. பெண்கள் சிக்கனத்தின் மூலம் சேமிப்பர்.

**தனுசு:** குடும்பத்தினரிடம் அன்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்திகரமாக கிடைக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.

**மகரம்:** பெற்றோரின் அறிவுரையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான ஆதாயம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பெண்கள், பணம், நகை இரவல் கொடுப்பது கூடாது.

**கும்பம்:** வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், இலாபம் அதிகரிக்கும். உறவினர் வருகையால், மகிழ்ச்சி உண்டாகும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வர வாய்ப்புண்டு.

**மீனம்:** செயல்களில் நேர்த்தி மிகுந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். நிலுவைப்பணம் கிடைக்கும் சுப நிகழ்ச்சியில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

ஒரு நாள் தந்தையை ஒரு உயர்தர ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் சென்றான் மகன். தந்தையோ வயது முதிர்ந்தும் கொஞ்சம் இயலாமலும் இருந்தார். அவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது பலவீனமாக இருந்ததால், சோற்றுப் பருக்கைகளும் உணவுத்துண்டுகளும் அவரது சட்டை ஜீன்ஸ் மேலும், தரைமேலும் விழுந்து கொண்டிருந்தன. பக்கத்திலிருந்து சாப்பிடுவோர் இதைப்பார்த்து தங்களது முகத்தைச் சுழித்துக் கோணல் மாணல் ஆக்கி மகனைப் பார்த்து முறைத்துக்கொண்டு இருந்தனர். ஆனால் மகனோ மிகவும் அமைதியாக அப்பா சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இருவரும் சாப்பிட்டு முடித்ததும் மகன் எந்தத் தயக்கமும் இல்லாமல் தனது தந்தையை ஒய்வு அறைக்கு அழைத்துச் சென்று அவரது முகத்திலும், ஆடையிலும் ஒட்டி இருந்த உணவுப்பருக்கைகளை துடைத்துக் கழுவி, அவரது தலையை வாரி அவரது கண்ணாடியையும் துடைத்து அவருக்கு மாட்டினான்.

இருவரும் ஒய்வு அறையில் இருந்து வெளியில் வர ஹோட்டல் மிக அமைதியானது. மகன் சிட்டைக்குரிய பணத்தைச் செலுத்தி தனது தந்தையை கவனமாக அழைத்துச் செல்ல தயாரானான். அப்போது அங்கு சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் எழுந்து "எதை யாவது விட்டு விட்டுச் செல்கிறீர்களா" என்று கேட்டார். மகனோ "இல்லையே நான் எதையும் மிஸ் பண்ணவில்லை"– என்றார். அதற்கு அவர், "இல்லை நீங்கள் இங்கு சிலதை விட்டுச் செல்கிறீர்கள். இளையோருக்கு ஒரு பாடத்தை விட்டு விட்டுச் செல்கிறீர்கள். அத்தோடு எல்லாப் பெற்றோருக்கும் நம்பிக்கையை விட்டு விட்டுச் செல்கிறீர்கள்". என்றதும் அந்த ஹோட்டலே மிக அமைதி ஆனது.

மிகப்பெரிய மதிப்பு என்னவென்றால் எம்மை கவனமாகப் பார்த்துக்கொண்ட வயது முதிர்ந்தோரை நாமும் கவனமாகப் பார்த்துக்கொள்ளும் திறமை தான்.

பழகத்தில் பிடித்தது



# மணல் கயிறு படத்துக்கு பாடுகிறார் அனிருத்

34 வருடங்களுக்கு முன் வெளியாகி வெற்றிகரமாக ஓடிய படம் "மணல் கயிறு". விசு இயக்கிய இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் உருவாக்கப்படவுள்ளது. "ஸ்ரீதேனாண்டாள் பிலிம்ஸ்" நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படத்தை "யாருடா மகேஷ்" பட புகழ் மதன் குமார் இயக்குகிறார். தரண் குமார் இசை அமைக்கிறார். இப்போது இந்த படத்துக்காக தரண்குமார் இசையில் அனிருத் பாடலை பாடவிருக்கிறார் என்ற தகவலை படக்குழுவினர் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளனர். "மணல் கயிறு" முதல் பாகத்தில் விசு, எஸ்.வி.சேகர், குரியகோஸ் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்திருந்தனர். இப்போது உருவாகும் "மணல் கயிறு" இரண்டாம் பாகத்தில் எஸ்.வி.சேகரின் மகன் அஸ்வின் சேகர் கதாநாயகனாக நடிக்க, பூர்ணா கதாநாயகியாக நடிக்கிறார். பாடல்களை நா.முத்துக்குமார் எழுதுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 60 | 80 | 50 | 80 | 30 | 70 |
| கத்தரி | 60 | 40 | 60 | 50 | 50 | 50 | 40 | 30 |
| கரட் | 70 | 90 | 80 | 100 | 80 | 140 | 80 | 120 |
| மரவள்ளி | 50 | 60 | 50 | 50 | 50 | 60 | 40 | 50 |
| பயிற்றை | 80 | 80 | 80 | 100 | 140 | 120 | 50 | 60 |
| பாகல் | 120 | 100 | 100 | 100 | 120 | 120 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 100 | – | 80 | 100 | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 80 | 90 | 80 | 100 | 70 | 100 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 80 | 120 | 80–100 | 130 | 100 | 70 |
| பூசணி | 40 | 20 | 40 | 40 | 20–30 | 40 | 15 | 20 |
| தக்காளி | 120 | 100 | 100 | 120 | 100 | 120 | 60 | 120 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 30 | 40 | 40 | 30 | 30 |
| கீரை | 20 | 30 | 30 | 15 | 30 | 40 | 25 | 40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 10 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 90 | 80 | 80 | 60 | 120 | 50 | 60 |
| புடோல் | 50 | 50 | 60 | 60 | 50 | 60 | 30 | 60 |
| கோவா | 50 | 80 | 80 | 100 | 60–70 | 100 | 80 | 60 |
| வெண்டி | 100 | 60 | 100 | 100 | 80 | 60 | 50 | 40 |
| போஞ்சி | 160 | – | 160 | 160 | 140–160 | 120 | 130 | 190 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 | 140 | 100–120 | 140 | 100 | 190 |
| தேங்காய் | 40 | 30 | 50 | 40–50 | 35–40 | 40 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 80 | 80 | 80–120 | 100 | 70 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 200 | 400 | 400 | 400 | 250 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15–20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 40 | 80 | 100 | 80 | 60–80 | 80 | 50 | 40 |
| இராசவள்ளி | 150 | – | 160 | 160 | 140–160 | 160 | 110 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 280 | 300 | 200 | 300 | 400 | 200 | 300 |
| பனங்கிழங்கு | – | – | – | – | – | – | – | – |





## அலைபேசிக்கான கவர்

குமிளி வடிவில் அலைஹறிபிக் கான கவர்கள் அறிமுகமாகியுள்ளன. பல வர்ணங்களிலும் இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். இவற்றின் விலை 550 ரூபாவில் இருந்து 650 ரூபா வரை விற்பனை செய்யப் படுகிறது.



## மா பிசையும் போது

- மாப் பதார்த்தங்கள் மிருதுவாகவும், சுவையாகவும் இருக்க வேண்டும் என்று சாப்பிடுபவர்கள் ஆசைப்படு வார்கள். அதற்கு மா பிசையும் போது சில எளிய வழிமுறைகளை கடைபிடித்தாலே போதுமானது. அதற்கான சில டிப்ஸ் உங்களுக்காக கொடுக்கப்பட்டுள்ளது.
- சமபோசாவுக்கு மா பிசையும் போது மைதாமாவுடன் சிறிது சோளமா சேர்த்து பிசைந்தால் வெகுநேரம் மொரமொரப்பாக இருக்கும்.
- கோதுமை அடை செய்ய கோதுமை மாவுடன், கடலை மா, தயிர் சேர்த்து பிசைந்தால் அடை மிருதுவாக இருக்கும்.
- பூரி தயாரிக்க மைதாவுடன், கோதுமை மா, சிறிது சீனி, சேர்த்து பிசைந்தால் மிருதுவாக இருக்கும்.
- பூரி மாவுடன் சிறிது குலோப் ஜாமுன் மிக்ஸ் சேர்த்து பிசைந்தால் பூரிக்கு சூப்பர் ருசி கிடைக்கும்.
- சோளமா ரொட்டி செய்ய வேக வைத்த உருளைக்கிழங்கை மசித்து, மாவுடன் சேர்த்துப் பிசைந்தால் ரொட்டி மிருதுவாக வரும்.
- கடலை மா பப்படம் செய்ய கடலை மாவுடன் சிறிது மைதா கலந்து பிசைந்து தயாரியுங்கள்.
- பரோட்டா செய்ய மைதா மாவுடன், கால் பங்கு கோதுமை மா கலந்து காய்ச் சிய எண்ணெய், தண்ணீர் கலந்து இலகுவாக பிசையவும்.
- மசாலா ரொட்டி செய்ய கோதுமை மாவுடன் மிளகு, சீரகம், சேர்த்து பிசையலாம்.



## வெங்காய வடை

### தேவையானவை

உளுத்தம் பருப்பு - 1 கப்
பச்சையரிசி - 1 கரண்டி
வெங்காயம் - அரைக் கப்
கறிவேப்பிலை - சிறிது
பச்சை மிளகாய் - 2
இஞ்சி - 1 துண்டு
பெருங்காயம் - அரைக்கரண்டி
உப்பு - ருசிக்கேற்ப
எண்ணெய் - தேவையான அளவு.

### செய்முறை

அரிசி உளுத்தம் பருப்பை ஒரு மணி நேரம் ஊற வையுங்கள்.
பின்னர் ஆட்டுக்கல்லில் போட்டு நன்கு பட்டுப்போல அரைத்தெடுங்கள்.
அதில் பொடியாக நறுக்கிய வெங்காயம், மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை, பெருங் காயம், உப்புச் சேர்த்து நன்கு பிசையுங்கள்.
காயும் எண்ணெயில (நடுத்தர சுவாலையில்) சிறு சிறு வடைகளாக போட்டு பொன்னிற மானதும் எடுத்துப் பரிமாறுங்கள்.



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 800 | 800 | 400 | 800 |
| நண்டு | 250 | 600 | 300 | 400 | 300 | 250 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 600 | 400 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 700 | 500 | 600 |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 500 | 400 | – |
| விளை | 650 | 500 | 400 | 400 | 500 | 300 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 250 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 900 | – | – | 500 | 400 | – |
| ஓரா | 400 | 350 | – | – | 600 | 300 | 350 |
| திரளி | 300 | 300 | 200 | 250 | 400 | 100 | 350 |
| நகரை | 250 | 300 | – | 300 | 300 | 300 | 370 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 300 | 250 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 200 | 200 |
| மதனம் | 150 | 250 | 180 | 350 | 400 | 300 | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | 50 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | 250 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 300 | 300 | – |

## நாளை

சித்திரை-17
சனிக்கிழமை 30.04.2016
திதி: அட்டமி பி.ப.04.08 வரை
நட்சத்திரம்: திருவோணம்
பி.ப.05.41 வரை
ராகுகாலம்:
08.58-10.28 வரை
சுபநேரம்:
02.58-04.28 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் ஞானானந்தம்



இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் ஞானானந்தம் நேற்று (28.04.2016) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், சறோஜினி தேவியின் அன்புக் கணவரும், கலையரசி (லண்டன்), ஞானகரன் (உரிமையாளர் - கவீசா மல்ரிமாட் - இணுவில்),ஞானசொரூபன் (ஆசிரியர் - மு/உடையார்கட்டு மகாவித்தியாலயம்), ஞானலோசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தகுமார் (லண்டன்), வாசுகி, அமிர்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேசசெயலகம், உடுவில்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கதீசன், கஜித்தன், நிலாவாணி, ஞானகவீசன், கரநிதா, ஞானஜினோஷன், ஞானகுகர்ஷன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற மங்கயற்கரசி மற்றும் சறோயினிதேவி, காலஞ்சென்ற ஆயிலியம் மற்றும் ஜெயமணி, சச்சிதானந்தம், அன்னலட்சுமி, சதானந்தம், அருளானந்தம் (கனடா), புஸ்பராணி (கனடா), செல்வராணி(ஆசிரியை- யா/ இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசையாவின்(ஓய்வுபெற்ற ஆசிரியர்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிவகாமி அம்மன் கோயிலடி,**
**இணுவில் கிழக்கு, இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**077 923 5742**

## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி ஜெயசோதி

(ஓய்வுபெற்ற கணித ஆசிரியை , யாழ்ரன் கல்லூரி-காரைநகர், வைத்தீஸ்வராக் கல்லூரி-யாழ்ப்பாணம்)

காரைநகர் பொன்னம்பலம் வீதியைப் பிறப்பிடமாகவும் கலட்டி அம்மன் வீதி, யாழ்ப் பாணத் தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி ஜெயசோதி கடந்த (27.04.2016) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.


அன்னார் பரமசாமி (சாமியார் -சோதிடர், வைத்தியர்) -அன்னமுத்து (ஆசிரியை) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், பருத்தித்துறை யைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி-மாணிக் கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஜெயசோதியின் (அதிபர்) அன்பு மனைவியும், பவானி (பிரான்ஸ்), Dr. ஜெயலன் ஆகியோரின் அன்பு தாயாரும், Dr. சந்திரமாலாவின் அன்பு மாமியும், நவீனா (பிரான்ஸ்), சிந்தியா (பிரான்ஸ்) ஆகியோரின் அம்மம்மாவும், யுகன்யா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), கல்கிஜன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், பஞ்சாட்சரம் (பொறியியலாளர்-ஆஸ்திரேலியா), பத்மநாதன் (பொறியியலாளர்-ஆஸ்திரேலியா), சிவகங்கை, காலஞ்சென்ற பரவிரதாதேவி, கனகேஸ்வரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஈஸ்வர பாதம் (வல்வெட் டித்துறை), பரஞ்சோதி மற்றும் தம்பிப்பிள்ளை (Rtd CTB), வனதேவா (ஆஸ்தி ரேலியா), Dr. இராஜரட்ணம் (வவுனிக்குளம்), கலைவாணி (ஆஸ்திரேலியா), கணேஸ்வரி (ஆஸ்தி ரேலியா), சுசிலா (வவுனிக்குளம்), காலஞ்சென்ற மனோன்மணி, புனிதா (பருத்தித்துறை), ஜெயந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், சிவந்தி (ஆஸ்தி ரேலியா), நிசாந்தி (ஆஸ்திரேலியா), சபேசன் (ஆஸ்திரேலியா), செல்வபாலன், தவச் செல்வன், தமிழ்ச்செல்வி, தமி ழினி, சபேசன், மோகன், தயாழினி (பிரான்ஸ்), காந்திமாலா, பிருந்தா (பிரான்ஸ்), சுகந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற சுகந்தன், சஜீவன் (ஆஸ்திரேலியா), சிவராஜி (லண்டன்), சுகந்தினி, சிவரஞ்சி (கொழும்பு பல் கலைக்கழகம்), நிதர்சா (லண்டன்), குமுதா, சதீஸ்குமார், பிரதீப்குமார், முரளிதரன் (இந்தியா) ஆகியோரின் பெரியம்மாவும், தங்கராசா (தங்கப் பழம்-பருத்தித்துறை), தரும லிங்கம், கைலைநாதன் (பிரான்ஸ்), ஞானமலர் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கலட்டி அம்மன் வீதியிலுள்ள இல்லத்தில் 01.05.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிக்கு நடைபெற்று 9.30 மணிக்கு காரைநகரில் உள்ள அவரது வீடு ஊடாக இறையுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு தகனக்கிரியை மேற்கொள்வதற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மகன் . Dr. ஜெ. ஜெயலன்**
சுஜீவா தாய்மைப் பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை,
மருத்துவப் பதிவாளர் யாழ் நகர் மேற்கு,
யாழ். போதனா வைத்தியசாலை.

## மரண அறிவித்தல்

### திருமதி தர்மபூபதி விசுவலிங்கம்



மல்லாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மபூபதி விசுவலிங்கம் 27. 04.2016 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை, செல்வராசா, தங்கம்மா மற்றும் சகுந்தலாதேவி, சாரதாதேவி, ஜெயராசா, சறோஜினிதேவி ஆகியோரின் சகோதரியும் ஜெயக்குமார் (ஜேர்மனி), செல்வகுமார், விஜயகுமார் (பிரான்ஸ்), தஜிப்குமார் (கனடா), பகீரதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வரூபி(ஜேர்மனி), ஜெயந்தி, பவானி (பிரான்ஸ்), சாமினி (கனடா) ஆகியோரின் மாமியாரும் கொலுசன் அபிநயா, ஆரபி, அபிஷன், அபூர்வா, யுசாந்தன்-சுபகம்சி, துசாந்தினி -நிசாந்தன், யுசா, சபிர்ணா, தஜிந்தன், புவின்சன், சங்கீர்த்தா, யதுர்சன்,நிதர்சன்,லக்சன் ஆகியோரின் போத்தியும் வைஷ்ணவி, கனிஸ்ரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பிறப்பு**
**15.08.1944**

**இறப்பு**
**27.04.2016**

**மல்லாகம் கிழக்கு,**
**மல்லாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 505 3534**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழ

பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நீதிமன்றத்தின் அனுமதியுடன் கடந்த செவ்வாய்க்கிழமை தங்கப் புதையல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் இயங்கிவந்த தமிழீழ வைப்பகத்தின் தலைமைச் செயலகம், கேப்பாப்பிலவு வீதி, லூர்து மாதா சந்தியில் உள்ள இரண்டாம் காணியில் 2009 ஆம் ஆண்டுவரை செயற்பட்டு வந்தது.

குறித்த இடம் இராணுவக் கட்டுப்பட்டுக்குள் வரும் முன்னர், வைப்பகத்தின் தலைமைச் செயலகத்துக்கு முன்னால் இருந்த தனியார் ஒருவரின் வெற்றுக் காணியில் இருந்த ஆழமான மண் கிணற்றுக்குள் மக்களால் அடைவு வைக்கப்பட்ட தங்க நகைகளைப் போட்டுக் கிணற்றை மூடியுள்ளனர் எனத் தமிழீழ வைப்பகத்துடன் தொடர்புடைய விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் நீதிமன்றத்தின் ஊடாகத் தகவலை வழங்கியுள்ளார்.

இதனையடுத்தே முல்லைத்தீவு நீதிமன்றத்தின் அனுமதியுடன் கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன. குறித்த அகழ்வுப் பணிகள் நடைபெறும் இடத்தில் மாவட்ட நீதிபதி சமுகமளித்ததுடன், இலங்கை மின்சார சபையினர் சிறப்பு மின்னிணைப்புச் செய்திருந்தனர். நீண்ட நேரமாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வு முயற்சியில் எதுவும் கிடைக்கப் பெறாததால் அந்தப் பணி இடைநிறுத்தப்பட்டது.

தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.00 மணிக்கு மீண்டும் அகழ்வுப் பணி இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் குறித்த அகழ்வுப் பணிக்காக பெரிய அளவிலான பைக்கோ இயந்திரம் கிடைக்கவில்லையெனப் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையினர் தெரிவித்ததை அடுத்து, இயந்திரம் கிடைக்கப் பெறும் வரை அகழ்வுப் பணிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குறித்த பகுதிக்குப் புதுக்குடியிருப்புப் பொலிஸாரை பாதுகாப்பு வழங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-21)

## திடீர்க்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதிகள் மற்றும் போராளிகள் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு வருகின்றனர். சாவகச்சேரி மறவன்புலோ பகுதியில் கடந்த மாதம் 30 ஆம் திகதி தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருள்கள் மீட்கப்பட்டிருந்தன. இதன் பின்னர் இந்தக் கைது நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதுவரை 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதிகள் மற்றும் முன்னாள் போராளிகள் உள்ளடங்குகின்றனர். இந்தத் தொடர் கைதுகள் காரணமாக வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது.

கைது செய்யப்படுகின்றமைக்கான காரணம் தெரியப்படுத்தப்படாமையினால், மக்கள் மத்தியில் குழப்ப நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில், இந்தக் கைதுகள் எதற்காக மேற்கொள்ளப்படுகின்றன என்பது தொடர்பில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சியைத் தொடர்பு கொண்டு கேட்ட போது,

கைது நடவடிக்கைகள் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறித்த கைதுகள் தொடர்பில் இதுவரை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பின்னரே அதுபற்றிக் கூற முடியும் - என்றார்.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒருவர் கைது செய்யப்படும்போது, அவரை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## விக்கி

முதலமைச்சர் மற்றும் அரச அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற இருந்த சந்திப்பு திகதி குறிக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண காணி விவகாரம் தொடர்பில் நேற் றையதினம் சந்திப்பு இடம்பெற இருந்தது. கடந்த 18 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில், அதிகாரிகள் முழுமையான விவரங்களைச் சமர்ப்பிக்கவில்லை. இதனால் அதிருப்தியடைந்த ஜனாதிபதி, கூட்டத்தை 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன், அன்றைய தினம் முழுமையான விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு தெரிவித்திருந்தார்.

உடல் நலக் குறைவினால் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் கலந்து கொண்டிருக்கவில்லை. இந்த நிலையில் நேற்றைய கூட்டத்துக்கு வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், நேற்று இடம்பெறவிருந்த கூட்டம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக இரண்டு தினங்களுக்கு முன்னர் அரச அதிகாரிகளுக்குத் தொலை நகல் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் வடக்கு மாகாண முதலமைச்சருக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், நேற்றைய தினம் எந்தச் சந்திப்பும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி சந்திரசிறி இராஜேஸ்வரன்

(பழைய மாணவி - யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்- யாழ். கல்வித் திணைக்களம், யாழ். மாநகரசபை)

**தோற்றம் :17.05.1953** **மறைவு :28.04.2016**



யாழ். நல்லூர் கல்வியங்காடு, பூதவராயர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரசிறி இராஜேஸ்வரன் நேற்று (28.04.2016) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு (சீனிவாசகம்)-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் சண்முகம்பிள்ளை-தெய்வானை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற இராஜேஸ்வரனின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்-யாழ். கனகரெத்தினம் மகா வித்தியாலயம்) அன்பு மனைவியும் கீர்த்தனனின் (Biomedical Science) பாசமிகு தாயாரும் லைலாராணி (ஓய்வு பெற்ற ஆசிரியை - றோ.க.த.க பாடசாலை-லண்டன்), சூரியகுமாரன் (லண்டன்), ஜெயசிறி (லண்டன்), ராஜகுமாரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரவணன், குபேரன், பவித்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும்குணசீலன் (லண்டன்) அனுலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அர்ச்சனா, அபிரா ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.05.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் மு.ப 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூரியகுமாரன் (சகோதரர்)-இலங்கை
+94765349335

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சந்தியாப்பிள்ளை பேணாட்



கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை பேணாட் 26.04.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து - மேரியோசப்பின் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஸ்ரெலாவின்(தேவி) அன்புக் கணவரும் மரிற்றாறொசானி (லண்டன்), அருட்சகோதரி ஆன்ரூபினி(திருக்குடும்ப சபை), கிறிஸ்ரா சாளினி (ஆசிரியை - மன்/சென் பற்றிமா ம.ம.வித்தியாலயம், பேசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தின்(லண்டன்) பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான எட்வீசம்மா, அல்போன்ஸ் , ஏனெஸ்ற், பத்திராஜா மற்றும் பங்கிராஸ், மேரி ஜசிந்தா(றஞ்சினி) ஆகியோரின் பாசமிகு சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(30.04.2016) சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து அடைக்கல அன்னை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.135, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### இராமநாதன் சங்கர்

யாழ்ப்பாணம் நீர்வேலி அகிலேசர்வளவைச் சேர்ந்த இராமநாதன் சங்கர் 27.04.2016 புதன் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - விமலாதேவி தம்பதியரின் ஏகபுதல்வன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.04.2016) வியாழக்கிழமை நீர்வேலி அகிலேசர் வளவில் உள்ள இல்லத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பெரியதந்தை த.ந.பஞ்சாட்சரமும்
உடன்பிறப்பினரும்

### சண்முகம் வைத்தீஸ்வரன் (ஒயா)



பிறப்பு 1958.10.15 இறப்பு 2016.01.27

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் வைத்தீஸ்வரன் 27.04.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - அன்னபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் நவமணிதேவியின் அன்புக் கணவரும் நவகோணேஸ்வரன்(இத்தாலி), கெங்காதரன் (இத்தாலி), ரதினி, ரஜனி, சிவதரன் (பொஸ்டோல் தமிழ் மகா வித்தியாலயம், நாவலப்பிட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சம்மந்தன், லீலாவதி, சதானந்ததேவி, லோகநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகிர்தா, தர்ஷனி, ஜெயக்குமார், வரதராஜன், டில்மினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆருஜன், நிரோஜன், நதிஷா, நிதுஷா, டிலக்சிகா, கயூரா, பரணிகா, கஜநிதன், வினூஸ், ஹர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் யோகமலர், ஆனந்ததேவி, யோகேஸ்வரன், கணேஸ்வரன் காலஞ்சென்ற சிவனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

அயட்டயபுலம்,
குப்பிளான் தெற்கு, குப்பிளான்.

தகவல்:
குடும்பத்தினர்.

**021 790 3238**

### செல்லப்பா சபாரட்ணம்



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட செல்லப்பா சபாரட்ணம் 27.04.2016 புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான கார்த்திகேசு - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, சிவபாக்கியம், குணரத்தினம், இராசலிங்கம் மற்றும் வடிவம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, செல்லத்துரை, கண்ணம்மா, கேதீஸ்வரி, நாகராசா ஆகியோரின் மைத்துனரும், மகளான பெரியகிளி என அழைக்கப்படும் மகேஸ்வரியின் அன்புத் தந்தையும், தரும லிங்கத்தின் (ராசு) மாமனும், சிறிலிங்கம் (சதீஸ் - கனடா), சுதர்சினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4 மணிக்கு தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

52/6, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(J/797)
(11,18)

தகவல்:
மருமகன் மற்றும்
பெறாமக்கள்.

## வடக்கு

திடீரென வடக்கு முதலமைச்சர் அதனைக் கையளித்துள்ளார்.

வடக்கு மாகாண அரசினால், தமிழ் மக்களின் வேணவாக்களை உள்ளடக்கிய தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. சமஷ்டி அடிப்படையில் அதிகாரப் பகிர்வு அமைய வேண்டும் என்று வலியுறுத்திய இந்தத் தீர்வுத் திட்டம் கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற மாகாணசபை அமர்வில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தத் தீர்வுத் திட்ட வரைவை, நாளை 30 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோர் கையளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் தீர்வு வரைவை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசமைப்பு நிர்ணயச் சபையின் தலைவரும் சபாநாயகருமான கரு ஜெயசூரியவிடம் வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

சபாநாயகரிடம் கையளிப்பதற்கான திகதியை வடக்கு மாகாண முதலமைச்சர் நேற்றுக் கோரியுள்ளார். அதற்குச் சபாநாயகர் அடுத்த வாரம் தாம் இங்கே நிற்கமாட்டேன் என்று தெரிவித்துள்ளார். இதனையடுத்து நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் நாடாளுமன்றத்துக்குச் சென்ற முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோர், சபாநாயகரைச் சந்தித்துத் தீர்வுத் திட்ட வரைவை சமர்ப்பித்துள்ளனர்.

இதன்போது முதலமைச்சர், எமது தீர்வுத் திட்ட வரைவுக்கு எதிராக தென்பகுதி ஊடகங்கள் பலவற்றை எழுதுகின்றன. ஆனால் நாம் நாட்டை ஒன்றுபடுத்தவே இதனைக் கையளிக்கின்றோம். நாட்டைப் பிரிப்பதற்காக அல்ல என்று தெரிவித்துள்ளார். இதனையடுத்து சபாநாயகர், தான் இதனைச் சபையில் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக, முழு நாடாளுமன்றமும் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்ட பின்னர், சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது தீர்வுத் திட்ட முன்மொழிவு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## சுன்னாகம்

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வட பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகம் மற்றும் குடிதண்ணீர் பிரச்சினை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளும் கூட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இது தொடர்பிலான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்படி பணிப்புரையை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சுன்னாகம், வலிகாமம் வடக்கு போன்றவற்றிலும் அவற்றை அண்டிய கிராமங்களிலும் நிலக்கீழ் நீர் மாசடைவதால், பொதுமக்களின் உடல் நலம் பாதிக்கப்படுகின்றது. அவர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி இருக்கின்றனர். இவ்வாறு அதிகாரிகள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

எண்ணெய்க் கசிவு நிலத்தடி நீருடன் கலப்பது தொடர்பில் வடக்கு மாகாண சபை கல்விசார் நிபுணர்கள் மூலம் மேற்கொண்ட ஆய்வு முடிவுகளுக்கும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நடத்திய ஆய்வு முடிவுகளுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுவது குறித்து தாம் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகக் குறிப்பிட்ட அமைச்சர் ஹக்கீம், சம்பந்தப்பட்ட பகுதிகளில் புறம்பாக மேலும் ஆய்வுகளை மேற்கொண்டு சரியான தரவுகளையும், முடிவுகளையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றை விரைவில் தமக்குச் சமர்ப்பிப்பதற்கு உரிய நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரைவிடுத்தார்.

மேலும் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகள் மற்றும் இரசாயனக் கலவைகள் நீரில் கரைந்து நைட்ரேட்டின் அளவு உலக சுகாதார ஸ்தாபனத்தின் மதிப்பீட்டு அளவை விட, அதிகமாக நிலத்தடி நீரில் கலப்பதன் விளைவாக நீலக் குழந்தை (புளூ பேபி) போன்ற நோய் நிலைமைகள் ஏற்படுவது குறித்தும் அமைச்சர் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகவும் கூறினார்.

எனவே, பிரச்சினைகளுக்கு நிலைமாறு காலத் தீர்வு மற்றும் நிரந்தர தீர்வு என்பவற்றைக் காண்பது இன்றியமையாதது என்றும் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

இரணைமடு, தாளையடி விவகாரங்களில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் பற்றியும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தின் காக்கையன் குளம், இரணை இலுப்பைக் குளம் மக்கள் எதிர்நோக்கும் தண்ணீர் பிரச்சினை பற்றி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலி பாவா பாரூக், அமைச்சர் ஹக்கீமின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். முல்லைத்தீவு, மாங்குளம், வெலிஓயா பிரதேச மக்கள் எதிர்நோக்கும் தண்ணீர்ப் பிரச்சினைகள் பற்றியும் இந்தக் கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## நீதிமன்று

நீதிவான் சி.சதீஸ்தரன்.

அத்துடன் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடாக, 5 பேரும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வருடம் ஜனவரி 13 ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றம் முன்பாக இந்த வாள் வெட்டுச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. அப்போதைய நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில், இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வந்தது. குறித்த வழக்கு விசாரணைகள் நிறைவடைந்த நிலையில், நேற்று இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து விதிமுறைகளை மீறியதாக 6 பேருக்கு எதிராகப் பொலிஸார், மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். அந்த வழக்கில் அபராதம் செலுத்தி விட்டு நீதிமன்றிலிருந்து புறப்பட்ட போதே, மோட்டார் சைக்கிளில் அங்கு வாள்களுடன் திடீரென வந்திறங்கிய சுமார் 15 பேர் கொண்ட கும்பல், 3 பேர் மீது வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு, 3 பேரின் மோட்டார் சைக்கிள்களையும் கொள்ளையடித்துச் சென்றிருந்தனர்.

அதில் தொடர்புடையவர்களாக விசாரணை மூலமாகப் பொலிஸார் 8 பேரைக் கைது செய்திருந்தனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் மீது, சட்ட விரோதமாக ஒன்றுகூடியமை, மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களை வாளால் வெட்டிக் காயப்படுத்தியமை, மோட்டார் சைக்கிள்களைக் கொள்ளையடித்தமை உட்பட 8 குற்றவிவிசாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அவர்கள் 8 பேரும் குறித்த குற்றச் சாட்டுக்கள் எதனையும் ஏற்றுக் கொள்ளாது, தாம் சுற்றவாளிகள் என்று மன்றில் கூறியிருந்தனர். அதனால் அவர்கள் மீதான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கலை என்று அழைக்கப்படும் அழகன் ரனீஸ்வரன், ஜெகன் என்றழைக்கப்படும் கந்தையா கைலாயம், செல்வேஸ்வரன் பிரதாப், கண்ணன் ஜேம்சன், வேலாயுத பிள்ளை ஜெனீஸ்வரன், மகாதேவன் றேணுசன், நவாலி நிரோஸ் என அழைக்கப்படும் தனராஜ் நிரோசன், புள்ளட் என அழைக்கப்படும் காங்கேஜன் பிரதீபன் ஆகியோரே வாளால் வெட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, வாள்வெட்டுத் தொடர்பில் சுமார் 25 க்கும் மேற்பட்ட சாட்சியங்களும் வழக்கை வலுப்படுத்துவதாகப் பதிவாகின. விசாரணை நிறைவில் அவர்களில் ஜேம்சன், ஜெனிஸ்ரன், றேணுசன் ஆகியோர் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். ஏனைய 5 பேருமான ரனீஸ்வரன், கைலாயம், பிரதாப், நிரோசன், பிரதீபன் ஆகியோருக்கு எதிராக முதல் 3 குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்பட்டன.

இதனையடுத்து அவர்கள் குற்றவாளிகள் என்று நீதிமன்றினால் கடந்த மாதம் 28 ஆம் திகதி அறிவிக்கப்பட்டனர். அவர்கள் குற்றவாளிகள் என்பதனால், அவர்களுக்கான தண்டனைத் தீர்ப்பளிக்கும் திகதி நேற்றுவரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இதன்படி நேற்று மேலதிக நீதிவான் சதீஸ்தரன் முன்னிலையில் இந்த வழக்குத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது 5 பேருக்கும், சட்டவிரோதமாக ஒன்றுகூடிய குற்றத்துக்காக தலா 6 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. வாளால் வெட்டிக் காயப்படுத்தியதற்காக 5 பேருக்கும் தலா 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும் மோட்டார் சைக்கிளைக் கொள்ளையடித்த குற்றத்துக்காக 5 பேருக்கும் தலா ஒன்றரை வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதன்படி 5 பேருக்கும் தலா 4 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அது தவிர பாதிக்கப்பட்ட ஸ்ரீ.ஸ்ரீசங்கருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் 5 பேரும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நட்டஈடு செலுத்த வேண்டும் என்றும், அதனைச் செலுத்தத் தவறின் ஒவ்வொருவரும் 4 வருடங்களுக்கு மேலதிகமாக 6 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் நீதிவான் தண்டனைத் தீர்ப்பளித்தார்.

தண்டனையைக் குறைக்குமாறு குற்றவாளிகள் சார்பில் முன்னிலையான சட்டத் தரணிகள் நேற்று மன்றில் கோரிக்கை விடுத்தனர். எனினும் குற்றத்தின் பாரதூரத் தன்மை, தற்போதைய சமூக நிலை உள்ளிட்ட பல காரணங்களையும் கூறி, அவர்களது கோரிக்கையை நிராகரித்துத் தீர்ப்பளித்தார். எனினும் 2 ஆம் சந்தேக நபரான கைலாயத்தின் பல சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு அவருக்கான கடூழியச் சிறைத் தண்டனை மாத்திரம் 10 வருடங்களுக்கு ஒத்தி வைத்தார் நீதிவான். வழக்கில் 1,2,8 ஆகிய எதிரிகள் சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவும், 3,4,5,6 ஆகிய எதிரிகள் சார்பில் வி.திருக்குமரனும், 7 ஆம் சந்தேக நபர் சார்பில் அற்புத ராஜாவும் வழக்கில் முன்னிலையாகினர். (த-வ-4)

## மகிந்தவுக்கு

நிராகரிக்கின்றது என்று ஜே.வி.பி. நேற்று அறிவித்தது.

அத்துடன், வடக்கு மாகாண சபையின் பிரிவினைவாதத் தீர்மானத்தை ஆயுதமாகப் பயன்படுத்தி, தெற்கில் மகிந்த அணியினர் இனவாதத்தைப் பரப்பி வருகின்றனர் எனவும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள் ளது. ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் பெலவத்தையி லுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அந்தக் கட்சியின் மேற்படி நிலைப்பாட்டை அறிவித்தார் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி ஆட்சி கோரி, வடக்கு மாகாண சபையில் பிரிவினைவாதத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இதை ஓர் ஆயுத மாகப் பயன் படுத்தி, தெற்கில் மகிந்த அணியினர் இனவாதத்தைப் பரப்பி வருகின்றனர்.

எனவே, இரு தரப்பினரதும் இந்த நடவடிக்கையால், நாட்டு மக்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை. இதனால் வடக்கு மக்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. ஆகவே, விக்னேஸ்வரனின் முயற்சி தோற்கடிக்கப்பட வேண்டும்.

போருக்குப் பின்னர், தேசிய சமத்துவத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய சூழ்நிலையில், இனவாதம் பரப்பப்படுகின்றது. இது பாதகமான செயலாகும். எனவே, மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதற்கு தீர்வு வழங்கவேண்டும். மாறாக இனவாதிகளின் கோரிக்கை நிறைவேற்றப்படக் கூடாது.

வடக்கு மக்கள் மீன்பிடி உட்பட பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இதைத் தீர்ப்பதற்குக் கூட்டமைப்போ அல்லது அரசோ நடவடிக்கை எடுக்கவில்லை. வடக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, வடக்கு மாகாண சபை கடந்த காலங்களில் எடுத்துள்ள நடவடிக்கைதான் என்ன? நிதி உரிய வகையில் பயன்படுத்தப்படவில்லை.

இதனால் வடக்கு மாகாண சபை மீது, மக்கள் அதிருப்தியில் இருக்கின்றனர். மக்கள் எதிர்ப்பு வலுக்கத் தொடங்கியுள்ளது. இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவே, இனவாதத்தைக் கையிலெடுத்து மக்களைத் திசை திருப்பும் வகையில் இப்படியொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறிப்பாக, தோல்வியடைந்துள்ள மகிந்த ராஜபக்ச சார்ந்த இனவாத குழுவுக்கு மீண்டும் உயிர்கொடுக்கும் வகையிலேயே விக்னேஸ்வரன் வடக்கில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார் என்றார். (த-வ-5)

## சிவகரன்

சேர்ந்த சிவகரன் பிணையில் விடுவிக்கப்பட்டார். சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட சிவகரன், சாவகச்சேரி மறவன்புலோ பகுதியில் கைப்பற்றப்பட்ட வெடிகுண்டுகள் தொடர்பிலேயே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட போது, சிவகரன் சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தன் முன்னிலையானார். குறித்த வழக்கை ஆராய்ந்த நீதிவான் திருமதி சிறிநிதி நந்தசேகரன் பிணையில் செல்ல அனுமதித்தார்.

அதன்படி, தலா ஒரு இலட்சம் ரூபா இரு ஆள் பிணையிலும், மாதாந்த இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் மன்னார் பொலிஸ் நிலையத் தில் ஒப்பமிடப்படவேண்டும் என்றும் உத்தர விட்டதோடு, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

மேலும், அடுத்த தவணை வரை வெளிநாடுகள் செல்வதாயின் பொலிஸ்மா அதிபரின் அனுமதியைப் பெறவேண்டும் எனவும் நீதிவான் கட்டளையிட்டார். (த-வ-4-9-101)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 491
சீட்டிழுப்பு திகதி 2016.04.28
வெற்றி இலக்கங்கள்
43 53 64 67 R
ரூ. 53,024,420/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1257
சீட்டிழுப்பு திகதி 2016.04.28
வெற்றி இலக்கங்கள்
04 21 49 64 G
ரூ. 13,971,080/=

7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தினகரம்பிள்ளை
செல்வகுமார்
தோற்றம் 28.05.1975
மறைவு 16.04.2009
திதி: சப்தமி (29.04.2016)
ஆண்டுகள் ஏழு ஆயிற்றோ
ஆருயிர் விட்டுப் பிரிந்து
மீண்டு மொரு முறை வாரீரோ
நாம் பார்த்து மகிழ மாண்டு நீ போனதெங்கே
மனம் கிடந்து துடிக்கிறதே
என்றும் உம் நினைவுடன்
தாய், உடன் பிறப்புக்கள்,
ம.மாலினி, நேருஜன் (மகன்),
வேப்பங்குளம்,
வவுனியா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவுக்

காணாமற்போயுள்ளனர்.முல்லைத்தீவு கள்ளப்பாட்டிலிருந்து முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவரின் படகில் மீனவர்கள் இருவரும் தொழிலுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர். தொழிலுக்குச் சென்ற இருவரும் நேற்றுக் காலை வரை கரை திரும்பவில்லை. இதனையடுத்து கள்ளப்பாடு மீனவர்கள் 4 படகுகளில் சென்று கடற்பரப்பில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது காணாமற்போன மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்ற படகு, பருத்தித்துறை குடத்தனைக் கடற்பரப்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. படகை மீட்ட கள்ளப்பாடு மீனவர்கள், அதனைக் கரைக்குக் கொண்டு வந்தனர்.இதன் பின்னர் நண்பகல் அளவில் 6 படகுகளில் சென்று மீண்டும் தேடுதல் நடத்தினர். இதன்போதும் காணாமற்போனவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இது தொடர்பில் பொலிஸாருக்கும், கடற்படையினருக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது. (த-வ-5-21-101-102)

## மோடி

சர்வதேச பௌத்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்ளவுள்ளார்.இந்தியப் பிரதமரின் அழைப்பின்பேரிலேயே அவர் இந்த நிகழ்வில்கலந்துகொள்கின்றார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மே 13ஆம் திகதி இந்தியாவுக்கான பயணத்தை ஆரம்பிக்கவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால, இந்தியப் பிரதமர் மோடியுடன் பேச்சுக்களை நடத்துவார்.இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி யின் பொதுச் செயலாளர் ராம் மாதவ் குறிப்பிட்ட நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளார். அவரே இந்தியப் பிரதமரின் அழைப்பை இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.உஜைனில் இலங்கையில் பௌத்தத்தின் மறுமலர்ச்சியில் முக்கிய பங்காற்றிய அநாகரிக தர்மபாலவை நினைவுகூரும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.இலங்கை அரசு உத்தேச பொருளாதார, வர்த்தக தொழில்நுட்ப உடன்படிக்கையில் கைச்சாத்திடவேண்டுமென இந்தியா மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. இந்த உடன்படிக்கை குறித்த பேச்சுக்கள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளன.பாக்கு நீரிணைக்கு அப்பால் உள்ள பெரிய சகோதரன் தன்னை பொருளாதார ரீதியாக ஆக்கிரமிக்கலாம் என இலங்கையில் காணப்படும் அச்சத்தைப் போக்குவதற்காக குறிப்பிட்ட உடன்படிக்கை சமச்சீரற்றதாகவும் தனக்குச் சார்பாகவும் காணப்படவேண்டும் என இலங்கை எதிர்பார்க்கின்றது. இலங்கையில் அதிகரித்து வரும் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த இந்த உடன்படிக்கை அவசியமானது என இந்தியாவும் இலங்கையும் கருதுகின்றன என்று இந்திய ஊடகம் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-சி)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பூமணி வல்லிபுரம்



கலட்டி அம்மன் வீதியை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி வல்லிபுரம் நேற்று (28.04.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மங்களம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தர் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தர் வல்லிபுரம் அவர்களின் அன்பு மனைவியும், ஜெயக்குமார் (ஜேர்மனி), சிவகுமார், உதயகுமார் (ஜேர்மனி), சந்திரகுமார் (சுவிஸ்) காலஞ் சென்ற செல்வகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், சியாமளாதேவி, தமிழ்ச் செல்வி, பிறேமினி, தர்சினி ஆகியோரின் அன்பு மாமியும், ஆருக்ஷி, ஆதிக்ஷா, நிவேதிகா, மயூரன், நிருத்திகா, மகினன், அனு சன், அனோஜன், கம்சினி, கார்த்திக் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராசமணி, நடராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயண் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

572/1, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். 077 489 5764

தகவல்:
குடும்பத்தினர்

## திருமதி கண்மணி மாணிக்கம்



அச்சவேலி தெற்கு, நாவலம் பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி மாணிக்கம் 26.04.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெள்ளையன்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குட்டியன்- தெய்வானை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சிவக்கொழுந்து, செல்லக்கண்டு, கிட்டிணர், பூவம் மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி, பெரியராசா, சின்னராசா, தங்கம், அன்னம் மற்றும் இரத்தினமணி ஆகியோரின் மைத்துனியும், சண்முகநாதன் (அச்சுவேலி, ப.தெ.கூ. சங்க ஓய்வு நிலைக்காசாளர்), இரஞ்சிதமலர் (டென்மார்க்), பவானந்தம் (சுவிஸ்), கமலம், காலஞ்சென்ற சாரதா மற்றும் பேபி, மகேஸ்வரி, விஜயபாரதி (சுவிஸ்), ஆனந்தராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தவமலர், ஞானசேகரம் (டென்மார்க), பூமலர், மகாலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), ரவீந்திரன், ஏகாம்பரம், சிவநேசராசா (சுவிஸ்), தேவபிரபா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் விஜயதாஸ்-சுகன்யா, சுகந்தன் (கனடா), சாரதா, சுகிதரன்-அனுசா (டென்மார்க), சுதாகரன் (டென்மார்க்) , சிந்துஜா (டென்மார்க்), திலீபன்-அனிஸ்ரா, துவாரகா-தபேஸ்வரன், தாரகா, துளசிகா, நிரேசன், மகிந்தன், தர்சன், டிலக்ஷன், கரிஸ் (சுவிஸ்), கயானா(சுவிஸ்)ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சஞ்சை (டென்மார்க்), சங்கீர்த்தனா (டென்மார்க்), அபிநயா, கிஷாந், நிதுஷா, டிதுயனா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2016) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழுக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்காடு,
அச்சுவேலி தெற்கு.

தகவல்: குடும்பத்தினர்.
077 679 3806
075 242 6863

# மரண அறிவித்தல்கள்

## சிவகுரு துரைராசா



பெரியவிளான் டச்சு வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு துரைராசா நேற்று (28.04. 2016) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வீரசிங்கம்-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான முத்துராசா, நடராசா, இராசரத்தினம் மற்றும் தம்பிராசா, நவரத் தினம், தவமணி, சரஸ்வதி, செல்வராசா ஆகி யோ ரின் அன்புச் சகோதரனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், ஜெயராசா, வடிவம்மா, செல்வராணி, புஸ்பராணி, புஸ்பராசா, செல்வச்சந்திரன், இந்து ராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சினி, ஸ்ரீ தரன், இரத்தின குமார், சந்திரசேகரன், சிவமலர், விக் னேஸ்வரி, விக்கி னராசா ஆகியோரின் அன்பு மாமனும், சஜீவ், சுநீதா, ஸ்ரீதேவி, கிஷோ, சிவலே ணுகா, சஜித், சிவாஜன், கேதீஸ்வரன், நிலானி, துவா ரகா, ஜனதா, தனுராஜ் ஆகியோரின் பாசமிகு பேர னும், சிகன்சிக்காவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04. 2016) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பெரியவிளான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
பெரியவிளான்,
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சற்குணவதி தாமோதரம்பிள்ளை



பாரதி வீதி, கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சற்குணவதி தாமோதரம்பிள்ளை கடந்த (27.04. 2016) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் புறூடி-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற M.S. புறூடி, M.P. புறூடி, சிவபாக்கியவதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறாணி (லண்டன்), சுவேந்தினி (கனடா), மகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணரட்ணம் (லண்டன்), ஞானசீலன் (கனடா), காலஞ்சென்ற சுபாஷினி மற்றும் அமுதா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் விஜயாம்பாள், பேரம்பலம் (கனடா), காலஞ்சென்றவர் களான கனகசபாவதி, இராம நாதன் மற்றும் இரத்தின வேல், கலைமகள், காந்தி என அழைக்கப்படும் லட்சுமி தேவி ஆகி யோரின் அன்பு மைத் துனியும், கரன், ஜனன், ரோசாணி, ரிஷானா, ஜேசன், ஜஸ்மின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04. 2016) வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு இல. 06, பாரதி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



**திருமதி. நீற்றம்மா பற்றிக் பெர்னான்டஸ்**
**(பச்சைக்கிளி டீச்சர்)**

(இளைப்பாறிய ஒட்டகப்புலம் றோ.க.த பாடசாலை ஆசிரியை)

பலாலி தெற்கு வசாவிளான் சென். ஜேம்ஸ் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. நீற்றம்மா பற்றிக் பெர்னான்டஸ் அவர்கள் 26.04.2016 செவ்வாய்க் கிழமையன்று காலமானார். இவர் காலஞ்சென்ற திரு திருமதி. செபதேயு பஸ்தியானம் தம்பதிகளின் புதல்வியும், காலஞ் சென்ற பற்றிக் பெர்னான்டஸின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அன்னம்மா (தவமணி) அவர்களின் அன்புச் சகோதரியும், அன்ரன், குமாரி, குமார், பொலின், பசில், ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார். அன்னாரின் பூதவுடல் தற்பொழுது அஞ்சலிக்காக வைட் ஹவுஸ் இல.180 பிரதான வீதி யாழ்ப்பாணம் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. அன்னாரின் பூதவுடல் 02.05.2016 அன்று ஒட்டகப்புலம் சென். ஜேம்ஸ் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, சென். ஜேம்ஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

தகவல் : பிள்ளைகள்
077 6136007, 077 3874286, 077 2066529, 077 3290234

# கண்ணீர் அஞ்சலி

## ஏரப்பன் செட்டியார் பஞ்சாட்சரம்



கடந்த (27.04.2016) புதன்கிழமை தமிழகம் சோழவந்தானில் அமரராகிவிட்ட எம்மை வாழ வைத்த எங்கள் சிறிய தந்தையின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்கின்றோம்.

| | |
|---|---|
| சி. கதிரமலை | பா. பாலசுப்பிரமணியம் (ராஜீ) |
| 347, K.K.S. வீதி, | 582, K.K.S. வீதி, |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |
| 077 628 2671 | 077 312 5247 |

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் பாலசுந்தரம்



பிறப்பு 14.08.1949 இறப்பு 26.04.2016

யாழ்.கரவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் பாலசுந்தரம் 26.04.2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தப்பு தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தப்பு தம்பதிகளின் அன்பு மருமகளும், பாலசுந்தரத்தின் அன்பு மனைவியும், பகீரதன் (கண்ணன்- ஜேர்மனி), மனோகரன் (காந்தன் - ஜேர்மனி), அகிலன் (சுதன் - இங்கிலாந்து), தனஞ்செயன் (குமணன் - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஷ்ண பிள்ளை, காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் சுப்பிரமணியம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரணிகா, சுவஸ்திகா (சோபா), பிரேமிளா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் சரஸ்வதி, கணேசராசா, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், தனோஜன், ஆரணி, சிவாகினி, அனீஷ், டிக்ஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பின்னர் சோனப்பு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேர்மன் வீதி,
கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.


பாலசுந்தரம் (கணவர்) - இலங்கை- +9477 7180 909, 077 353 8119,
அகிலன் (சுதன்)- +4477 5160 1171,
கண்ணன்- (ஜேர்மனி)- +4917 0527 0217,
காந்தன் (ஜேர்மனி)- +4915 2021 04787,
குமணன் (பிரான்ஸ்) - + 3375 1038 3073

(ஜெ/799)
(11,18)

# ரோகித், பொலார்ட் இன்னிங்ஸ்களால் கொல்கத்தாவை வென்றது மும்பை

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற மும்பை–கொல்கத்தா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றிபெற்றது மும்பை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. வழக்கம்போல கொல்கத்தாவின் ஆரம்ப இணையே அந்த அணிக்கு நம்பிக்கையான தொடக்கம் வழங்கியது. கம்பீர் நிதானிக்க உத்தப்பா மிரட்டல் போக்கைக் கடைப்பிடித்தார். பவர்பிளே முடிவில் அந்த அணி இலக்குகள் இழப்பின்றி 59 ஓட்டங்களைக் குவித்தது. 39 பந்துகளில் அரைச்சதம் கண்டார் கம்பீர். 36 ஓட்டங்களுடன் உத்தப்பாவை வெளியேற்றினார் ஹர்பஜன். கொல்கத்தாவின் அதிரடி வீரர்களான சூரியக்குமார் யாதேவ், ரசல் இருவரதும் கைகளைக் கட்டிப் போட்டனர் மும்பையின் பந்துவீச்சாளர்கள். யாதேவ் 17 பந்துகளை எதிர்கொண்டு 21 ஓட்டங்களையும், ரசல் 16 பந்துகளை எதிர்கொண்டு 22 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். 59 ஓட்டங்களுடன் கம்பீரை வீழ்த்தினார் மக்கெலிநகன். திடீர் சரிவு கண்டது கொல்கத்தாவின் இன்னிங்ஸ். கடைசிக்கட்ட அதிரடியை செவ்வனே செய்தார் யூசொப் பதான். அவர் 8 பந்துகளில் 19 ஓட்டங்களைக் குவிக்க முடிவில் கொல்கத்தா 174-5. அந்த அணியின் ஆரம்பத்துடன் ஒப்பிடுகையில் முடிவு தடுமாற்றமே.



120 பந்துகளில் 175 ஓட்டங்கள். நரைன், ரசல், சகிப் அல் ஹசன் போன்ற சர்வதேசப் பந்துவீச்சாளர்கள் கொல்கத்தா அணியில் இருந்தாலும் இந்தப்பந்து வீச்சு வரிசைக்குச் சிறிதும் குறைவில்லாமல் ரோகித், பட்டேல், ராயிடு, பட்லர், குருனல் பாண்டியா, ஹாட்டிக் பாண்டியா, பொலார்ட் என்றவாறான துடுப்பாட்ட வரிசையை வைத்துள்ளது மும்பை. ஒரே ஓட்டத்துடன் பார்திவ் பட்டேலை வீழ்த்தினார் உமேஸ் யாதேவ். ரோகித்துடன் இணைந்தார் ராயிடு. இணைப்பாட்டம் நிலைக்க பவுண்டரிகளுக்குப் பஞ்சம் இருக்கவில்லை. மேலதிக இலக்கை இழக்காமல் விரைவாக 50 ஓட்டங்களை எட்டியது மும்பை. 32 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் ராயிடு. வந்த வேகத்தில் திரும்பினார் குருனல் பாண்டியா. ஆனால் மறுமுனையில் ரோகித் தொடர்ந்தும் அச்சுறுத்திக் கொண்டிருந்தார். களத்தில் பொலார்ட், ரோகித். இறுதி 5 பந்துப் பரிமாற்றங்களில் 49 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலைமை. பொலார்டின் அரைச்சதம் வெறும் 17 பந்துகளில் பதிவாக 12 பந்துகள் மீதமிருக்க கொல்கத்தாவை வீழ்த்தியது மும்பை. (ம)

# கலையொளி அணியின் கரப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 29

கலையொளி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கலையொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 6.30 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை பிரதீப் அணி மோதியது. இதில் வளர்மதி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் நாயன்மார்க்கட்டு பாரதி அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதியது. இதில் மட்டுவில் மோகனதாஸ் அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் அணியை எதிர்த்து புத்தூர் தமிழ்மதி அணி மோதியது. இதில் அச்சுவேலி..கலைமகள்..அணி..2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# ஆஸியின் பயிற்றுநராக டொனால்ட் நியமனம்

இலங்கைக்குக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள ஆஸ்திரேலிய அணிக்கான பந்துவீச்சுப் பயிற்றுநராக, தென்னாபிரிக்காவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான அலன் டொனால்ட் நியமிக்கப்பட்டுள்ளார். ஆஸ்திரேலியாவின் பந்துவீச்சுப் பயிற்றுநராக இருந்த கிறெய்க் மக்டேர்மர்ட், ரி-20 உலகக்கிண்ணத் தொடரைத் தொடர்ந்து தனது பதவியிலிருந்து விலகிய நிலையிலேயே, அப்பதவிக்கு அலன் டொனால்ட் நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

# இமையாணன் மத்தியின் கரப்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஏப். 29

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக இருபிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டமும் இறுதியாட்டமும் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு குறித்த மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

6 வீரர்கள் பங்குபற்றும் தொடரில் இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் கோண்டாவில் துர்க்கா விளையாட்டுக் கழகமும் மந்திகை உபயகதிர்காமம் அணியும் மோதவுள்ளன. இரண்டாவது அரையிறுதியில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுவில் அம்பாள் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

4 வீரர்கள் பங்குபற்றும் அரையிறுதியாட்டங்களில் அரியாலை சனசமூக நிலைய அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும், மந்திகை உபயகதிர்காமம் அணியை எதிர்த்து உடுவில் அம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

# திக்கம் இளைஞர் கால்பந்தாட்டத்தின் சுப்பர் எட்டு சுற்று இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 29

பருத்தித்துறை கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் எட்டு சுற்று இன்று ஆரம்பமாகிறது. இதன்படி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தைஎதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டு கழகமும் மோதவுள்ளன. (ம-108-422)

# பிரதம தேர்வாளராக சனத்

இலங்கை அணியின் பிரதம தேர்வாளராக, அந்த அணியின் முன்னாள் தலைவரான சனத் ஜெயசூரிய நியமிக்கப்படுவதை இலங்கை கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.


எதிர்வரும் மே முதலாம் திகதி முதல் அவர் தனது பணியை மேற்கொள்ளப் போவதாக, இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால உறுதிப்படுத்தியுள்ளார். மற்றொரு முன்னாள் தலைவரான அரவிந்த டி சில்வா இலங்கை கிரிக்கெட் சபையில் கிரிக்கெட் விவகாரங்களுக்கான தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்காக நியமிக்கப்பட்ட அரவிந்த டி சில்வா தலைமையிலான தெரிவுக்குழுவின் பதவி, இந்த மாத இறுதியுடன் முடிவடையவுள்ளது. இதனையடுத்து தெரிவுக்குழுவின் பிரதம தேர்வாளராக சனத் ஜெயசூரிய நியமிக்கப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை கடந்த ஒரு மாத காலத்துக்கு முன்னரே தெரிவித்திருந்த போதிலும், விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவின் அனுமதி கிடைக்காததையடுத்து இந்த நியமனத்தில் தாமதம் ஏற்பட்டுவந்தது. ஆனால் தற்பொழுது தயாசிறி அனுமதி வழங்கியுள்ள நிலையில் அவர் பிரதம தேர்வாளராக நியமிக்கப்படுவது உறுதியாகியுள்ளது.

முன்னாள் இலக்குக் காப்பாளரான றொமேஸ் களுவிதாரண, முன்னாள் சுழற் பந்து வீச்சாளரான ரஞ்சித் மதுரசிங்க ஆகியோர், சனத் தலைமையிலான குழாமில் இடம் பெற்றுள்ளனர். இந்தக் குழாமின் பதவிக் காலம் தொடர்பாக இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால் 2019ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ணத் தொடர் வரை, இந்தக் குழுவின் நடவடிக்கைகள் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்னர், 2013 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2015 ஆம் ஆண்டு மார்ச் வரை, இலங்கையின் பிரதம தேர்வாளராக சனத் ஜெயசூரிய பதவி வகித்ததோடு, அந்தக்காலத்தில் ரி-20, உலகக் கிண்ணத்தைவென்றிருந்தது.

ஆனால், சிரேஷ்ட வீரர்களான மகேல ஜெயவர்த்தன, குமார் சங்கக்கார ஆகியோருடன் சிறந்த உறவைப் பேணியிருக்காத சனத் ஜெயசூரிய, அவர்களோடு பகிரங்கமாக வாய்த் தர்க்கங்களிலும் ஈடுபட்டிருந்தார். இது அவரது காலத்தில் காணப்பட்ட முக்கியமான குறைபாடாகக் கருதப்பட்டது. (ம)



# பிளாசிஸ் வெளியே புனேக்கு பின்னடைவு

கை விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஐ.பி.எல். தொடரின் ஏனைய ஆட்டங்களில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார் பிளாசிஸ்.

புனே, குஜராத் அணிகளுக்கு இடையிலான ஆட்டமொன்று இன்று நடைபெறவுள்ள நிலையில் குறித்த ஆட்டத்துக்காகப்பயிற்சியில் ஈடுபட்ட பொழுதே பிளாசிஸுக்குக் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து அவர் ஏனைய ஆட்டங்களில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். புனேயின் முன்னணி வீரரான பீற்றர்சனும் காயம் காரணமாக ஏற்கனவே விலகியிருந்த நிலையில் பிளாசிஸின் விலகலும் அந்த அணிக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது. (ம)

# இலங்கை டெஸ்ட் அணி நேற்று அறிவிக்கப்பட்டது

இங்கிலாந்துக்கு எதிரான தொடருக் கான இலங்கை டெஸ்ட் அணி அறி விக்கப்பட்டுள்ளது. 17 வீரர்கள் கொண்ட அணியாகவே அறிவிக்கப் பட்டுள்ளது.

இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செல்லும் இலங்கை அணி அங்கு 3 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடர் எதிர் வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள் ளது. பந்து தாக்கி தலையில் காயமடைந்த சில்வாவுக்கும் அணியில் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் விவரம்:- மத்தியூஸ் (அணித் தலைவர்), சந்திமல் (துணைத்தலைவர்), தசுன் சானக, தமிங்க பிரசாத், தனஞ்சய டி சில்வா, தில்ருவான் பெரேரா, திமுக் கருணாரட்ன, துஸ்மந்த சமீர, கௌசால் சில்வா, குசல் மெண்டிஸ், லகிரு திரிமன்னே, மிலிந்த சிறிவர்த்தன, நிரோசன் டிக்வெல்ல, நுவான் பிரதீப், ரங்கன கேரத், சமிந்த எரங்க, சுரங்க லக்மல். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 29

**நாமகள் வி.கழகத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சன சமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது.

**கலையொளி வி.கழகத் தொடர்**

கலையொளி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கலையொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ருவெல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் இரண்டா வது ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியா அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிறுப்பிட்டி கலையொளி அணியை எதிர்த்து வழக்கம்பரை அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**இமையாணன் மத்தியின் தொடர்**

வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று வெள்ளிக்கழமை மாலை 4 மணிக்கு குறித்த மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)



# நடால் குற்றம் அற்றவர் சம்மேளனம் அறிவிப்பு

தனது ஊக்கமருந்துச் சோதனைகள் அனைத்தினதும் முடிவுகளைப் பகிரங்கப்படுத்துமாறு, உலகின் முன்னணி வீரர்களில் ஒருவரான ரபேல் நடால் வேண்டுகோள் விடுத்ததையடுத்து, அவர் எந்தவொரு சோதனையிலும் தோல்வியடையவில்லை என சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸின் முன்னாள் அமைச்சரான ஹோஸ்லின் பச்சோ, நடால் 2012ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஊக்கமருந்தைப் பயன்படுத்தியதாகக் குற்றம் சுமத்தியிருந்தார். இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை குறித்த அமைச்சருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்த நடால், தான் குற்றமற்றவர் என்பதை உறுதிப்படுத்தும் விதமாக சர்வதேச ரென்னிஸ் சம்மேளனத்துக்கு ஓர் கடிதம் அனுப்பியிருந்தார்.


அந்தக் கடிதத்தில், தொடர்களின் போதும் தொடர்களில்லாத நேரங்களிலும் நான் எத்தனை தடவைகள் சோதிக்கப்பட்டேன் என்பதை நான் அறிவேன். என்னுடைய எல்லாத் தகவல்களையும் பகிரங்கப்படுத்துங்கள். என்னுடைய உயிரியல். கடவுச்சீட்டையும் ஊக்கமருந்துக் கட்டுப்பாடு, சோதனைகள் தொடர்பான முழுமையான விவரங்களையும் பகிரங்கமாக்குங்கள். ஏனெனில் என்னை நிரூபிக்க வேண்டிய தருணமிது என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், நடாலின் கடிதம் கிடைத்துள்ளமையை உறுதிப்படுத்திய சம்மேளனம், எந்தவொரு ஊக்க மருந்துச்சோதனையிலும் நடால் தோல்வியடையவில்லை என்பதை உறுதிப்படுத்துவதாகத் தெரிவித்துள்ளது. (ம)

# மலிங்கவுக்குப் பதில் றெய்லர்

நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் மும்பை அணியிலிருந்து மலிங்க விலகிய நிலையில், அவருக்குப் பதிலாக மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளரான றெய்லர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

முழங்காலில் ஏற்பட்ட காயம் குணமடையாத நிலையில், ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்தார் மலிங்க. இதனால் அவருக்குப் பதிலாக இன்னொரு வீரரரை தெரிவுசெய்ய மும்பைக்கு வாய்ப்புக்கள் இருந்து வந்தன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மும்பை நிர்வாகம் மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளரான றெய்லரை ஒப்பந்தம் செய்துள்ளது. (ம)



# கொலின்ஸ், இளைஞர், பொற்பதி அணிகள் இமையாணன் வி.க. தொடரில் முன்னேற்றம்

கரணவாய், ஏப். 29

இமையாணன் மத்திய வி.கழகம் நடத்திவந்த கால்பந்தாட்டத் தொடரில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம், இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம் மற்றும் யாழ். பொற்பதி விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் முன்னேறியுள்ளன.

**கொலின்ஸ்-சென்.பீற்றர்ஸ்**

யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டம் ஆரம்பித்து பத்து நிமிடங்கள் நிறைவதுக்குள் கொலின்ஸின் விஷ்ணு, முதல் கோலைப் பதிவுசெய்தார். அடுத்த சில நிமிடங்களுக்குள் கோகுலதீபனால் கொலின்ஸின் இரண்டாவது கோல் பதிவானது. இரண்டாம் பாதியில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாத நிலையில் 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது கொலின்ஸ்.

**இளைஞர் -ஒற்றுமை**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகமும் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகமும் மோதின. வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறுவதும் கோலாக மாற்றம் பெறாமல் முடிவடைவதுமாக ஓடி மறைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 8 ஆவது நிமிடத்தில் அபிநாஸும் 16 நமிடத்தில் நிதுசனும் இமையாணன் இளைஞர் சார்பாக கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்று வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதிபெற்றது இமையாணன் இளைஞர் அணி.


**பீற்றர்ஸ்-பொற்பதி**

இறுதியாக இடம்பெற்ற ஆட்டத்தில் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் யாழ். பொற்பதி விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. பலத்த போராட்டத்தின் பின் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியைப் பதிவு செய்தது யாழ். பொற்பதி அணி. (ம-108)

## ஐ.பி.எல். கிண்ணம்




# றியல் மட்றிட் – மன்செஸ்டர் சிற்றி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது



ஐரோப்பிய கால்பந்து சம்பியன்ஸ் லீக் தொடரில் றியல் மட்றிட், மன்செஸ்டர் சிற்றி அணிகள் மோதிய ஆட்டமொன்று சமநிலையில் முடிவடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், இரு அணி வீரர்களும் கோல்களை அடிக்க முடிந்த வரை முயற்சித்த போதிலும் இறுதி வரை அவர்களால் அணியை முன்னிலைப்படுத்த முடியவில்லை. இதனால் கோல்கள் எதுவும் பெறாமல் இந்த ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது. றியல் மட்றிட் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ இந்த ஆட்டத்திலும் காயம் காரணமாக விளையாடவில்லை. அத்துடன், ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்ததும் ரசிகர்களுக்கு ஏமாற்றமாக முடிந்தது. (ம)

# சில்வெஸ்ராரை வீழ்த்தியது சென். லூட்ஸ்

யாழ்ப்பாணம், ஏப். 29

நாமகள் விளையாட்டுக் கழகம் வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்த கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென்.லூட்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி சில்வெஸ்ரார் அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் அணி மோதியது. இதில் இளவாலை சென்.லூட்ஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# நேதாஜி சம்பியன்

கரணவாய், ஏப். 29

வல்வை உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்திய கடற்கரை கால்பந்தாட்டத் தொடரில் நேதாஜி அணி சம்பியனாகியுள்ளது.

உதயசூரியன் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. வல்வை இளங்கதிர் அணியும் வல்வை நேதாஜி அணியும் மோதின. இந்த ஆட்டத்தில் வல்வை நேதாஜி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Holy Family Convent, Jaffna.**
**Past Pupil's Association**
**Annual General Meeting, 2016**
**Postphonment of the Annual General Meeting, 2016**

This is to inform all members of the above association that the **Annual General Meeting**, which was to be held on the 30th of **April, 2016(Saturday) at 3.30 p.m.has been postponed due to unavoidable circumstances.**
We regret any inconvenience caused by this change
The date of the meeting will be notified to all members as soon as possible.

**Principal**
**J/Holy Family Convent**
**Jaffna.**

**Secretary**
**Past Pupils' Association**
**Holy Family Convent-Jaffna.**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகரை அண்டிய பகுதிகளில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.

**071 523 2232**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
01 . 09 . 1936



உதிர்வு
10 . 05 . 2015

அமரர்
திருமதி **செபமாலை சின்னத்தம்பி**

**திதி : 29.04.2016**

ஒற்றுமையைக் காட்டி வளர்த்த எங்கள் அன்புத் தாயே உங்கள் பசுமையான பாச நினைவுகள் எங்கள் இதயத்தில் என்றும் நிலைத்து நிற்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இருபாலை கிழக்கு நாச்சியம்மனை வேண்டி நிற்கும்

**குகன் இல்லம்**
**281, Kings Road,**
**Harrow, U.K**

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.**

## நீங்காத நினைவில் இரண்டாம் ஆண்டு

தோற்றம்
17 . 07 . 1929



மறைவு
21 . 04 . 2014

*அமரர் வைத்திய கலாநிதி*
## செல்லத்துரை இந்திரராசா

*திதி: சப்தமி (29.04.2016)*

**அன்பால் அரவணைக்கும் ஆருயிரே**
**பண்புடன் பார் போற்ற வைத்திய சேவை செய்தீரே**
**வானுலகம் சென்று ஆண்டுகளிரண்டு ஆனாலும்**
**காணொளியாய் எங்களில் கலந்திட்ட உறவே**
**உணர்வுகளில் உயிருடன் வாழுகின்றீரே**
**உறங்காத உங்கள் நினைவுகளுடன் வாழும்.....**

**" செல்வம் "**
**உரும்பிராய்.**

**மனைவி,**
**பிள்ளைகள் - மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள குபேட்டா 600 லான்ட் மாஸ்டர் பெட்டியுடன் விற்பனைக்குண்டு.

**தொடர்பு :077 811 8300**

## வேலையாள் தேவை

யூஸ் பைக்கற்றுக்களை பொதி செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. ஏற்ற ஊதியம் வழங்கப்படும்.

**077 758 7079 / 021 222 1155**

## Majestic
**Cineplex Jaffna**
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில் CEYLON THEATRES



மஜெஸ்டிக் ப்ளாட்டினம் / ப்ரொன்ஸ்
**10.00 / 1.00 / 4.00 / 7.00** Fri/Sat/Sun 9.30 p.m



சில்வர்
**10.00 / 1.00 / 4.00 / 7.00** Fri/Sat/Sun 9.30 p.m

மஜெஸ்டிக் ப்ளாட்டினம் THE JUNGLE BOOK 3D 4.00 p.m

தொழிலாளர் தினத்தன்று திரையரங்குகள் மூடப்படும்
**விசாரணை ☎ 021- 2227712**
facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

## அறிவித்தல்

**சுஜீவா வைத்தியசாலை மறு அறிவித்தல் வரை திறக்கப்பட மாட்டாது.**

Dr. **ஜெ.ஜெயலன்**

## METROH
**தொழிநுட்பக் கல்லூரி**
(பொருளியற் கல்லூரியின் இணை நிறுவனம்)
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

**தொழிநுட்பப் பிரிவு**
**A/L 2018**

பிரபல தொழிநுட்பக்கல்லூரி விரிவுரையாளர்களும் பிரபல பாடசாலை ஆசிரியர்களும் இணைந்து கற்பிக்கின்றார்கள்
**புதிய பிரிவு நாளை ஆரம்பம்**
சனி - 8.00 am
★ சகல பாடங்களும் முதல் அலகிலிருந்து கற்பிக்கப்படும்

Note: **A/L 2016, 2017 பிரிவுகள்**
சனி, ஞாயிறு நடைபெறுகின்றன
★ உங்கள் அனுமதிகளைப் பொருளியற் கல்லூரி வளாகத்தில் பெற்றுக்கொள்ளவும்

(அ-20090) (03.16)

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ்.றோட், இணுவில்

**A/L 2018**
**சனி, ஞாயிறு பிரிவு**
**கலை, வர்த்தகப் பிரிவு**
**புதிய பிரிவு**
இதுவரை அனுமதி பெறாதவர்கள் நாளையிலிருந்து பெற்றுக் கொள்ளவும்.
**சகல பாடங்களும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.**
Note:- எமது மற்ற நிறுவனமான BARATHY சித்தன்கேணியி லும் உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

(அ/80904) (11,18)

## மரண அறிவித்தல்

திருமதி **நாகேஸ்வரி தங்கராசா** (குணசிங்கம்)



மண்கும்பான் மேற்கு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான் கிழக்கு 4 ஆம்வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி தங்கராசா (குணசிங்கம்) நேற்று (28.04.2016) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகளும், தங்கராசாவின் பாசமிகு மனைவியும், சறோஜினிதேவி, சண்முகராசா, காலஞ்சென்ற மனோகரராசா மற்றும் அன்புனேஸ்வரி, கருணாதேவி, பராசலிங்கம், மோகனராசா, காலஞ்சென்ற நிர்மலாதேவி மற்றும் நந்தினிதேவி, ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற உருத்திரசிங்கம் மற்றும் யோகராணி, வசந்தராசா, படிகலிங்கம், காலஞ்சென்ற ஜெயகுமாரி மற்றும் சிவலட்சுமி, சுமதி, உதயகுமார் ஆகியோரின் மாமியும், துஸ்யந்தி, மேனகா, வாகீசன், செந்தீசன், டிலக்ஷா, சவீதன், திவ்யா, மனோஜா, மதுரா, மதன்ராஜ், கௌசிகா, காலஞ்சென்ற கபில்ராஜ் மற்றும் பவதாரகன், பவித்திரா, பிரியலக்ஷன், ஜெயலக்ஷன், மயூரி, கஸ்தூரி, சரண்ஜா, திவாஸ்கர், சச்சிதா, அனுஷ்கா, ஜீவராஜ், சசிராஜ், திஷாந்தினி, யூவராஜ், தட்ஷாஜினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற சந்தோஷி மற்றும் டினோஷி, பிரவீனாஷ், சுபகீதன், யாழிசை, கௌளி, அகிஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2016) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மண்கும்பான்**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 353 0171**

## வென்றது ஞானமுருகன்

யாழ்ப்பாணம்,ஏப்.29

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் ஞானமுருகன் அணி வெற்றி பெற்றுள்ளது.

நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல்3.45மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில்மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதிக் கொண்டது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## விசேட கருத்தரங்கு

**May 29இல் நடைபெறவுள்ள SLEAS விரைவில் நடைபெறவுள்ள SLAS**

பிரதி சனி,ஞாயிறு 9-4PM
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
மற்றும் துறைசார்ந்த விரிவுரையாளர்

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
★ சமூர்த்தி உத்தியோகத்தர்
★ கிராமசேவையாளர்
★ சட்டக்கல்லூரி அனுமதி

பிரதி சனி 2-5 PM
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்

**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
T.P: 0774696695

## விசேட கருத்தரங்கு

May 28,29 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கும் SLEAS திறந்த பரீட்சைக்கு சனி, ஞாயிறு காலை 9 - 3 வரை ஆரம்பம் 30.04.2016 சனி காலை 9.00

SLAS, SLEAS G.S சமூர்த்தி Law College, Teaching, Custom, Cultural Officer வகுப்புகளும் நடைபெறுகின்றன.

**01.05.2016 ஞாயிறு வகுப்பு மாத்திரம் நடைபெறமாட்டாது.**

தொடர்பு:
**0766883394/0212223382**
**யாழ்ப்பாண கல்லூரி**
பட்டப்படிப்புக்கள் பிரிவு
464, ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக்கருகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.